மா.சு. சம்பந்தன்



எழுத்தும் அச்சும்

எழுத்தும் அச்சும்

மா.சு. சம்பந்தன்

காமராஜ் பதிப்பகம்
1, கந்தப்பன் தெரு (மாடி)
சென்னை - 600 001

உரிமை ஆசிரியருக்கே

முதற் பதிப்பு : அக்டோபர் 1999

பக்கம் 4 + 80 + 28

விலை ரூ 25/-

வெளிநாடு U.S. 5 டாலர்

ஒளி அச்சு : வள்ளுவர் கணினி மையம்
சென்னை - 600 001

மறுதோன்றி
அச்சு : உதயம் அச்சகம்
சென்னை

பதிப்பகத்தார் உரை

இந் நூலாசிரியரான திரு. மா.சு. சம்பந்தன் அவர்கள் சென்னை மாநாகரில் 25-5-1923ல் பிறந்தவர். சென்னை முத்தியாலுப் பேட்டை உயர்நிலைப் பள்ளியிலும், பச்சையப்பர் கல்லூரியிலும் பயின்றவர். இளமை முதல் தமிழ்ப் பற்றும் நாட்டுப் பற்றும் கொண்டவர்.

இவர் 'தொடர்பன்' எனும் தமது புனைப் பெயரில் 1947-ல் எழுதிய 'சிறந்த பேச்சாளர்கள்' எனும் நூல், இவரது கன்னி முயற்சியாக இருந்தும், மேடைத் தமிழின் முதல் நூல்ாகவும் அறிஞர்கள் இதழாசிரியர்கள் ஆகிய அனைவரின் பாராட்டையும் பெற்றுச் சிறப்படைந்தது. அடுத்து இவர் 1949-ல் நாடறிந்த நாவலரான கி.ஆ.பெ. விசுவநாதத்தின் வாழ்க்கை வரலாற்றைத் 'திருச்சி விசுவநாதம்' என்ற தலைப்பில் எழுதித் தந்தார். தமிழில் வாழ்க்கை வரலாற்று நூல்களிலே இந்நூல் தனிப் பெருமை பெற்று இரண்டு பதிப்புகள் வெளியாகி யுள்ளன. சென்னை மாநகரின் வரலாற்றை இவர் 'சென்னை மாநகர்' என்ற பெயரில், இந்நகர் தொடங்கிய கால முதல் இன்று வரை அதன் வளர்ச்சியையும் அது பெற்றுள்ள எல்லாச் சிறப்புகளையும் விவரமாக எழுதிக் கொடுத்தார். இதன் முதல் பதிப்பு 1949-லும் இரண்டாம் பதிப்பு 1978-லும் வெளியிடப்பட்டுள்ளன.

1959-ல் இவர் 'அச்சுக்கலை' என்னும் அழகிய நூலைப் படைத்துத் தந்தார். இதுவும் அச்சுத்துறை பற்றி முதன் முதலாகத் தமிழில் வெளிவந்த நூல். இது தமிழக அரசின் முதற் பரிசைப் பெற்றது. இதன் இரண்டாம் பதிப்பு 1976-ல் வெளிவந்துள்ளது. அதன்பின் மறுபதிப்பு வரவில்லை. எனவே அதன் பயன் கருதி எங்கள் முதற் பதிப்பாக 1998ல் வெளியிட்டோம்.

''அச்சும் பதிப்பும்'' என்னும் பெயருள்ள அரிய பெரிய நூலை இவர் 1980-ல் மிகவும் பெருமிதத்துடன் எழுதித் தந்துள்ளார். இது தமிழில் அச்சு தோன்றிய வரலாற்றையும், அச்சகங்கள், பதிப்பகங்கள், பதிப்பாளர்கள், தமிழுக்கு ஏற்றம் தந்தப் பெரியோர்கள் ஆகிய விவரங்களை விரிவாகத் தருகின்றது. இந்நூலை தமிழ் அறிஞர்களும் பல துறை அறிஞர்களும் மகிழ்ந்து பாராட்டி வரவேற்றுள்ளார்கள். எனினும், இந்நூல் பெரிய அளவினதாகவும், எளிய மக்களால் உடனே வாங்கிப் படிக்க முடியாததாகவும் இருக்கிறது. இதனை உணர்ந்த அவர் 'அச்சுக்கலை'யும், 'அச்சும் பதிப்பும்' பற்றி எளியவரும் விரும்பி வாங்கிப் படிக்கும் வகையில் சுருக்கமாகவும் அதே சமயத்தில் எல்லாத் தகவல்களையும் கொடுக்கக் கூடியதாகவும் ஒரு நூலை அவர் தயாரித்துக் கொடுத்ததே இந் நூலாகும்.

இதனை அவர் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெறுகின்ற வேளையிலே வெளியிட்டார். மறுபதிப்பு 1981 க்குப் பின் வரவில்லை. எனவே எங்கள் பதிப்பகத்தின் முதற் பதிப்பாக இதனை இப்போது 18 ஆண்டுகளுக்குப் பின் வெளியிடுகிறோம்.

ஆசிரியர் எழுதியுள்ள நூல்களைத் தமிழ் மக்கள் வாங்கிப் படித்து எங்களை இத்துறையில் பல நூல்களை வெளியிட ஊக்குவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

காமராஜ் பதிப்பகம்

19-10-1999
சென்னை - 1.

எழுத்தும் அச்சும்

தென்னகப் பழமை

நாம் வாழும் இப்பூவுலகம், பல கோடி ஆண்டுகளுக்கு முன்பு செஞ்ஞாயிற்றிடமிருந்து தெறித்து விழுந்த ஒரு துண்டாகும். இது முதலில் அனற்பிழம்பாய் எரிந்தும் கொதித்தும் கனலை உமிழ்ந்தும் சுமார் ஒரு நூறு கோடி ஆண்டுகளாய்க் கிடந்தது. இதற்குப்பின் ஒரு கோடி ஆண்டு வரை வெப்பம் தணிந்து தணிந்து கூழாகக் கிடந்தது. குளிர்ந்த நீரால் இறுகத் தொடங்கியது. இறுகி இறுகி மலைகள் தோன்றின. கடல்களும் தோன்றின. இம் மலைகளிலும் கடல்களிலுந்தான் முதன்முதலில் நுண்ணுயிர்கள் உண்டாயின. அவ்வுயிர்கள் பிறகு ஓரறிவு முதல் ஆறறிவு வரை வளர்ந்தன. ஆறாவது அறிவாகிய பகுத்தறிவுடன் மனமும் சேர்ந்து மனிதன் தோன்றினான்.

மேற் சொன்ன முறையில் இவ்வுலகில் முதன்முதலில் சூடு குறைந்து இறுகிய பகுதி தென்னிந்தியாவை (நாவலம்) உள்ளடக்கியிருந்த 'லெமூரியா' கண்டந்தான். ஏனெனில் அன்றைய தென்னிந்தியா (லெமூரியா) நில நடுக்கோட்டிற்கு (Equator) அருகில் இருந்தது. இன்றுள்ள ஆஸ்திரேலியாவும் ஆப்பிரிக்காவும் அன்று லெமூரியாக் கண்டத்துள் அடங்கியிருந்தன. இன்று இந்தியாவின் வடக்கு எல்லையாக இருக்கும் இமயமலை, அன்று கடலுக்கு அடியில் இருந்தது. மேற்குத் தொடர்ச்சி மலையும் கிழக்குத் தொடர்ச்சி மலையுமே அன்று நிலவிய பெரிய மலைகள் ஆகும்.

உயிர் வகைகள் படிப்படியாக பரிணாமப்படி உள்ளது சிறந்து விளங்கின. குரங்குக்கு அடுத்த படியான அறிவும் செயல்திறமும் மிக்க லெமுர் என்னும் காட்டு மாந்தனிட மிருந்து மனிதன் தோன்றினான். அவன் பேசிய மொழியே உலகத்தின் மிகப் பழமையான பண்டைத் தமிழ் மொழி யாகும். இந்த லெமூரியாக் கண்டத்தின் ஒரு பகுதியான குமரிக்கண்டத்தின் உலக நாகரித்தில் தொட்டிலாகக் கருதப்படுகிறது. இதனை இலக்கியங்கள் நாவலந் தீவு என்கின்றன.

இக் கூற்றுகளுக்கு, உயரத்தால் குறுகியவாய் இருந் தும் காலத்தால் மிகப் பழமையான கருங்கற் பாறைக ளைக் கொண்ட கிழக்கு மேற்கு மலைத் தொடர்களும், தென்னிந்தியாவில் கிடைத்த மிகத் தொன்மையான காட்டு மனிதனின் எலும்புக் கூடுகளும், தக்க சான்றுகள் ஆகின்றன. இமயமலை கடலடியில் இருந்த நீர் வாசத் தைக் குறிக்கும் கடற்பொருள்களின் எச்சங்களும் பெரும் சான்றளிக்கின்றன. பழமை வாய்ந்த தமிழ் மொழியில் உ ள வேர்ச் சொற்கள் உலகத்து மொழிகள் யாவற்றிலும் ணப்படும் தன்மையும் மறுக்க இயலாத சான்றுகளாக இருக்கின்றன.[1]

முதல் தேவைகள்

மாந்தன் தொடக்கத்தில் விலங்குகளுடன் விலங்கு போல் வாழ்க்கை நடத்திவந்தான். மலைப் பிளவுகளிலும்

1. The Tamils themselves or their historians, to be more exact, believed that in the remote past the Tamil home land was situated in the southern part of Nawalam, a large island that was one of the first land masses to rise near the Equator and that Lemuria, a lost continent considered to be the cradle of civilization, was part of the same region" - Alexander Kondrato's "The Riddles of the Three Oceans" published by progress publishers, Moscow in 1974. page 122.

"The modern South India is usually a blend of Mediterranean and proto-Australoid, the two chief ethnic factors in the Harappa culture" - see Prof. A.L. Basham's "The wonder that was India."

"I would include all that country in south India which is geologically the oldest part in India and to the world" says Mr.H.D. Sankalia.

மரப் பொந்துகளிலேயும் அவன் வாழ்ந்து வந்தான். அன்று அவன் பிறந்த மேனியாக வெயிலில் காய்ந்து, மழையில் நனைந்து கிடந்தான். தட்ப வெப்பத்திலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள நிலையான வழிகளை அறியாமல் இலை தழைகளையே பயன்படுத்தினான். பசியெடுத்த போது இயற்கையில் கிடைத்த காய் கனிகளை உண்டான். சில வேளைகளில் விலங்கினைக் கொன்று பச்சை இறைச்சியையும் உண்டு, தண்ணீர் குடித்துப் பசியாறினான். நெருப்பு மூட்ட அன்று அறியாதிருந்தான். காலம் உருண்டோடியது. பசியோடு அறிவும் வளர்ந்தது. உணர்ச்சிகளும் பெருகின. ஆதி மனிதனின் ஆற்றலும் மிகுந்தது. இயற்கையின் போக்கையும் அதன் நெறிமுறைகளையும் கண்டே படிப்படியாக அறிவு பெறலானான்.

கருத்து வளர்ச்சி

தான் கண்டதையும், தனக்குத் தேவையானவற்றையும் தன்னையொத்த மாந்தருக்கு அவன் தெரிவிக்க வேண்டும் என்ற உந்துதல் ஏற்பட்டது. அவ்வுந்துதல் விளை. ாக அவனது கருத்தில் பட்டவற்றை முதலில் சைகையா, ம், அடுத்து மெல்ல மெல்ல காட்டுக் கூச்சல் ஒலியெழுபபிக் கூக்குரலிட்டும் புலப்படுத்த முற்பட்டான். பின்னர் சைகையாலும் கூக்குரலாலும் ஏற்பட்ட பட்டறிவால், தான் பார்த்ததையும் உணர்ந்ததையும் தான் வாழ்ந்த குகைக்குள் கரட்டுப் படமாக - கருத்துப் படமாகச் சித்தரிக்கத் தொடங்கினான். இவ்வகையான கருத்துப் படங்களே முற்கால மனிதரின் எண்ணத்தை இன்று நாம் தெரிந்து கொள்ள உதவியாக உள்ளன. சொல்லப் போனால் அவையே அவன் படைத்த ஆதி எழுத்துக்களான - சித்திர எழுத்துக்களாகும்.

அடுத்து, அவன் தான் கண்டதைக் களிமண்ணில் உருவாக்கியும், கல்லில் செதுக்கியும் உருவங்களைப் படைக்க முயன்றான். இக் கருத்துருவங்களில், தான் ஒலித்துப்

பழக்கப்பட்ட ஒலி தரும் உருவங்களையும் குறிப்பாகப் புலப்படுத்த விழைந்தான். இக் குறிப்பு ஒலிகளும். ஒன்றைக் கேட்டு எதிரொலிக்கும் போலி ஒலிகளும் அவனது கருத்தைத் தெரிவிக்கும் அசையாக - சொற்களாக - மொழியாக - நாளடைவில் வளர்ச்சி பெற்றன.

உலகெங்கும் காணப்படும் - பண்டைகால மனிதர்கள் குறித்து வைத்துச் சென்றுள்ள குகை ஓவியங்களும், மொகஞ்சதாரோ போன்ற பண்டை நாகரிக நகரங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ள சின்னங்களும், குறியீடுகளும், அவர்கள் பயன்படுத்திய கருவிகளும், நமக்குப் பண்டைய மக்களின் கருத்துருவ மெய்ப்பாடுகளை அறியும் சாதனமாக அமைந்து விளங்குகின்றன.

வளர்ச்சியுற்ற மனிதன் தனது எண்ணத்தையும் கருத்தையும் மரப்பட்டையிலும், ஓலையிலும், தோலிலும், கல்லிலும், துணியிலும் பதிக்கலானான். இவற்றில் அக்கால மனிதன் பதித்துள்ள சுவடுகளை - இன்று நாம் அக்காலக் கருத்து உருவங்களையும், படங்களையும் கொண்டு - அக்காலக் கருத்து வெளிப்பாடுகளைப் புரிந்துகொள்ள முனைகிறோம். அவையே நமக்குப் பெரிதும் துணை செய்யும் கருவிகளாகவும் அமைந்து காணப்படுகின்றன.

பொதுவாக, மனிதன் தோற்றுவித்த மொழிகளின் வளர்ச்சியில் உணர்ச்சி வடிவம், ஒலிவடிவம், வரி வடிவம் அல்லது எழுத்து வடிவம் என்னும் நான்கு வகைகளைக் காணலாம். இந் நால்வகை வடிவமும் மனித நாகரிகத்தின் தன்மைக்கு ஏற்ப திரிந்து வளர்ந்து வந்திருக்கின்றன.

இந்தியாவிலேயே தமிழ் மொழி ஒன்றில்தான், மொழி மாறுதல் அடைந்து வந்துள்ள மேற்கூறிய நிலைகளைப் பற்றி இலக்கண நூல்களில் தெளிவாக விளக்கிக் கூறப்பட்டுள்ளன!

''பெயரெழுத்து, முடிவெழுத்து, வடிவெழுத்துத் தன்மையெழுத்தென எழுத்தின் பெயரியம்பினரே'' என்கிறது திவாகர நிகண்டு. ''வடிவு[1] பெயர் தன்மை முடிவு நான்கெழுத்தே'' என்கிறது பிங்கல நிகண்டு. ''**பெயரெழுத்**தென்பன, சீனர் போல் ஒவ்வொரு பெயரை உணர்த்துவதற்கும் இட்டும் வழங்கும் சங்கேதக் குறிகள். **தன்மையெழுத்**தென்பன குணங்கள் சக்திகள் முதலியவற்றைக் குறித்தற்கு வழங்கிய அடையாளங்கள். **முடிவெழுத்**தென்பன வினை நிகழ்ச்சிகளைக் குறிக்க வழங்கிய அறிகுறிகள்'' என்று பேராசிரியர் தி. செல்வக் கேசவராய முதலியார், எம். ஏ. அவர்கள் தமது 'பஞ்சலட்சணம்' (1903) எனும் நூலின் 17 ஆம் பக்கத்தில் விளக்கப்படுத்தியுள்ளார்.

ஒலி எழுத்து என்பது சித்திரமும் அல்ல; கருத்தைக் குறிப்பதும் அல்ல; ஓர் உருவைக் குறிக்கும் ஒலி என்று தற்காலத் தொல்லெழுத்து வல்லுநர் (Paleographers) கூறுவர். இது போன்ற அரியதொரு கருத்தைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே நச்சினார்க்கினியர் தமது தொல்காப்பியப் பாயிர உரையில் ''எழுத்தென்றது யாதனை யெனின் கட்புலனாகிய வடிவமுடைத்தாக வேறு வேறு வகுத்துக்கொண்டு தன்னையே உணர்த்தியுஞ் சொற்கு இயைந்தும் நிற்கும் ஓசையாம்'' என்று குறித்துள்ளார். இதனைத் தமிழ்நாடு தொல்பொருள்துறை முன்னாள் இயக்குநர் திரு. நாகசாமி அவர்கள் தமது 'கல்வெட்டியல்' (1972) எனும் நூலின் 17 ஆம் பக்கத்தில் மேற்கோளாக எடுத்துக்காட்டி வியக்கின்றார் என்பதை இங்குக் குறிக்க வேண்டியுள்ளது.

---

1. வடிவு எழுத்துகள் = சித்திர எழுத்துகள் இவற்றிலும் பல படிமானங்கள் இருந்தன. (1) முழுச் சித்திரத்தை அப்படியே வரைவது. (2) முழு வடிவத்தை எழுதாமல் அரைகுறை சித்திரமாக எழுதுவது. (3) அரைகுறை சித்திரம் வெறும் அடையாள வடிவங்களாக - குறியீடுகளாக மாறுவது. (4)அரைகுறைச் சத்திரங்களும் இடையிடையே ஒலிப்புக் குறியீடுகளும் கலந்து வருவது.

எழுத்தும் அச்சும்

மக்கள்தொகை பெருகியில்லாதிருந்தபோது அவர் களுக்கு வேண்டி இருந்த தேவைப் பொருள்களும் மிகக் குறைந்த அளவிலே வேண்டியிருந்தன. மக்கள்தொகை பெருக முற்பட்டவுடன் அதற்குத்தக தேவைகளும் அதிக ரித்தன. பொருள்களும் பெரிய அளவில் தேவைப்பட் டன. உணவு. உடை, இடம், களியாட்டம், அறிவின் பெருக்கம் ஆகியனவும் உடன் அதிரித்தன. ஆகவே, ஒருவர் அறிந்து கொண்டிருந்ததைப் பலர் அறிந்துகொள்ள வேண்டிய அகத்தியம் ஏற்பட்டது. ஒருவரிடமிருந்த ஓலைச் சுவடியைப் பார்த்துப் பலர் படிகள் எடுக்க வேண்டியதாயிற்று. இப்படி எழுதுவதற்கும் படிப்பதற் கும் உரிய சாதனங்கள் எளிதானதாகவும் விரைவாகத் தயாரிக்கக் கூடியதாகவும் உள்ள புதிய ஏற்பாட்டைக் காண வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

ஒரு நாட்டில் அச்சடிப்பு முறை ஏற்படுவதற்கு அடிப் படையாக உள்ளவை பலவாகும். அந்நாட்டிற்குரிய மொழி உருவாகி இருக்கவேண்டும். அதற்குரிய எழுத்துக் குறியீடு ஏற்பட்டிருக்கவேண்டும். தமக்குரிய எழுத்துக் குறியீடுகளை அந்நாட்டு மக்கள் தெரிந்து கொண்டு நன்றாகப் பயன்படுத்தி வர வேண்டும். இதனை அவர்கள் ஓலையிலோ, துணியிலோ, பானையிலோ, முத்திரை யிலோ பதித்துப் பயன்பாட்டுக்குக் கொண்டு வந்திருக்க வேண்டும். கல்வி அறிவு பெருகி வளர வளர, மொழி யையும் எழுத்தையும் விரைவில் அறிந்து கொள்ளக்கூடிய அளவிற்கும், அப்படி அறிந்து கொண்டதை என்றும் பேணிக் காக்கத்தக்க அளவில் அவற்றைப் பதித்துப் பொறித்துக் கொள்ள வேண்டியவர்களாகவும் அந்நாட்டி னர் மாறவேண்டும். எழுத்து, சொற்கள் போன்றனவற் றைக் கட்டுப்படுத்த இலக்கணமும் தேவை என்ற நிலை ஏற்பட்டது.

உலகில் பல நாட்டு வரலாறுகளை அறியும்போது. சில சுவையான தகவல்கள் கிடைக்கின்றன. அவற்றை ஒவ்வொன்றாகத் தெரிந்துகொள்வோம்.

எழுது பொருள்கள்

கி.மு. 2000 ஆண்டுகளுக்கு முன்பே எகிப்தியர் நைல் ஆற்றங்கரையில் வளரும் 'பாண்டிக்குரம்[1]' என்னும் ஒரு வகையான கோரைப்புல்லில் இருந்த படலம் படலமாகப் பிரித்து ஒட்டிப் பதப்படுத்திய தாளில் (இதற்குத் தான் பேபைரஸ் என்று பெயர்) தடித்து கூர்மையான நாணற் குச்சிகளை எழுதுகோலாகவும், கொடிகளின் சாற்றையும் மிருகத்தின் இரத்தத்தையும் மையாகவும் கொண்டு எழுதி வந்தனர். பாபிலோனியர் களிமண் பலகையில் தமது எழுத்தைப் பொறித்து பின் அவற்றை நெருப்பில் இட்டுச் சுட்டு நிலையான ஓடுகளாக்கி வந்தனர். சீனர் மூங்கிற் பத்தைகளின் மேல் கூரான கருவி கொண்டு தமது கருத்தைப் பதிந்து வந்தனர். அவர்கள் பட்டுத் துணியிலும் தூரிகையினால் எழுதி வந்தனர். இந்தியர் மரப் பட்டை யிலும் ஓலையிலும் வரைந்து வந்தனர். இவர்கள் சிறுபான்மையாக எருக்க இலை, ஆலிலை தாமரையிலை போன்றவற்றிலும் எழுதி வந்துள்ளனர் என்று தெரிகிறது. தமிழர் பனையோலைகளைத் துண்டித்துச் சீர்படுத்தி, கூரிய எழுத்தாணி கொண்டு எழுதிச் சுவடிகளாக்கினர்; கற்பாறைகளில் தமது கருத்தைச் செதுக்கி வைத்தனர்; செப்புத் தகட்டில் தமது விருப்பங்களைப் பொறித்து வந்தனர். அராபியர் தோற்பட்டை எலும்பு, பேரீச்சமர ஓலைகள், மாவுக் கற்கள், தோல் துண்டுகள் ஆகியவற்றில் எழுதி வந்துள்ளனர்.

மாந்தருக்கு எழுது கருவிகள் கிடைத்தும், தங்கள் மனத்தில் ஊரும் எண்ணத்தைச் செய்தி வடிவாகப் பிறர்க் குத் தெரிவிக்க வேண்டும் என்ற அவா மேலிட்டது. அவர்

1. பாப்பிரஸ்

கள் செய்திகளை - ஒலிகள் மூலமாகவும், தீயம்புகளை ஆகாயத்தில் எய்வதன் மூலமாகவும், குதிரைகளையும் புறாக்களையும் துணையாகக் கொண்டும் தெரிவித்து வந்த னர். இதன் பின்னர் அரசர்கள் தங்களது அறிக்கைகளையும் கட்டளைகளையும் ஓலையிலோ, தோலிலோ, துணி யிலோ, பிறவற்றிலோ குறிக்கச் செய்து, தம் குடிமக்க ளுக்கு அறிவித்து வந்தனர். காதலர்கள் தமது அன்பைப் பல வழிகளில் புலப்படுத்தியுள்ளனர். சான்றாக, மாதவி பிரிந்து சென்ற தனது காதலன் கோவலனுக்குத் தாழம்பூ வின் தோட்டில், பித்திகையின் முகையாகிய எழுத்தாணி யால் செம்பஞ்சுக் குழம்பில் தோய்த்து, மடல் வரைந்து, முத்திரையிட்டு, வசந்த மாலையிடமும் மாடலனிடமும் கொடுத்தனுப்பினாள் என்று 'சிலப்பதிகாரம்' சுட்டிக் காட்டுகிறது. சகுந்தலை, தாமரை இலையின் பின்புறத் தில் நகத்தால் கீறித் தனது காதல் உணர்ச்சியினைத் துஷ்யந் தனுக்குப் புலப்படுத்தினாள் என்று 'சாகுந்தலம்' கூறுகின் றது. இவை பழங்காலத்தில் மக்கள் எப்படியெல்லாம் தங்கள் கருத்தை வெளிப்படுத்தினார்கள் என்பதற்கு ஒரு சில எடுத்துக் காட்டுகளாகும்.

இதன் பின்னர் செய்திப் போக்குவரத்துக்காகத் தகவல் களை எடுத்துப் போகத் தனி ஆட்கள் நியமிக்கப்பட்டனர். செய்திகள் விரைவில் அழிந்து போகாமலும், நெடுநாள் நிலைக்கவும், எளிதாகக் கொண்டு செல்லவும் வேண்டி, புதிய முறையில் எழுதி அனுப்ப வேண்டிய அவசியம் உண்டாயிற்று.

பேபைரஸ்

எழுதுவதற்கு எளிதாகக் காகிதம் கண்டு பிடிப்பதற்கு முன்னர் ஐரோப்பாவில் 'பேபைரஸ்' படலமே எழுது தாளாகப் பயன்பட்டு வந்தது. இப் பேபைரஸ், கோரைப் புல்லை அறுத்துப் பட்டை உரித்து, ஒரே அளவாக நறுக்கிப் பதப்படுத்தி, வெயிலில் உலர்த்தி, 'பேபைரஸ்'

தாள்களை ஒன்றோடொன்று ஒட்டிச் சேர்த்து, நீண்ட சுருணைகளாகச் செய்வர். பெரிய சுருணையில் இருபது தாள்கள் ஒட்டப்பட்டிருக்கும்.

நாணற் குழாய்களைச் சுமார் ஆறு அங்குல நீளமுள்ள துண்டுகளாக வெட்டி, அதன் முனையைக் கூர்மையாகச் சீவி, கூரின் நடுவைச் சிறிது பிளந்து எழுது கருவியாக எகிப்தியர் அமைத்தனர். எழுதுவோர் ஓர் இடத்தில் அமர்ந்து 'பேபைரஸ்' சுருணையை வலப்பக்கம் வைத்துக் கொண்டு இடக்கையினால் பிரிக்கப்பட்ட தாளைப் பிடித் துக்கொள்வார்கள். விரித்த தாள் மடியில் படிந்திருக்கும். அதன்மேல் வலக் கையினால் விரிந்த பகுதியல் நாணற் 'பேனா'வினால் மை தொட்டு எழுதுவார்கள். ஒரு பத்தி எழுதியானவுடன் எழுதப்பட்ட பகுதியை இடக் கையி னால் சுருட்டிப் பிடித்துக் கொண்டு மறு பத்தியை எழுதியானவுடன் நன்றாகச் சுருட்டிக் கயிற்றினால் கட்டி வைப்பார்கள்.

எகிப்து நாட்டுக்கு அண்மையிலிருந்த கிரேக்கரும். பினீஷியரும், உரோமரும், எபிரேயரும், அர்மீனியரும், அராபியரும் மேற்சொன்ன எகிப்தியர் வழங்கிய 'பேபை ரஸ்' தாள்களையே பிற்காலத்தில் தமது எழுதுபொருள் களாகக் கொண்டனர். இப் 'பேபைரஸ்' தாளைப் பாலஸ் தீனர்கள் கி.மு. ஆறாம் நூற்றாண்டிலும். கிரேக்கர்கள் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலும், உரோமர்கள் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலும் பெரிதும் பயன்படுத்தினர். இந் நாடுகளில் கி.பி. ஏழாம் நூற்றாண்டு வரை 'பேபைரஸ்' தாளில் எழுதும் பழக்கம் நீடித்திருந்தது. இப் 'பேபைரஸ்' என்பதிலிருந்து தான் பேப்பர் (paper) என்னும் சொல் உருவாயிற்று!

கோடக்ஸ்

பண்டைக்காலத்தில் உரோமர்கள் சிறு சிறு துண்டு களாக அறுக்கப்பட்ட மெல்லிய சிறு பலகைகளை நன்

றாக இழைத்து அதன்மேல் மெழுகைப் பூசி, அதில் கூரிய ஆணியால் எழுதுவது வழக்கம். இவ்வாறு அமைக்கப் பட்ட பலகைகளைக் 'கோடக்ஸ்' (Codex) என்று வழங்கி னர். பின்னர் இச் சொல்லே புத்தக வடிவில் அமைக்கப் பட்ட சுவடிகளுக்கும் உரிய பெயராக வழங்கி வர லாயிற்று.

கிரேக்க நாட்டினர் மேலே சொல்லப்பட்ட 'பேபை ரஸ்' சுருணைகளை பிப்லியன் (Biblion) என்று தமது கிரேக்க மொழியில் வழங்கினர். 'பிப்லியன்' என்னும் சொல்லுக்குச் சுவடி (புத்தகம்) என்பது பொருளாகும். உரோமர்கள் இதனைத் தமது இலத்தீன் மொழியில் பைபிள் என்று வழங்கினர். இந்த 'பைபிள்' என்னும் சொல் முதலில் சுவடியைக் குறித்து, பின்னர் இதுவே கிறிஸ்தவ விவிலிய நூலைச் சுட்டியது. இப்போது விவிலி யத்துக்குப் 'பைபிள்' என்றே பெயர் நிலைத்துவிட்டது.

தோல்

எகிப்து தவிர ஏனைய மத்தியதரைக் கடல் ஓரத்தி லுள்ள நாடுகளில் தொன்றுதொட்டுத் தோலை எழுது பொருளாகக் கையாண்டு வந்தனர். இதற்கு அடுத்தபடி யாக அங்கெல்லாம் 'பேபைரஸ்' தாள் பயன்படுத்தப்பட் டது. விரைவில் 'பேபைரஸ்' கெட்டுப்போவதைக் கண்ட அந் நாட்டினர் மீண்டும் தோலையே எழுதுபொருளாக மேற்கொள்ளலாயினர். எகிப்திலுங் கூடத் தோல் எழுதும் பொருளாகப் பிற்காலத்தில் பயன்படுத்தப்பட்டது.

சாதாரண மிருகங்களைக் காட்டிலும் வெள்ளாடு அல்லது செம்மறியாட்டின் தோலை நன்கு பதப்படுத்தி, எழுதும் பொருளாகப் பயன்படுத்தத் தொடங்கினர். இது நேர்த்தியான எழுதுபொருளாகவும், இருபுறத்திலும் எழுதக் கூடியதாகவும் இருந்தது. இதற்கு 'மெம்பரேனா' (Membarane) என்று பெயர்.

ஆட்டுத் தோலை விட மிகவும் நேர்த்தியான எழுது பொருளாகப் பயன்பட்டது கன்றுக் குட்டியின் தோலே ஆகும். இது 'வெல்லம்' (Vellum) என்றும், பிற்காலத்தில் 'வெல்லம் பேப்பர்' (Vellum paper) என்றும் சொல்லப்பட்டது. தோலினால் செய்யப்பட்ட எழுது பொருள்களுக்கெல்லாம் 'பெர்கமேனோ' (pergamena) என்று வேறொரு பொதுப்பெயரும் உண்டு.

இத் தோற்பொருள், எழுது கருவியாகக் கி.மு. முதல் நூற்றாண்டிலிருந்து மெல்ல மெல்ல நடைமுறைக்கு வந்தது. இதே சமயத்தில் 'பேபைரஸூம்' பயன்படுத்தப் பட்டது நாளடைவில் தோற்பொருள்களே எழுத அதிக மாகப் பயன்படுத்தப்பட்டன. கி.பி. நான்காம் நூற்றாண்டில் தோலாலான எழுதுபொருள்கள் சிறப்பிடம் பெற்றன.

எகிப்தியர் முதலிய இனத்தவர் 'பேபைரஸ்' தாளையும் விலங்குகளின் தோல்களையும் எழுதுபொருளாக வழங்கி வந்த பண்டைக்காலத்தில், தமிழ்நாடு, இலங்கை, பர்மா, வட இந்தியா முதலிய இடங்களில் ஓலைச்சுவடிகளே பெரும்பாலும் வழக்கில் இருந்தன.

ஓலைச்சுவடிகள்

பனையோலைகளை ஒரே அளவாக நறுக்கி, வேக வைத்து, உலர்த்தி ஒன்றாகச் சேர்த்து, இரண்டு மரச் சட்டங்களை இரு பக்கங்களிலும் நீண்ட பக்கமாக அமைத்து, அவற்றின் ஊடே இரண்டு துளைகளை இட்டு அமைத்து, கயிறு கொண்டு சுற்றிக் கட்டிய சுவடிகளே ஓலைச் சுவடிகளாகும்.

இப் பனையோலைச் சுவடிகளில் ஏடுகளை இடக் கையில் பிடித்துக்கொண்டு, இரும்பாலான கூரான எழுத்தாணியை வலக்கைப் பெருவிரலால் அணைத்துப் பிடித்துக்கொண்டு, இடக் கையின் பெரு விரல் நகத்தின்

மையத்தில் சிறு பிறை வடிவாகப் பள்ளம் செய்து கொண்டு, வரிவரியாக வரையத் தொடங்குவார்கள். ஓலையின் மேல் வைத்த இடத்திலிருந்தே எழுத்தாணி கீறிக்கொண்டே வரும். ஓலை மட்டும் இடக்கைப் பக்கத் திலிருந்து வலப்பக்கம் நகர்ந்து கொண்டே வரும். இது தற்காலத்தில் தட்டச்சடிப்பான் பொறியில் (Typewriter Machine) தாள் பொருத்தப்பட்டிருக்கும் பகுதியில் மேல் அச்சுப் படிந்து வர, தாள் பகுதி அசைந்து கொண்டே போவதையும், அதே சமயத்தில் அச்சு ஒரே மையத்தில் வந்து விழுவதையும் ஒப்பு நோக்கினால், முன்னதன் முறையிலேயே பின்னது அமைக்கப்பட்டுள்ள முறை நன்கு தெரிய வரும்.

ஓலையில் வரைவதற்கு முன்பு, ஓலைகள் அதிக முற்ற லாகவும், அதிக இளைச்சலாகவும் இல்லாமல், நடுப் பதமுள்ளதாகத் தேர்ந்தெடுப்பார்கள். ஓலையில் எழுது வதற்கு ஏற்ற விதத்தில் பதமாக இருக்கிறதா, காய்ந்து விட்டதா, ஈரமாக இருக்கறதா என்பதைப் கவனிப்பதற் காக வேண்டி, எழுத்தாணியால் முதலில் சுழித்துப் பார்ப்பார்கள். சுழிக்க எளிதாக இருந்தால் வரையத் தொடங்குவார்கள். இம்மாதிரிப் பதமாக இருக்கிறதா என்று முதலில் சுழித்துப் பார்க்கும் பழக்கமே, பிற்காலத் தில் ‘பிள்ளையார் சுழி’[1] இடும் வழக்கமாக மாறி விட்டது!

இந்த ஓலைச் சுவடிகள் ஒரே அளவினதாக இல்லா மல், அவரவர் திறமைக்கு ஏற்பவும் அழகுணர்ச்சிக்கு ஒப்பவும், அழகாகவும், கவர்ச்சியாகவும், சிறப்பாகவும், முத்துக் கோத்தாற் போன்றும், ஒரோவழிப் புது மாதிரியி லும் அமைக்கப்படுவதுண்டு. தற்காலத்தில் வெளிவரும் சிறந்த அச்சிட்ட நூல்களைக் காட்டிலும், பழங்காலத் தமிழ் ஓலைச் சுவடிகள் அழகான எழுத்தில் வரையப்பட் டும், தலைப்பிட்டும், ஓரத்தில் இயலின் பெயர் குறிக் கப்பட்டும், செய்யுள் எண் தரப்பட்டும், படங்கள் வரிக்

1. பிள்ளையார் சுழி = ‘உ’ என்ற அடையாளக் குறியீடாகும்.

கோட்டில் வரையப்பட்டும், பொருளடக்கமும் மொத்தச் செய்யுள் தொகையும் கொடுக்கப்பட்டும், ஆசிரியர் பெயரும், உரையாசிரியர் பெயரும், இன்னாருக்காக இன்னார் வரைந்தார் என்று தகவல் அளிக்கப்பட்டிருப்பதையும் கண்டு அறிஞர்கள் மெச்சுகின்றனர்[1].

ஏட்டுச் சுவடிகளை சரியான முறையில் தூசி தட்டியும் தைலமிட்டுப் பேணிக் காப்பாற்றியும் பாதுகாத்து வந்தால், பல நூற்றாண்டுகள் வரையிலும் அவை கெட்டுப் போகாமல் இருக்கும்; பல புகழ்பெற்ற கவிவாணர்கள் வீட்டிலும் செல்வந்தர் வீட்டிலும் ஏட்டுச் சுவடிகளுக்கெனத் தனிப் பேழைகள் அமைக்கப்பட்டு அவற்றில் ஏட்டுச் சுவடிகளைக் கருந்தனமாக வைத்துக் காப்பாற்றி வந்துள்ளனர். ‘‘தெய்வநாகப் பெட்டியில் திருநகரி கள்ள பிரான் கவிராயர் ஏடு இருப்பு’’ என்று குறிக்கப்பட்டிருந்ததாகப் பேராசிரியர் ச. வையாபுரிப் பிள்ளை அவர்கள் தமது ‘புறத்திரட்டு’த் தொகுப்புரையில் செப்பியுள்ளார் என்பதை இங்கு நினைந்து பார்க்கத் தக்கதாகும்.

இப்படிப்பட்ட ஏட்டுச் சுவடிகள் பல கவனிப்புக் குறைவினாலும் நாளாகிப் போய் வேறு படி எடுக்காததினாலும் கெட்டுப் போய்விட்டன!

தோலினால் ஒரு புத்தகம் செய்யப் பல ஆடுகள் அல்லது பல கன்றுக் குட்டிகளைக் கொல்ல வேண்டிவந்தது. மேலும் இதற்காகப் பெரும் பொருள் செலவழிக்க வேண்டியதாயிற்று; எழுதவும் அதிக நேரம் பிடித்தது. ஓலையில் வரைந்து சுவடியாகச் செய்யும் நேரமும் பொருளும் உழைப்பும் மிகுதியாகச் செலவழிந்துள்ளது. இவற்றைவிடச் சிக்கனமாகவும் குறைந்த நேரத்திலும் எளிதானதாகவும் இருக்கக்கூடிய எழுது சாதனம் ஒன்றைக் காண மக்கள் விரும்பினர். இவர்களில் முதலில் முயன்று

1. நூல் எப்படி இருக்க வேண்டும், முதல் நூலின் தன்மை வழி நூலின் தன்மை போன்ற விவரங்களைத் தொல்காப்பியர் 3000 ஆண்டுகளுக்கு முன்பே கூறியுள்ளார். சூத்திரங்கள் 1593 - 1610.

எளிய முறையில் காகிதத்தைக் கண்டு பிடித்தவர்கள் யார் என்பதை அடுத்துப் பார்ப்போம்.

மூங்கிற் சுவடிகள்

சீன நாட்டில் செள பரம்பரை (Chou Dynasty) யினரின் ஆட்சி கி.மு. 255-ல் முடிவடைந்தபோது, சீன இலக்கியங் களெல்லாம் மூங்கில் எழுதுகோலால், மரச் சாற்றினால் தயாரிக்கப்பட்ட மையில் தோய்த்து, மூங்கிற் பத்தை யிலோ மரத் துண்டின் மீதோ எழுதப்பட்டு வந்தன. சிறு சிறு செய்திகள் அனைத்தும் மரத்துண்டின் மீதும், நீண்ட செய்திகளும் நூல்களும் பெரும்பாலும் மூங்கிற் பத்தை களின் மீதும் எழுதப்பட்டு வந்தன.

இந்த மூங்கிற் பத்தைகள் சிறு சிறு துண்டுகளாக நறுக் கப்பட்டு, ஒவ்வொரு துண்டும் சுமார் ஒன்பது அங்குலம் நீளமும், ஒரே வரிசைச் சீன எழுத்துகளை வரையக் கூடிய அளவு அகலமும் கொண்டவையாக இருந்தன. மரத் துண்டுகளோவெனில் சில சமயங்களில் மேற்சொன்ன அளவிலும் மற்றும் சில சமயங்களில் பெரிதான அளவி லும் இருந்தன. மூங்கிற் பத்தைகளைச் சீர்படுத்தி, ஒரு முனையில் துளையிட்டுப் பட்டுக் கயிற்றினாலோ தோலின் நரம்பினாலோ கட்டிப் புத்தகமாக்கப்பட்டன.

மே-தீ (Me-Ti) என்னும் சீன தத்துவ அறிஞர், ஒரு ராஜ்யத்திற்குப் பயணம் செய்த போது, தம்முடன் மூன்று வண்டிகள் நிறைய மூங்கில் நூல்களைக் (Bamboo Books) கொண்டு சென்றார் என்று சீன வரலாறு தெரிவிக்கின்றது.

மூங்கிலாலான நூல்கள் கனமாகவும் நிறைய இடங் களை அடைத்துக் கொள்ளக் கூடியனவாகவும் இருந்தன என்பதை இக் குறிப்பு சுட்டிக் காட்டுகிறது. எனவே, அதிக கனமில்லாமலும் எளிதாகவும் நூல்களைக் கொண்டு போவதற்காகச் சீனர் முயன்றனர்.

ஹான் பரம்பரை (கி.மு. 206 முதல் கி.பி. 220 வரை) யினரின் ஆட்சியின் போது, சீனாவில் பட்டுத் துணியில் மயிரினாலான தூரிகை (brush) கொண்டு எழுதுவதும் எடுத்துப் போவதும் எளிதாக அமைந்தது.

இதற்குப் பின்னர், பச்சைப் பட்டிலிருந்து (Raw silk) காகிதம் செய்யும் முறை சீனர்களால் முதற்படியாகக் கையாளப்பட்டது. இம் மாதிரியான முறையில் காகிதம் என்ற வரையறைக்கு (Near paper) வரக்கூடிய அளவிற்குச் செய்யப்பட்ட பொருள் கி.மு. 100 நடைமுறையில் இருந்தது என்பதற்கு, அந்த நூற்றாண்டில் முடிவான 'ஷுபென் அகராதி'யே சான்று பகர்கின்றது.

காகிதம்

கி.பி. 105-ல் சாய் லான் (T' Sai Lun) என்பவர் காகிதம் செய்வதைக் கண்டுபிடித்து அமல்படுத்தத் தொடங்கினார். மூங்கில், பட்டு இவற்றைவிடக் காகிதத்தில் எழுதுவது சுலபமானதாகவும் சிக்கனமானதாகவும் இருந்ததால், அம்முறை மிக வேகமாகப் பரவலாயிற்று.

காகிதக் கண்டுபிடிப்பு முழுவதும் செம்மையடைந்த பிறகே சாமர்கண்டிலிருந்த அராபியர்களிடம் தரப்பட்டது. தாங்கள் கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் கற்றுக்கொண்ட காகித முறையையே அராபியர்கள் ஸ்பானியர்களுக்கும் இத்தாலியர்களுக்கும் கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் அப்படியே தெரிவித்தார்கள். ஐரோப்பாவில் முதன்முதலாக அச்சடிப்பாளர்களால் (Printers) பயன்படுத்தப்பட்ட காகிதம், அவர்கள் பயன்படுத்துவதற்கு ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்பே முதல் சீனப் படிமை அச்சடிப்பாளர் (Block Printers) களால் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப் பட்டிருந்தது!

எகிப்தில் பயன்படுத்தப்பட்டு வந்த 'பேபைரஸ்' சுருணையும், பதனிடப்பட்ட தோலையும், சாமர்கண்டி

லிருந்து வந்த காகிதம் விரட்டிவிட்டது! காரணம் அது அவற்றைக் காட்டிலும் அழகுள்ளதாகவும் எளிதானதாக வும் வசதியானதாகவும் அமைந்திருந்ததேயாகும்.

சாமர்கண்டிலும், பாக்தாதிலும், அரேபியாவின் தென் கிழக்குக் கரையோரத்திலும், டமாஸ்கஸ்ஸிலும் காகிதத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டன. டமாஸ்கஸ்ஸில் உற்பத்தி செய்யப்பட்ட காகிதம் கான்ஸ்டான்டிநோபில் வழியாக ஒரு முக்கிய வர்த்தகப் பொருளாக ஏற்றுமதி யாகியது.

சீனாவில் முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்ட காகித மானது துருக்கிஸ்தானத்திற்குப் போய், அங்கிருந்து மேற் குத் திசை நோக்கிப் பரவத் தொடங்கியது. அது துருக்கிஸ் தானத்திலிருந்து அராபிய உலகத்தில் நுழைந்து, சாமர் கண்டிலிருந்து ஸ்பெயினுக்குப் பரவத் தொடங்கியது. எகிப்து வழியாக மொராக்கோவிற்கும், ஆசிய நாடுகள் அனைத்திற்கும் சென்று, அதன்பிறகு தென்னாப்பிரிக்கா நெடுகவும் பழக்கமாகி, அது ஐரோப்பாவிற்குச் சாரசன் ஸ்பெயின் வழியாகப் பயணஞ் செய்யலாயிற்று.

காகித வரலாற்றைச் சுருக்கமாகத் தொகுத்துக் கூறுவ தானால், முதல் ஆறு நூற்றாண்டுகள் வரையில் காகித உற்பத்தி சீனரிடமே இருந்தது. அவர்களிடமிருந்து அம் முறையை அராபியர் தெரிந்துகொண்டதால், அது அடுத்த ஐந்து நூற்றாண்டுகள் வரை மேற்கில் காகிதத் தயாரிப்பு அராபியர் கைவசம் இருந்தது. அராபியரிடமிருந்து ஸ்பானியர் அதன் உற்பத்தி முறையை உணர்ந்து கொண்ட னர். பிறகு கிறிஸ்துவ உலகினரிடம் அதன் உற்பத்தி ஏகபோக உரிமையாகிவிட்டது என்று சொல்லலாம்.

காகித வருகையினால்தான் அச்சுப்பொறி கண்டுபிடிப் பது அவசியமாயிற்று; அச்சுக் கண்டு பிடிப்பால்தான் காகி தம் பொது வழக்கிற்கு வர முடிந்தது. இப்படி இரண்டும்

ஒன்றுக் கொன்று நீங்காத் தொடர்புள்ளவையாக மாறி விட்டன.

காகிதத்தின் முதல் பயணம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் கிழக்கு நோக்கிக் கொரியாவிற்குப் போயிற்று; பின்னர் ஜப்பானுக்குச் சென்றது; மூன்றாம் நூற்றண்டின் பிற்பகுதியில் இந்தோ-சீனா காகிதத்தைச் சீனாவிற்குக் கப்பமாக - திரையாக - அளித்தது என்கிறது வரலாற்றுக் குறிப்பு ஒன்று. கி.பி. 671 - 694 - ல் இந்தியாவிற்கு வந்தார் இத்-சீங் என்னும் சீன யாத்திரிகர். சாஸ்போக்கில் காகிதப் பயணம் ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு நீண்டிருக்கிறது என்று இவர் கூறியுள்ளார். இதில் காகிதத்திற்கு உரிய சீனச் சொல்லுக்குப் பொருளாக வடமொழி 'காகளி'[1] என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். எனவே அப்போதே, இந்தியா காகிதத்தைப் பயன்படுத்தி இருக்கிறது என்பது நன்கு தெளிவாகின்றது.

சாமர்கண்டுக்கு அருகிலுள்ள காஷ்மீருக்கும் காகிதப் பயணம் தொடர்ந்தது. இங்கு காகிதத்தொழில் நடைபெற்று, ஷியாஸ்கோட், இலாகூர், தில்லி முத்ரா, வங்காளம், ஐதராபாத் முதலிய இடங்களுக்கும் பரவியது. 'காகளி', 'காகத்' என்று சொற்களிலிருந்தே காகிதம் உருவாகியுள்ளது.

ஐரோப்பாவில் 12ஆம் நூற்றாண்டிலேயே காகிதம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்துங் கூட, 300 ஆண்டுகள் கழிந்து அச்சுக்கலை பெருகத் தொடங்கிய பின்னரே, அங்குக் காகித உற்பத்தி அதிகப்படியாகச் செய்யப்பட்டது. அச்சடிச்சத் தொடங்கிய பின்னர்தான், காகிதம் எழுதுவற்கும் அச்சடிப்பதற்கும் உரிய பொருளாக விரைவில் மாறி வளர்ச்சிபெற்றது.

---

1. தமிழில் காகிதம்; இந்தி உருது : காகஸ்; சில வட இந்திய மொழிகளில் காகத்; கடிதம் எழுதப் பயன்படுத்தப் பட்டதால் கடிதாசி எனப் பட்டது. மலையாளத்தில் கடலாசு ஆயிற்று.

தோற்பத்திர (Parchment)த்தைக் காட்டிலும், தோற் கடுதாசி (Vellum Paper) யைக் காட்டிலும், காகிதம் குறைந்த செலவுள்ளதாகவும், அதிக மென்மையான தாகவும், அதிகமாகப் பயன்படுத்துவதற்கு ஏற்றதாகவும் இருந்ததாலேயே - அது விரைவாகவும் எளிதாகவும் பரவ முடிந்தது.

கி.பி. 18ஆம் நூற்றாண்டு வரை காகிதம் கையினா லேயே செய்யப்பட்டு வந்தது. கி.பி. 1720-ல் டச்சுக்காரர் ஒருவரால் கூளத்தைக் கூழாக்கும் பொறி ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது. இதற்கு 75 ஆண்டுகளுக்குப் பின்பு கி.பி. 1795-ல நிக்கோலாய் லூயி ராபர் என்பவர் காகிதம் செய்யும் பொறியைக் கண்டுபிடித்தார். தற்போது காகிதத் திற்குத் தேவையான மரக்கூழ் எந்திரமூலமாகவும், இரசாயனக் கலவை மூலமாகவும் தயாரிக்கப்படுகிறது

மை

எழுதுவதற்கும் அச்சடிப்பதற்கும் பயன்படும் பொருள்களில் காகிதத்திற்கு அடுத்தபடியாக மை முக்கிய இடம் பெறுகிறது.

பச்சிலைக் கொழுந்துகளைப் பறித்துக் கசக்கிப் பிழிந்து சாறாக்கி, அச்சாற்றையே மையாகக் கொண்ட காலம் ஒன்று உண்டு; பிறகு அரக்குச் (Lacquer) சாயத் திலிருந்தும் புகைக் கரி (Lamp black)யிலிருந்தும் மை தயாரிக்கப்பட்டது. இந்தியாவில் மாசிக்காயிலிருந்தும் மை உண்டாக்கப்பட்டது.

எழுதுவதற்காகவும், மர அச்சுப் படிமைக் (Wooden block) காகவும், உலோக அச்சுப் படிமைக் (Meral block) காகவும், ஒரு நிற வேலைக் (Monntone work)காகவும், இருநிற வேலைக் (Duotone work) காகவும், நுண்பதிவு முறைக் (Half tone method) காகவும், கற்பலகையிலும், உலோகத்தகட்டிலும், தொய்வகப் பதிவு (offset methods)

முறைகளுக்காகவும், கல்லச்சு முறைக் (LIthographic method) காகவும் வெவ்வேறு வகையில் தற்போது மை தயாரிக்கப்படுகின்றது.

மையில் - இந்தியன் மை (Indian ink) என்று ஒருவகை சொல்லப்படுகின்றது. இந்தியர்கள் கையாண்ட நிலையான மை முறை என்பது சரியாகக் கண்டு தெளிய முடியும். இந்த ஒரு வகை மை தான் எழுதிய பின் தண்ணீரால் அளிக்க முடியாததாகும்.

அச்சு தொடக்கம்

எழுத்துகளை எழுதுகோல் கொண்டு பட்டையிலும், ஓலையிலும், தோலிலும், ஈரக் களிமண்ணிலும் முதலில் எழுதி வந்ததானது, நாளடைவில் நகல்களை எடுத்து விரைவில் வெளிக்கொண்டு வரவேண்டும் என்ற அவாவினை மக்களிடம் எழுப்பியது. அதன் காரணமாக, மக்கள் பலகையிலும் கல்லிலும் தமக்கு வேண்டிய எழுத்துகளையோ குறிகளையோ, முத்திரைகளையோ, படங்களையோ, செதுக்கிக் கொண்டு அவற்றின் மீது மையைத் தடவி வேறொரு பொருளின் மீது அழுத்தி நகல் எடுப்பது அல்லது பதிப்பு எடுக்கும் முறையைப் பையப் பைய மேற்கொள்ள நேரிட்டது. இம்மாதிரி நகல் எடுப்பது அல்லது பதிப்பு எடுப்பது என்கிற முறையானது நாகரிகம் அடைந்த பல நாடுகளில் தொன்றுதொட்டு நடைபெற்று வந்துகொண்டிருக்கிறது.

பொதுவாக நகல் எடுத்தல் என்றாலும், பதிப்பு எடுத்தல் என்றாலும், அச்சடித்தல் என்றாலும் - மரப்படிமைகள் மீது உள்ள எழுத்துகள் அல்லது வரி வடிவங்கள் மீது மையைப் பூசிக் காகிதத்தில் பதித்துப் பகர்ப்பெடுப்பதோ, உலோகக் தகடுகளில் எழுத்துகளைச் செதுக்கி அவற்றின் மீது நிறந்தடவிப் பகர்ப்பெடுப்பதான ஒரு முறையைக் குறிக்கக்கூடியதாக உள்ளது. இன்னும் சற்று சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் மேடு பள்ளமுள்ள பரப்பின்

மேலோ வேறொரு பரப்பின்மேலோ மை தடவிக் காகிதத்தின் மேல் அழுத்திப் பரப்பிலுள்ள உருவத்தை அதில் தோற்றுவிப்பதே அச்சடிப்பதாகும்.

சிறப்பாகக் கீழை நாடுகளில்தான் முதன்முதலில் பதிப்பு எடுத்தல் வழக்கத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அங்கெல்லாம் தொடக்கத்தில் முத்தரைகளைச் செதுக்கியோ குடைந்தோ செய்து, பொறிப்புப் பலகைமீதும் பானை மீதும் பீங்கான் மீதும் அதனைக் கொண்டு உருவப் பதிப்பு நடை பெற்று வந்தள்ளது.

பழம்பெரு நாகரிக முதிர்ச்சி பெற்ற மொகஞ்சதாரோ, சீனா, சுமேரியா, எகிப்து போன்ற பகுதிகளில் - குறியீடுகளை (Symbols)யோ, முத்திரைகளை (Stamps)யோ, இலச்சினை களை (Seals)யோ பதிக்க முதலில் களிமண் அல்லது மெழுகில் நகல் தயாரித்து, அவற்றில் நிறந் தடவிப் பானை பேபைரஸ் போன்ற பொருள்கள் மீது அழுத்திப் பிரதி செய்யப்பட்டு வந்தது.

முத்திரை

இதில், மிகப் பழமையான முத்திரைகள் விலையுர்ந்த பொருள்களில் செதுக்கப்பட்டு, மென்மையான பொருள் ஒன்றன்மீது அவற்றைக் கொண்டு அழுத்திப் பிரதிகள் எடுக்கப்பட்டன. இம் மாதிரி மேல்நோக்கி இருக்கும்படி செதுக்கப்பட்ட பரப்பைக்கொண்டே, ரோமானியர்கள், பத்திரங்களில் (Documents) தமது அத்தாட்சியைப் (Authentication)பதிந்து வந்தனர்.

அச்சுக்கலை கண்டுபிடிப்பதற்கு முன்னரே அதன் அடியூற்றாக இலச்சினையும் முத்திரையும் பாபிலோனியாவில் களி மண்தட்டில் பொறிக்கப்பட்டது. இதேபோல் பழம் பெருமை மிக்க தமிழகத்திலும் சீனத்திலும் மற்றத் துறைகளைப் போலவே எழுத்துத் துறையிலும் முன்னோடியாக விளங்கிய ஒரிரு குறிப்புகளைக் காண்போம்.

சங்க காலத் தமிழகத்தில் 'கண்ணெழுத்து' என்பது கண் போன்ற வட்டெழுத்தையும் 'கண்ணெழுத்தாளர்' என்பது அதனை எழுதுகின்றவர்களையும் குறிக்கப் பயன்படுத்தப் பட்டன. அக்காலத்தில் காவிரிப்பூம் பட்டினத்தில் சோழ அரசன் ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களின் மீது வரிவிதிக்கும் அறிகுறியாகத் தனது புலிச் சின்ன இலச்சினையைப் பொறித்தான் என்று 'பட்டினப்பாலை'யும் 'சிலப்பதிகார'மும் கூறுகின்றன.

சீனாவிலும் ஹான் பரம்பரையினரின் ஆட்சியின் போது ஹின் (Hin) என்னும் சொல் களிமண்மீது அழுத்தப் பட்ட இலச்சினையைச் சுட்டப் பயன்படுத்தப்பட்டுள் ளது. 'ஹின்' என்னும் ஒரே சொல் - இலச்சினையையும் அச்சையும் ஒருங்கே குறிக்கக்கூடியதாக உள்ளதாம்.

களிமண்ணால் முத்திரையிடும் பழைய வழக்கத்தை இன்றும் நமது நாட்டுப் புறங்களில் காணலாம், நெல் முதலிய தானிய வகைகளை அறுவடை ஆகும்போது குவித்து அம்பாரமாக்கி அதன் பல பக்கங்களில் ஈரக் களி மண்ணிட்டு, அதன் மேல் சொந்தக்காரர்களின் முத்திரை பலகையால் அழுத்தப்படுகிறது. இதுபோன்றே முற் காலங்களில் இலச்சினையிடுதலும் சாதாரண வழக்கத்தில் இருந்து வந்துள்ளது.

இலச்சினை இடுதல்

சீனாவில் களிமண் இலச்சினையிடும் வழக்கம் கி.பி. ஐந்து அல்லது ஆறாம் நூற்றாண்டில் எடுப்பட்டு சிவப்பு மையினால் காகிதத்தின் மீது தடவி இலச்சினையிடுவது நடைமுறைக்கு வந்ததாக அந்நாட்டு வரலாறு கூறுகின் றது. பிறகு இரு மூங்கில் துண்டுகளில் இலச்சினையைச் செதுக்கி அழுத்தி, ஒரு பகுதி உரியவரிடமும் மறு பகுதி அரசிடமும் இருந்து வந்தது. அடுத்து மூங்கில் இலச் சினையைப் பார்த்து ஒரு வகை படிகக் கல் (Jade)லில் செதுக்கி, இலச்சினையை அழுத்துவது வழக்கத்திற்கு வந்

தது. பின்னர் முத்திரைகள் செய்யப்பட்டன. இம் மாதிரி முத்திரைகள் செய்யும் பழக்கமே நாளடைவில் ரப்பரில் முத்திரை (Rubber Stamp) யை உருவாக்கும் அளவிற்கு வளர்ந்து, கடைசியில் அச்சுப்படிமம் (Block Print) செய்து அச்சுப்பதிக்கும் முறையை வழக்கத்திற்குக் கொண்டு வந்தது.

செதுக்குத் தகடு

அச்சுப்படிமை ஏற்படுவதற்கு முன்பு. உருவங்கள் எழுத்து முதலியன துளைத்து வெட்டப்பட்ட உலோகத் தகடுகள், பதிப்பதற்காகச் சீன நாட்டில் பயன்படுத்தப் பட்டு வந்துள்ளன. இவற்றிற்குச் செதுக்குத் தகடுகள் (Stancils) என்று பெயர். இம்மாதிரியான செதுக்குத் தகடுகள் மூலமாகத்தான் பௌத்த மடங்களில் நகல்கள் எடுக்கப்பட்டு வந்தன. இப்போது நாம் ஒருவகையான மெழுகுத்தாளில் (Stencil paper) முதலில் கையால் எழுதியோ, தட்டச்சுப் பொறியால் அச்சடித்தோ நமக்கு வேண்டிய அளவிற்குப் பிரதிகளை யந்திரக்கருவி (Duplicator)யைச் சுற்றுதல் மூலம் எடுத்துக் கொள்கி றோம். இதற்கு முற்காலச் செதுக்குத் தகடு முறையே முன்னோடியாக உள்ளது என்பதை நினைவிற் கொள்வோம்.

முத்திரை செய்து அதன்மீது மை தடவிக் காகிதத்தில் பதித்துப் பகர்ப்பெடுக்கும் வழக்கம் இன்றும் வழக்கத்தில் இருந்து வருகிறது. அச்சுப்படிமையிலும் இதுபோன்று பதிக்கப்பட்டு வந்தது. ஆனால், முத்திரைக்கும் அச்சுப் படிமைக்கும் சிறு வேறுபாடு உண்டு. முத்திரை என்பது சிறிய அளவினது; அதனுடைய வேலை அத்தாட்சியை நிலை நாட்டுவதாகும் அச்சுப்படிமை பெரிய அளவினது; இதனுடைய வேலை நகல்களை எடுக்கப் பயன்படுவது.

சீன எழுத்து மூலங்களிலிருந்து நாம் அறிந்து கொள் ளக் கூடியது என்னவென்றால் அச்சு முறையானது

களிமண் முத்திரையிலிருந்து காகிதத்திற்கும் மையால் ஒத்தப்படும் முறைக்கும் மாறியகாலம் ஏறக்குறைய கி.பி. 56 ஆம் நூற்றாண்டுகளில் என்பதேயாகும்.

இப்போது கிடைத்துள்ள தொன்மையான அச்சுப் படிமையின் பிரதி (Block print) பௌத்த மந்திரங்களை (charms) உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது. இது ஏறக் குறைய கி.பி. 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். இக் காலத்திற்கு முன்பு தாயிஸ்ட்டுகள் (Taoists) என்பவர்கள் தங்களுடைய மர முத்திரைகளை இங்குலிகத்தால் தயாரிக்கப்பட்ட சிவப்புமையில் தோய்த்து முன் குறித்தது போன்று மந்திரங்களைப் பதித்து வந்தார்கள். இவையே உலகத்தில் முதன் முறையாக உண்டாக்கப்பட்ட அச்சுப் படிமைகள் என்று கருதப்படுகின்றன.

கல்வெட்டிலிருந்து நகல் எடுத்தல்

கல்வெட்டுகளின்மீது மை தடவி நகல் எடுக்கும் வழக்கம் சீனாவில் ஏற்பட்டது என்று சீன எழுத்தாளர்கள் குறிப்பிடுகின்றனர்; இம்முறையே நேரடியாக மரத்தில் செதுக்கிய எழுத்துகளின் மீது மைதடவிப் புத்தகங்கள் உண்டாக்க வழிகோலியது என்றும் கூறுகின்றனர் கல்லச்சுப்படிமைக்கும் மர அச்சுப் படிமைக்கும் சிறிது வேறுபாடு உள்ளது. கல்லில் உருவங்கள் அல்லது எழுத்து கள் வெட்டப்பட்டுக் குழிப்பட்டிருக்கும். அச்சுப்படிமை யில் உருவங்கள் அல்லது எழுத்துகள் செதுக்கப்பட்டு மேல் நோக்கி நிற்கும். கல்லுக்கு அப்பாலிருந்த காகிதத் தின் மேற்பரப்பில் மீது மை தடவப்பட்டு, அழுத்திப் பிரதி எடுக்கப்படும்போது உருவங்கள் அல்லது எழுத்து கள் வெள்ளையாகத் தெரியும்; பிற பகுதிகள் கருமையாக இருக்கும். இதற்கு மாறாக அச்சுப் படிமை மீது மட்டும் மை தடவப்படும்; அதனால் காகிதத்தில் மேற்பொறுக் கான பகுதிகள் மட்டும் அழுத்திப் பதிவாகும். பௌத்த மடங்களில் பௌத்த நூல்களைக் கல்லில் குடைந்து

செதுக்கி அவற்றிலிருந்து பிரதி எடுக்கும் கல்லச்சு முறை (Lithography)யை வழக்கிற்குக் கொண்டு வந்தனர்.

கல்வெட்டு நகல் முறையிலிருந்து படிப்படியாக மர அச்சுப்படிமை முறையும், அதிலிருந்து நகல் எடுக்கும் முறையும் வளர்ச்சியடைந்தன. புத்த மதக் கோட்பாடு களை உள் அடக்கிய வைரச் சூத்திரங்கள் கி.பி. 868-ல் கல்லிலிருந்தும் நகல் எடுக்கப்பட்டது; மர அச்சுப்படிமை யிலிருந்தும் பிரதி எடுக்கப்பட்டது. இவ் வைரச் சூத்திர மானது வட மொழியிலிருந்து புத்தமதக்கோட்பாடுகளைச் சீன மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டதாகும். இதுவே, உலகத்தில் முதன் முதலாக அச்சுப்படிமையின் மூலம் அச்சிடப்பட்ட முதற்புத்தகமாகும். கி.பி. 10 முதல் 14 ஆம் நூற்றாண்டுகள் வரை உள்ள காலத்தை ''அச்சுப் படிமையின் காலம்'' என்றே கூறுவர். ஏனெனில். இக் காலத்திலே தான் சீன நாட்டில் பேரிலக்கியங்கள் இம் முறையிலே அச்சிடப்பட்டன.

அச்சுப்படிமை முறை அழகிய கையெழுத்துகளின் நகல்களைச் காக்கக்கூடிய ஒன்று என்றும் ஒப்புக்கொள் ளப்பட்டுள்ளது. பண்டைய நகல்களைக் அழுத்தியோ (Pressing) தேய்த்தோ (Rubbing) பண்டைய நகல் எடுக் கும் முறைகள் சீனாவில் நெடுங்காலம் வரை நிலவி வந்துள்ளன.

இச்சமயத்தில் உலகநாடுகளில் அச்சு சம்பந்தமாகக் காணப்படும் ஒரு பொது உண்மையை விளக்க வேண்டி யுள்ளது. எந்த நாட்டுப் பகுதியிலும் அச்சு வளர்ச்சி பெற வழிவகுத்தது, அந்தந்த நாட்டில் நிலவியிருந்த சமயப் பிரசார விருப்பே என்பதுதான் வரலாறு காட்டும் உண்மையாகும்.

சீனாவை எடுத்துக்கொண்டால், அச்சின் தொடக்க காலத்திலிருந்து இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரை புனிதமான நூல்களுக்காகவும், உலகத்து மூன்று

முக்கிய சமயங்களின் பரப்புதலுக்காகவுமே அச்சு முறை பயன்படுத்தப்பட்டு வளர்ச்சி பெற்று வந்திருக்கிறது என்பது நன்கு புலனாகும். சீனா பௌத்த சமயப் படங் களையும் நூல்களையும் பரப்புவதற்காக வேண்டியே அச்சுக்கலையில் ஈடுபட்டது; அதனை வளர்க்கவும் முற்பட்டது. ஜப்பான் ஆறு நூறாண்டுகள் வரையில் பௌத்தப் புனித நூல்களை வெளியிட்டு அச்சுக்கலையில் உயர்ந்ததோர் நிலையைப் பெற்றது.

ஐரோப்பிய அச்சுப் படிமையாளர்கள் விவிலியப் படங்களையும், ஏழையின் வேதாகமத்தை (Poorman's Bible) யும் அச்சடித்தார்கள். சிலுவைப் போர்க்காலத்தில் அச்சிடும் முறை எகிப்துக்குச் சென்றதாலே, குரானின் செய்யுட்களும் தோத்திரப்பாக்களும் அங்கு அச்சிடப் பட்டன. ஜான் கூட்டன்பர்க்கு விவிலிய நூலையே அச்சடித்துத் தந்தார்.

இவை அத்தனையையும் ஒருசேரத் திரட்டிப் பார்க் கும் பொழுது, உலகநாடுகள் தம்தம் சமயப் பரப்புதலுக் காக வேண்டியே, அச்சில் நாட்டஞ் செலுத்தவும், அதில் ஈடுபட்டு வளர்க்கவும் - அதாவது அச்சடித்துத் தீர வேண்டிய நிலைமையும் கடப்பாடும் ஏற்பட்டன என்பது தெரியவரும்.

ஐரோப்பாவில் அச்சுமுறை கண்டு பிடிக்கப்படுவதற் கும், சீனாவில் அச்சுப்படிமை செய்த முறைதான் முக்கிய அடிப்படையாக இருந்தது. தூரக்கிழக்கு நாடுகளில் அச்சுப்படிமை முறை அமலுக்கு வந்ததிலிருந்தே அச்சி டும் கலை (Art of printing) உண்டாயிற்று என்று சொல்ல லாம் ஆனால் ஒரு குறிப்பிடத்தக்க வேறுபாடு இங்கே உண்டு. சீனாவில் தனித்தனி எழுத்துகள் (Movable Tyes) அவ்வளவு முக்கியமானவையல்ல என்று எண்ணப்பட் டது; ஐரோப்பாவில் இப்படிக் கருதப்படவில்லை. இந்த வேறுபாடு நெடுங்கணக்குக்கும் (Alphabet) கருத்துருவக்

கலைக்கும் (Ideograph) இடையே எழக்கூடிய ஒரு வேறுபாடேயாகும்.

ஐரோப்பாவிலுள்ள மொழிகளின் எழுத்துகள் வரிசைக்கிரமமானவை. அவற்றை எழுத்துருவாக்குவதே அச்சு முறையை ஏற்படுத்த வழிகோலியது. தூரக்கிழக்கு நாடுகளிலுள்ள மொழிகளில் பெரும்பாலானவை சுமார் 40,000 தனி அடையாளங்களைக் கொண்டவை பெருத்த அளவில் மொத்தமாக அச்சடிக்கும் முறை ஏற்பட்ட காலம் வரை, அந்நாடுகளுக்குத் தனித்தனி எழுத்துகள் நடை முறைக்கு ஒத்து வரக் கூடியனவாகவோ பொருள் சிக்கன முடையனதாகவோ தோன்றவில்லை.

எந்த ஒரு நாட்டிற்கும் அந்தந்த நாட்டின் கல்வியையும் பண்பாட்டையும் வளர்க்க உதவியாக இருக்கும் அச்சு வடி வில் தானே அச்சிடும் முறை ஏற்படக்கூடும்? இந்த நியதி யின்படிதான் உலகெங்கும் அச்சுமுறை அமைந்துள்ளது.

தொடக்கத்தில் சீனாவிலும் கரடுமுரடான அச்சுப் படிமை முறையே கையாளப்பட்டு வந்தது. பிறகு அது சீர்திருந்தியது எழுத்தினால் அன்று. சிறந்ததோர் அச்சுப் படிமை முறையினாலேயாகும். அச்சுப்படிமை கண்டு பிடிக்கப்பட்டதற்குப் பின்பு, ஒரு நூற்றாண்டு கழித்துப் பெங்தோ (Feng-Tao) என்பவர் அம் முறையைச் சீர்திருத் திப் புது முறைகளை வகுத்துக் கொடுத்தார். அதனால் அவர் பெயர்க்கு ஐரோப்பாவில் கூட்டன்பர்க்கிற்குத் தரப் படும் உயர்ந்த இடத்தைப் போலவே, சீன வரலாற்றிலும் அளிக்கப்பட்டிருக்கிறது. அவர் காலத்தில்தான் அச்சடித் தல் ஒரு கலையாக மாறிற்று.

சுங் பரம்பரையினர் காலத்தில் அச்சடிக்கப்பட்ட புத்த கங்களின் வேலைத்திறம், வேறு எதனாலும் மிஞ்சமுடி யாத அளவிற்கு உயர்ந்துள்ளது. தற்காலத்தில் எழுத்து களைக் கொண்டு அச்சிடப்பபட்ட சீன நூல்களை அவற்று டன் ஒப்பிட்டுப் பார்க்கவே முடியாது என்கின்றனர். இந்த

ஒரு காரணத்தினால் தான் தனித்தனி எழுத்துக்களால், சீன அச்சுப்படியமையால் உண்டாக்கப்படும் நூல்களை விரட்ட முடியவில்லை!

சீட்டு அட்டைகள்

ஐரோப்பாவில் முதன் முதலாக விளையாட்டுச் சீட்டு களை (playing cards) அச்சிட வேண்டியே அச்சுப்படிமை முறை வழக்கத்திற்கு வந்தது. பிறகு, சமய உருவப் படங் களும் விளையாட்டுச் சீட்டுகளும் ஐரோப்பாவின் மாதாக் கோவில்களின் முன் யாத்திரிகர்களாலும், ஊர்சுற்றும் வணிகர்களாலும் விற்கப்பட்டன. போப்புகள் மத யாத்திரை போவதை ஊக்கினர்; அவர்கள் சில கோயில் களில் பாவ மன்னிப்புச் சீட்டுகள் விற்க அனுமதியளித்த னர்! கி.பி. 1423-ல் அச்சிடப்பட்ட செயின்டு கிறிஸ்தோப ரின் படத்தை உட்கொண்ட சீட்டு அட்டையே, இப்போது கிடைத்துள்ளவற்றில் மிகவும் பழமை வாய்ந்ததாகும்.

சீட்டுத்துணி

மேலும் பலவிதத் தூண்டுதல்களின் காரணமாகத்தான் அச்சுபடிமை முறை ஐரோப்பாவில் அமலுக்கு வர முடிந்தது; நெசவுத்துணிகளில் அச்சிடும் முறை (Printing of textiles) இத் தூண்டுதல்களில் ஒன்றாகும்.

பதிப்பு எடுப்பதற்குப் பலவிதப் பொருள்கள் பயன் படுத்தப்பட்டன. பருத்தியில் பதிப்பது பொதுவில் திருப்தி தரக்கூடிய செயலாக இருந்தது; அதிலும் இந்தியா விலும் கிழக்கிந்திய நாடுகளிலும் படிமை அச்சு முறை சீட்டித்துணிகள் (chintz) தயாரிப்பதற்கு மிகவும் ஏற்றதாக இருந்தது.

தனித்தனியாக உருவங்களை வரைவதைக் காட்டிலும் மரத் துண்டுகளில் செதுக்கப்பட்ட விதவிதவான உருவங் களைக் கொண்டு, துணிகளில் அச்சிடுவது உழைப்பைக்

குறைக்கக் கூடியதாகவும் எளிதான வழியாகவும் இருந்தது.

இந்தியாதான் பருத்தி உற்பத்திக்குத் தாயகம் என்பதும், இங்குதான் துணிகளில் அச்சிடும்முறை கண்டு பிடிக்கப்பட்டது என்பதும் வரலாற்று உண்மைகள் என்பதை இங்கு நினைவு கூறவேண்டும். இங்கிருந்துதான் துணியில் அச்சடிக்கும் முறை வெளியுலகிற்குப் பரவியது.

இந்திய நாட்டினர் மரக்குச்சி, இரும்பு அல்லது வேறு ஏதாவது உலோகத்தின் அச்சு, அல்லது வேறு மாதிரியான துணி ஆகியவைகளில் சாயத்தை ஏற்றினார்கள். அதனைக் கடுக்காய், படிக்காரம் முதலிய வெவ்வேறுவித வழிகளில் (உபாயத்தினால்) நீடிக்கக்கூடியதாகச் செய்து வந்தார்கள். பழம், இலை, பட்டை, வேர், பலவிதமான மூலிகைகள் அல்லது உலோகங்கள் முதலிய இயற்கைப் பொருள்களிலிருந்து சாயம் இறக்கும் முறை இந்தியர்களுக்குத் தெரிந்திருந்தது. நாளடைவில் இவ்விடத்திய சாயந்தோய்க்கும் முறையையும் அச்சடிக்கும் முறையையும் அயல் நாட்டவர் அறியலானார்கள். பொதுவாகக் கீழ்த்திசை நாடுகளின் அச்சடிப்பு முறைகள் மிகவும் சிக்கலானவை (Compex) யாயும், பலதிறப்பட்டனவாயும் இருந்தன. ஐரோப்பாவில் பழங்காலத் துணி அச்சடிப்பாளர் (Textile Printers) அச்சுப் படிமைமீது வண்ண மையை (Pigment)த் தடவுதல் மூலம் தமது துணியில் பதிப்பு எடுத்து வந்தனர். அவ் வண்ண மை எண்ணெய், குங்குலியம், வெண்முட்டை ஆகியவற்றால், ஆகியது. இப்படித் தடவுதன்மூலம் நூலிழையில் வண்ண பசையைச் சரியாக ஊடுருவவும் ஐரோப்பியர்களால் செய்ய முடியவில்லை. ஆனால், கீழ்த்திசை வண்ணமிடுவோர்க்குச் சாயம் (Dye) நூலிழையில் முழுவதும் ஊடுருவும்படி செய்யத் தெரிந்திருந்தது மேலும் இவர்களால் கையாளப்பட்ட முறையானது திறமை மிக்கதும் வேதியல் அறிவுத் தேர்ச்சி (Chemical Knowledge)யும் கொண்டதாகும். அச்சுப்படிமையில்

வண்ண மையைத் தடவிப் பொதுவாகப் பொருள் மீது அழுத்தி அவர்கள் பதிப்பு எடுப்பதில்லை. மாறாக தடுப் புப் பிசினையோ (மெழுகையோ) ஒட்டுப் பிசினையோ (சாயப் பசையையோ) தடவிதான் பதிப்பித்தார்கள். தடுப் புப் பிசினைப் பயன்படுத்தினால் அச்சடிக்கப்பட்ட பாகம் வெண்மையாக விடப்பட்டு, சாயத் தொட்டியில் தோய்க் கப்பட்டது. ஒட்டு பிசினைப் பயன்படுத்தினால் அச்சிடப் பட்ட பாகம், மட்டும் சாயம் ஏற்றப்பட்டு மிச்சப்பகுதி துவைத்து நீக்கப்பட்டது.

மேலும், ஓர் உருவுக்கு ஒரு அச்சு என்ற முறையில் அச்சடிக்கப்பட்டது. நாளடைவில் துணிக்கு மேலே ஒரு அச்சுப் படிமையும், கீழே மற்றொரு அச்சுப் படிமையும் வைத்து உருவை அச்சடிப்பது அடுத்து வழக்கிற்கு வந்தது. நமக்கு இப்போது கிடைத்துள்ள பழமையான அச்சடித்த துணிகள் கி.பி. ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும்; பருத்தித் துணியில் தடுப்பு அச்சு (Resist Print) மூலம் அச்சடிக்கப்பட்டவையாகும். இவை எகிப்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளவை. இவற்றுடன் அச்சடிக்கும் மர அச்சுப்படிமை (Wooden Block Print)யும் கிடைத்துள்ளது.

இங்கு ஒரு முக்கிய வேறுபாட்டைக் குறிப்பது நல் லது. அச்சு நெசவாளி அழகுக்காவே சித்திரங்களைத் துணி யில் அச்சடித்து வந்தான். ஆனால் பழங்கால அச்சடிப் பாளன் காகிதத்தில் தெய்வ போதனைக்காக வேண்டியே அச்சடித்தான். உருவம் பதித்த அச்சுத்துணியே பின்னர் காகிதத்தில் அம்மாதிரி அச்சடிக்க வழிகோலியது. ஆசியா விலும், ஐரோப்பாவிலும் துணியச்சு முறை (Textile Printing) தான் காகிதத்தில் அதைப் போன்ற துறையில் அச்சடிக்கத் தூண்டுதல் கொடுத்தது.

படங்கள், தலைப்பு வாசகங்கள் (Text) ஆகியன காகிதத்தில் அச்சுப்படிமை மூலம் அச்சடிக்கப்பட்ட பழம் பொருள்கள் யாவும் சமயச் சார்புடையனவாகவே காணப் படுகின்றன. இதனால் ஐரோப்பாவில் அச்சுப்படிமை

வளர்ச்சி பெரும்பாலும் சமயச்சார்பற்ற நெசவு வளர்ச்சி யின் அடிப்படைத் தூண்டுதல்களில் ஒன்றாகவே இருந் துள்ளது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

சீனாவில் அச்சுப்படிமை மூலம் காகிதத்தில் அச்சடித் தலும் இந்தியாவில் துணிகள் மீது உருவங்களைப் பதித் தலும் நீண்ட காலமாகவே நடைபெற்று வந்த முறை யாகும். இம் முறையை ஐரோப்பா நன்றாக அறிய முடிந் தது 15ஆம் நூற்றாண்டிற்குப் பிறகேயாகும்.

நாணயக் காகிதம்

அச்சுக்கலை உருவாகுவதற்கு மூலமாக இருந்தவற் றுள் நாணயக் காகித (paper-money) மும் ஒன்றாகும் இந்த நாணயக் காகிதமும் சீனாவில் முதன்முதலாகத் தோன்று வதற்கு முன்பு கி.மு. 119-ல் ஓர் அங்குலச் சதுரமுள்ள வெள்ளை மானினது தோல் துண்டு, ஊதி (Wuti) பேரரச னின் ஆட்சியில் ஒரு குறிப்பிட்ட நாணய அளவாகக் கொள்ளப்பட்டது. இதற்கு ஒரு நூற்றாண்டு கழித்து வாங்-மாங் (Wang Mong) ஆட்சியில் வெவ்வேறு வகையான உலோக நாணயங்கள் வெளியிடப்பட்டன.

பின்னர் கி.பி. 807-ல் செப்புக் கிடைப்பது அரிதாக இருந்த போதுதான் தற்காலிகமாகக் காகிதத்தில் அச்சடித்த நாணயம் வழக்கத்திற்கு வந்தது. அப்போது ''பறக்கும் நாணயம்'' (Flying - money) என்று அது குறிப்பிடப்பட் டது கி.பி. 970-ல் ஷுங் பரம்பரையினரின் ஆட்சியின் போது, அவர்களது தலைநகராயிருந்த சி யென்-ஃபூவில் ''வசதியான நாணயம்'' (convenient money) அதாவது காகித நாணயம் அச்சடிப்பதற்காக அவ்வரசாங்கத்தினால் ஓர் அலுவலகம் நிறுவப்பட்டது என்று சீனா வரலாறு தெரிவிக்கின்றது. பாரசீகத்திலுள்ள மங்கோலியத் தலை நகராயிருந்த டாபிரிஸில்தான் கி.பி. 1294-ல் காகித நாணயம் சீன அராபிய மொழிகளைத் தாங்கி வெளியிடப் பட்டுள்ளது. மார்க்கோபோலோ சீனாவின் காகித நாணய

முறையைப் பற்றி விளக்கமாகக் குறிப்பிட்டுள் ளான் இந்தக் காகித நாணயம் மூலமாகத்தான் சீனாவின் அச்சு முறையை, ஐரோப்பிய வழிப்போக்கர்கள் முதன் முதலில் அறியலானர்கள். கூட்டன்பர்க்கு காலத்திற்கு முன்பு சில அச்சுமுறையைக் காகித நாணயம் ஒன்றின் மூலமாகத்தான் ஐரோப்பிய எழுத்துலகம் தெரிந்து கொள்ளலாயிற்று.

ஐரோப்பாவில் அச்சுப்படிமை முறை அமலுக்கு வருவதற்கு நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பே, சீனா காகித நாணயத்தைப் புழக்கத்திற்குக் கொண்டு வந்திருக் கிறது. கிறிஸ்தவ உலகம் முதல் முறையாகக் காகிதத்தைக் கண்டதற்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே, சீனா காகித நாணயத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்தள்ளது. கூட்டன்பர்க்கின் சிறு பருவத்தில்தான் கடைசியாகச் சீனாவின் காகித நாணயம் வழக்கத்தில் இருந்தது.

ஐரோப்பியாவில் மத்திய காலத்தில் வாழ்ந்த கற்றறி வாளர்கள், புத்தகத்துறையில் நாட்டங்கொண்டவர்கள் யாவரும் முக்கியமாக மதகுருமாரும் துறவிகளுமாகவே இருந்தனர். இவர்களுக்கு இரஷ்யாவின் முலமாகத்தான் சீனாவில் நடைமுறையில் இருந்து வந்த அச்சுப்படிமை முறை தெரியவந்தது என்று ஜோவியஸ் (Jovius) என்னும் வரலாற்றாசிரியர் 1550-ல் முதன்முதலாகக் குறிப்பிடு கிறார்.

மேலே சொல்லி வந்த மிகப்பழங்கால அச்சுப்படிமை களின் பிரதிகள் வரிக்கோடுகளாகப் பதிக்கப்பட்ட நிலை யில் ஐரோப்பாவில் காணப்பட்டன. பின்னர் அவைகளில் வர்ணங்கள் கையால் தீட்டப்பட்டன. ரெய்லாண்ட்ஸ் நூல் நிலையத்தில் காணப்படும் 1432-ல் வெளியான செயின்டு கிறிஸ்தேபரின் படம் மர அச்சுப்படிமை (Wooden block-print) மூலம் அச்சிடப்பட்ட பழமையான படங்களில் ஒன்றாகும். 'ஏழை வேதாகம்' நூலும் மர அச்சுப்படிமை மூலம் அச்சிடப்பட்டதேயாகும் புகழ்

வாய்ந்த மண்டேக்னா சீட்டட்டை (Mantegna cards) களும் இந்த முறையிலேயே தயாரிக்கப்பட்டன.

வழிபாட்டுப் படங்கள்

பொதுவாகப் பழங்கால அச்சுப்படங்களின் பெரும் பாலானவை வழிபாட்டுப் படங்கள் (Image prints) ஆகும். இம் மாதிரிப் படங்களை அச்சிடும் வழக்கம் வளர்ச்சி யடைந்தது. தொடக்க கால வழிகாட்டுப் படங்கள் முத லில் எவ்வித விளக்கக் குறிப்பும் (Texts) இன்றி வெளிவந் தன. பின்னர்தான் அவற்றின் கீழே விளக்கக் குறிப்புகள் அச்சிடப்பட்டன அதன் பின்னர் இம்மாதிரியான படங் களைத் தனித்தனியே அச்சிட்டுப் புத்தகங்களில் சேர்த்துக் கொள்ளும் பழக்கம் ஏற்பட்டது. சீனாவில் அச்சிட்டதைப் போலவே, ஐரோப்பாவிலும் இப் படங்கள் ஒரே பக்கத்தில் மட்டும் அச்சிடப்பட்டு வெறிதான பக்கங்கள் சுற்றி மடிக்கப்பட்டன.

இம் மாதிரிப் பழமையான முறைகளான மரத்தின் செதுக்கப்பட்ட அச்சுப்படிமைகளும், உலோகத்தில் செதுக்கப்பட்ட தகடுகளும் (Stampide), தூரிகையால் தீட்டப்பட்ட படங்களும் புதுமுறையான அச்சுக்கலைக்கு வழிவிடவேண்டியதாயிற்று.

மர அச்சுப்படிமை மூலம் தனித்தனி படங்களை அச்சடிக்கும் போக்கு, உலோகத்தில் தனித்தனி அச்சு எழுத்துகளைச் செதுக்கி அச்சடிக்கும் முறை வளர வழி வகுத்துக் கொடுத்தது. மர அச்சுப்படத்தின்கீழ் தரப்பட்ட எழுத்தாலான விளக்கவுரைகள் அச்சுப்படிமை நூல்களில் பதிக்கப்படவும் அதிலிருந்து அசைவும் எழுத்துகளாலான (Movable types) வெளியிடப் படவுமான வளர்ச்சிக் கட்டத்தை அடைந்தது.

இப்பழங்கால நூல்கள் ஒரே பக்கத்தில் மட்டும் நீர்த்த வெளிரிய கபில நிறமையினால் (Thin pale brownish ink)

அச்சிடப்பட்டன. அவை, மை தடவிய அச்சுப்படிமைமீது காகிதத்தை வைத்து மேற்புறமாக மெல்ல மெல்ல ஒத்திப் பிரதி செய்யப்பட்டவையாகும்.

அச்சுக்கலை தோன்றுவதற்கு இலச்சினை இடுதல், முத்திரைகளைப் பொறித்தல், கல்வெட்டிலிருந்து நகல் எடுத்தல், பட்டில் அச்சடித்தல், செதுக்குத் தகடுகள், கல்லச்சுப் படிமைகள், மர அச்சுப் படிமைகள் முதலிய வற்றிலிருந்து பிரதி எடுத்தல், நாணயக் காகிதம், சீட்டு அட்டை, வழிபாட்டுப் படங்கள் போன்றவற்றை அச்சடித் தல் ஆகிய பல வழிகளில் பல படிகளைக் கடந்த பின்னரே தனித்தனி எழுத்துகளை (Movable types)க் கண்டுபிடிக்க நேர்ந்தது. இதுவும் பலவித முன்னேற்றம் காரணமாகவும் தேவை காரணமாகவும் செய்யப்பட்டது.

மர அச்சுப்படிமையில் அச்சிட்டதால் அதை அடிக்கடி புதியதாகச் செதுக்க வேண்டியிருந்தது. இக்குறையை நீக்குவதற்காக உலோகப் படிமையில் அச்சிடுவது என்று தீர்மானிக்கப்பட்டது. தற்காலச் செதுக்கு வேலையைப் போல், எழுத்துகளைத் தனித்தனியாக உலோகத்தில் உருவாக்காமல், மர அச்சுப்படிமையில் இருந்ததைப் போன்று எழுத்துகள் மேல் நோக்கி நிற்கும்படி செய்யப் பட்டன.

அச்சுமுறை கண்டு பிடிக்கப்படுவதற்கு முன்பு எல்லா நூல்களும் கையினாலே எழுதப்பட்டு ஏட்டுப் படிகளாக யிருந்து வந்தன. இம்மாதிரி ஒவ்வொரு பிரதியையும் கை நோக வருந்தி எழுத வேண்டிய வந்தது. இதே முறையில் ஒரு நூலில் 20 படிகள் செய்ய வேண்டியிருந்தால். இருபது தடவை வருந்தி உழைக்க வேண்டி இருந்தது. இத் தொல்லையை ஓரளவு பக்கம் பக்கமாக மரத்தில் அல்லது உலோகத்தில் எழுத்தால் செதுக்கி அச்சுப் படிமைமூலம் அச்சீடு செய்வது குறைந்தது விட்டது என்றாலும் ஒரு பக் கம் செதுக்க நீண்ட நாள் பிடித்தது; அதிக உழைப்பையும் நல்க வேண்டியிருந்தது. மேலும் ஒரு நூலுக்கு ஒரு தடவை

செதுக்கிய அச்சுப் படிமை மறு நூலுக்குப் பயன்படாமற் போயிற்று.

நேரத்தையும் உழைப்பையும் குறைக்கப் புதுவழி காண வேண்டும் என்று அச்சுத்துறையில் நாட்டம் செலுத்திய நாட்டினர் அனைவரும் முனைந்தனர். இவர்களில் சீன நாட்டினரே, காகிதத்தையும் அச்சுமுறையையும் செம்மைப்படுத்தி முதலில் உலகிற்கு வழங்கியதைப் போன்று தனித்தனி அச்செழுத்துகளையும் உருவாக்கிக் கொடுத்துள்ளனர்.

தனித்தனி எழுத்து

கி.பி. 1041 முதல் 1049 வரை சீனாவை ஆண்ட சிங்லி காலத்தில் பி-ஷெங் (Pi-Sheng) என்வரே தனித்தனி அச்சை (Movable type) முதன்முதலில் கண்டுபிடித்தார். அவர் ஒரு நீண்ட சீனக் களிமண் துண்டை எடுத்துக் கொண்டு. அதில் நாணயத்தின் விளிம்புபோல் எழுத்து களைப் பொறித்தார். பொறித்த எழுத்துப் பகுதிகளைத் தனித்தனியாக எடுத்து நெருப்பில் இட்டுச் சுட்டார். இத னால் ஒவ்வோர் எழுத்தச்சும் உறுதியடைந்து கெட்டி யாயின. பிறகு ஓர் இரும்புத் தகட்டை எடுத்துக்கொண்டு. அதன் மேல் இரும்புச் சட்டத்தைப் பொருத்தினார். இதில் இப்போது சுட்டகளிமண்ணால் ஆன பீங்கான் அச்சுகள் அடுக்கப்பட்டன. அச்சுகள் நிறைந்த படிமை, நெருப்பில் சற்றுக் காட்டப்பட்டுச் சூடேற்றப்பட்டது. படிமையின் அடிப்பாகத்தில் பூசப்பட்ட பிசின் இளகத் தொடங்கிய வுடன், ஒரு வழுவழுப்பான மரப் பலகையைக் கொண்டு அச்சுகளின் மீது வைத்து அழுத்தித் தேய்க்கப்பட்டது. இந்த முறையில் அச்சுகள் சமமாகப்படிந்து, இரும்புத் தட்டு முழுவதும் எழுத்துகளோடு ஒன்றி, ஓர் உறுதியான அச்சுப் படிமையாக ஆனது. இதைக் கொண்டு பிறகு அச்சடிக்கப்பட்டது.

மேற்படி எழுத்துப் பகுதிகளாலான அச்சுப் படிமை யைக் கொண்டு ஒன்றிரண்டு பிரதிகள் அச்சீடு செய்வது கடினம்; ஆனால், ஆயிரக்கணக்கில் அச்சிடுவதற்கு இது மிகுந்த விரைவும் பயனும் உடையது. தற்காலப் பதிவு அச்சீட்டு (Stereo typing) முறையைப் போன்றது இது.

மேற்சொன்ன அச்சுகளைப் பொறுத்தமட்டில், ஒரு பக்கத்தில் அடிக்கடி வரக்கூடிய எழுத்துகளுக்குப் பல அச்சுகள் உருவாக்கப்பட்டன. பயன்படாத எழுத்துகள் தனியே எடுத்து ஒரு மரப் பேழையில் அடுக்கப்பட்டு, அவை ஒவ்வொன்றுக்கும் ஓர் அடையாளச் சீட்டு (Label) ஒட்டப்பட்டு வைக்கப்பட்டன. புதிய எழுத்துகள் ஏதாவது தேவையாயிருந்தால், வேறு களிமண் கொண்டு உருவாக்கிச் சூளையிட்டுப் பீங்கான் எழுத்தாக்கி வைத்துக் கொள்வார்கள். இவ்விவரங்களை ஹெங்குவா (1030-1093) என்னும் சீன எழுத்தாளர் குறிப்பிட்டுள்ளார். இவர் பி-ஷெங்கின் தனித்தனி அச்சுக் கண்டுபிடிப்பின் போது பத்தாண்டு நிரம்பப்பெற்ற சிறுவராக இருந்தவர். இவ் வச்சுகளை வைப்பதற்காக வேண்டி அமைக்கப்பட்டதே சுற்றி வரும் வட்ட வடிவமான மேசை (The Revolving Table). இதற்குச் சீன மொழியில் ஹோ-பான் (Ho-pan) என்று பெயர்.

உலோக அச்செழுத்து

சீனாவை அடுத்துள்ள கொரியாவில் சீனாவில் உண் டாக்கப்பட்ட தனித்தனி அச்சுமுறை பரவியது; அங்குக் கி.பி. 1232-லிருந்து 1241 வரையிலுள்ள காலத்திலேயே உலோக அச்செழுத்து (Metal type) பயன்படுத்துப்பட்டுள் ளது. கொரியாவில் கொரிய அச்செழுத்தும், சீன அச் செழுத்தும் உருவாக்கப்பட்டுள்ளன.

அச்சு மூசை (Type mould) முறையே அச்சுலை (Typo-graphy) கண்டுபிடிப்பிற்கு உரிய திறவுகோலாக இருந்தி ருக்கிறது. இந்த அச்சு மூசை முறையைக் கொரியர்கள்

வளர்த்து வந்தார்கள். ஆனால், ஐரோப்பிய அச்சு முறைக்கு இது வேறுபட்டதாகும்.

ஐரோப்பிய அச்சுமுறை, அச்சுகளை ஒரே மாதிரியாக உருவாக்கி, அவை ஒருங்கே பிணைந்து பொருந்தும்படி செய்கிறது. ஆனால், அச்சு மூறை, எழுத்துகளை ஒன்றாக இணைப்பதற்கு மெழுகுத் தகடோ, மூங்கில் பத்தையோ உலோகக் கம்பியோ வேண்டியிருந்தது.

சீனாவில் வெண்கல அச்செழுத்து 15ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டு வழக்கிற்கு வந்துள்ளது. நான்கிங்கில் வெண்கலத்திலும் ஈயத்திலும் அச்செழுத்துகள் உருவாக்கப்பட்டு வந்துள்ளன. இங்கிருந்துதான் ஜப்பான் போன்ற பகுதிகளுக்கு இவை பரவின. இம்முறையில் மேற்சொன்ன இடங்களில் கி.பி. 1770 முதல் 1797 வரை பல நூல்கள் அச்சடிக்கப்பட்டுள்ளன.

ஆனால், சீனாவிலும் கொரியாவிலும் ஜப்பானிலும் 19 ஆம் நூற்றாண்டில் மேற்சொன்ன முறையில் அச்சடிக்கப்பட்ட எழுத்தச்சுமுறை அடியோடு நின்றுவிட்டது. இதற்குக் காரணம் இம் மூன்று நாடுகளிலும் நெடுங்கணக்கு முறை (Alphabetic method) இல்லாமல், உருவ எழுத்து முறை (Ideograph method)யே பெருவழக்கத்தில் இருந்துவந்தாலும், அச்சுப் படிமையிலேயே அச்சிடுவது அங்குப் பொருள் சிக்கனமுள்ளதாகத் தோன்றியதாலுமாகும்.

சீனா போன்ற நாடுகளில் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட தனித்தனி உலோக எழுத்தச்சு முறையானது, ஐரோப்பாவில் அச்சுக்கலை கண்டுபிடிக்கப்படும் வரை வெளியில் தெரியாமலே இருந்துவிட்டது. இதனால் தான், ஐரோப்பாவே முதலில் இதைக் கண்டுபிடித்தது என்ற தப்பெண்ணம் நிலவ வழி ஏற்பட்டது. உண்மை துலக்கமான பிறகே, இத் தவறான கருத்து மாறி, எழுத்தச்சு முறையில் உண்டான நாடுகளுக்கு உரிய மதிப்புக் கிட்டியது.

இனி, தூரக் கிழக்கு நாடுகளில் தனித்தனி அச்செழுத்துகள் மூலம் ஏற்பட்ட அச்சு வளர்ச்சியைத் தொகுத்துப் பார்க்கலாம்.

இயங்கும் அச்சு (Movable type) சீனாவில் கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் பி-ஷெங்கினால் களிமண் அச்சு (Earthenware type)க் கண்டுபிடிப்பதன் மூலம் ஆரம்பமாகியது. அது மங்கோலியு ஆட்சியில் மர அச்சு (Wooden type) மூலம் வேண்டிய அளவிற்கு முன்னேற்றமடைந்தது. கி.பி. 1443-ல் கொரியாவில் வார்ப்பட அச்செழுத்துகள் (cast metal types) உருவாகி, பெருவாரியாகப் பயன்படுத்தப் பட்டதன் மூலம் அது தனது உச்சநிலையை எய்தியது. கொரியா முறை சீனாவுக்கும் பரவியது. அந்நாடுகளில் இருந்த வலிமை மிக்க அரசர்கள் இலக்கியத்தையும் கல்வியையும் சமயத்தையும் வளர்க்க அதனைப் பெரிதும் பயன்படுத்திக் கொண்டனர். என்றாலும் அது வர்த்தக முறையில் வெற்றிதரக்கூடியதாக இல்லாமலிருந்தது.

பின்னர் 16ஆம் நூற்றாண்டில் பழமையான அச்சுப் படிமை முறை எடுபட்டு, அவ்விடத்தை ஐரோப்பிய அச்சுக்கலை (Typography) பிடிக்க முற்பட்டு விட்டது. ஆனால். அச்சுக் கலையை ஏற்படுத்துவதற்கு எந்த ஒரு நாட்டின் எழுத்துருவங்கள் (Symbols) தடையாகவும் தொல்லை தருவதாகவும் இருந்ததோ அந்த நாட்டிலேயே உலகிலுள்ள வேறு எந்த நாட்டையும் மொழியையும் காட்டிலும். முதன் முதலாக அச்சுமுறை கண்டு பிடிக்கப் பட்டு அது கலையாகும் அளவிற்கும் வளர்க்கப்பட்டு விட்டது. இது பெருவியப்புக்குரிய ஓர் உண்மையாகக் காட்சியளிக்கிறது அல்லவா?

ஐரோப்பாவில் அச்சு வளர்ச்சி

ஐரோப்பாவிலும் பழங்காலத்தில் புத்தகங்கள் கையேட்டுப் படிகளாகவே இருந்தன. கையேட்டுப் படிகளைப் பிரதி எடுப்பதற்கும் வைத்திருப்பதற்கும் நிரம்பப் பொருளும் வசதியும் வேண்டியிருந்தன. காகிதப் பெருக்

கம் ஏற்பட்ட பிறகு எழுத்தர் (Scribes) களுக்கும் அழகிய கையெழுத்து வரைவோர் (Calligraphers) களுக்கும் அங்கு நிரம்ப வேலை கிடைத்தது. கி.பி. 11ஆம் நூற்றாண்டில் பெனிடிக்கடின் துறவிகள் (Bendictine monks) என்போர் இலத்தீன் இலக்கியத்திலிருந்து கையேட்டுப் படிகளைத் தயாரித்துத் தருவதில் ஈடுபட்டிருந்தனர். மடங்களிலும் கற்றறிவாளர்கள் வாழ்ந்த இடங்களிலும், பாரீஸ் போன்ற கல்விக்கு உறைவிடமான நகரங்களிலும் கையினால் எழுதிப்பிரதி எடுக்கும் வேலை, ஒரு தொழிலாகவே நடைபெற்று வந்தது. இத் தொழிலில் அழகிய கை யெழுத்து வரைவோர் மட்டுமன்றி, சிவப்பு மையினால் அச்சு வரைவோர் (Rubricators), அலங்கரிப்புச் செய்வோர் (Iluminators) புத்தகம் தயாரிப்போர் ஆகியோர் ஈடுபட்டி ருந்தனர். உதயத்திற்கு முன் விடிவெள்ளி தோன்றுவது போல் 14ஆம் நூற்றாண்டு வந்தது.

பக்கம் பக்கமாக அச்சீடுசெய்து படிமை நூல்களாக (Block books) ஆக்கும் செயல், கையேட்டுப்படியிலிருந்து நகல் எடுக்கும் அரிய உழைப்பைப் பேரளவு குறைந்து விட்டது. மர அச்சுப்படிமை நூல்கள் - மத போதனைக் காகவும் தெய்வ வழிப்பாட்டிற்காகவுமான படங்களை யும் கருத்துருவங்களையும் வெளிப்படுத்திப் புகழ் தேடித் தருவனவாக இருந்தன. என்றாலும் அவை நேரத்தையும் உழைப்பையும். பொருளையும் அதிகமாகவே உட் கொண்டன. ஒருமுறை ஒரு நூலுக்கு அச்சடிக்கப் பயன் பட்ட அச்சுப்படிமைகள் மறு நூலுக்குப் பயன்படக் கூடியனவாகவும் இல்லை; அவற்றை அடிக்கடி வேறு வேறாகச் செதுக்கி அச்சடிக்க வேண்டியதாயிருந்தது; ஆனால், இதற்கு நேர்மாறாகத் தனி எழுத்துகளாலான அச்சுகள் விளங்கின. அவை கோக்கப்பட்டு ஒரு நூலை அச்சடித்த பின்னரும் வேறு வேலைகளுக்கும் பயன்படக் கூடியனவாக இருந்தன; இப்போதும் இருக்கின்றன. இதனால் கால விரயமும் பொருட் செலவும் பேரளவு குறைந்து விட்டது. இது பெருத்ததோர் மாற்றம் அல்

லவா? இம் மாற்றத்தை யாவரும் வரவேற்பதில் வியப்பில்லை அல்லவா?

பக்கம் பக்கமாக அச்சுப்படிமை செய்து ஹாலண்டில் நூலாக அச்சிடப்பட்டு வந்ததை ஜான் கூட்டன்பர்க்கு பார்த்தார். இவர் 1399-ல் மெயின்ஸில் பிறந்தவர். அச்சுப் படிமையைப் பற்றிக் கூட்டன்பர்க்கு தமது சிந்தனையைச் செலவழித்தார். ஒவ்வொரு எழுத்துகளாகச் சேர்த்தால் என்ன, மரத் துண்டில் ஒரு பக்கத்திற்கு வரியாகச் செதுக் கித் தொல்லைப்படுவதைவிட எழுத்துகளாகச் செய்வது முன்னேற்றமாக இருக்குமே என்றெல்லாம் இவர் எண்ண மிட்டார். தம் எண்ணத்தைச் செயல்படுத்த திட்டமிட்டார். அச்சசுக்குத் தனித்தனி எழுத்துகளை உருவாக்கச் செதுக் கும் ஆற்றலும், பொறுமையும், காலமும் தேவைப் பட்டன.

அவர் முதன்முதலில் மரத்தில் தனித்தனி எழுத்து களைத் தலை கீழாகச் செதுக்கினார். தம்மால் உண்டாக்கப் பட்ட மர அச்செழுத்து முனையின் கூர், அழுத்தத்தின் காரணமாக மழுங்கி அழிந்துபோகக்கூடும் என்பதையும் உணர்ந்தார். எனவே, படிக்கக் கூடியதற்கு ஏற்ற தெளிவானதொரு பதிப்பைத் தரக்கூடிய அளவிற்கு உலோகத்தில் அவர் அச்சைச் செதுக்க வேண்டியதாயிற்று.

மரத்தில் எழுத்துகளைச் செதுக்குவதைக் காட்டிலும் உலோகத்தில் செதுக்குவது அதிகக் கடினமானதாகவும் இருந்தது. தனித்தனி உலோக அச்செழுத்துகளைச் செதுக்கியானவுடன், பதிப்பு எடுப்பதற்குச் செங்குத்தான அழுத்தத்தை (Direct perpendicular pressure) தர வேண்டி யிருந்தது. மேலும் இதுவரை எழுத்தர்களும் எழுத்துத் தகடு பதிப்பாளர்களும் (stencillars) அச்சுப்படிமை புத்த கம் அச்சிடுவோரும் (Block book printers) பயன்படுத்தி வந்த வண்ணப் பசையைக் காட்டிலும் வேறு வகையான - புதுமுறையான - மையைத் தடவ வேண்டி நேரிட்டது. இவைகளையெல்லாம் செய்து பரிசோதித்த பின்னரும், அவருக்கு எழுத்து - அச்சுப்பொறி (Letter press) ஒன்று

மிகவும் இன்றியமையாததாக வேண்டியிருந்தது. எனவே, இதனையும் அவர் காண வேண்டியவரானார்.

தொடக்க கால அச்சுப்பொறியானது (Printing press) சாதாரணமாகத் திருகுபொறி (Scew Press) போன்றும் முண்டு அழுத்தப் பொறி (cheese press) போன்றும், முண்டு அழுத்தப்பொறி (Napkin press) போன்றும் அமைந்திருந்தது என்கிறார் சார்லஸ் நைட் என்பவர்.

முதன் முதலில் அச்சுக்கூட கலைஞர் (Typographers) தமது முதல் நூலைப் பதிப்பித்த அச்சுப்பொறியின் அடிப்படையில்தான் இன்று உள்ள கையால் இயக்கப் படும் அச்சுப்பொறி (Hand Press)யும் அமைந்துள்ளது.

கூட்டன்பர்க்கால் முதன்முதல் உருவாக்கப்பட்ட தனித் தனி அச்சுஎழுத்துகளைக் கொண்டு அச்சுக்கோத்து, தோற்கடுதாசி (Parchment)யின்மேல் அச்சடிக்கப்பட்ட விவிலிய நூல் (Bible) தான், மிகவும் தொன்மை வாய்ந்த நூல்களில் ஒன்றாகும். இதற்காக ஒவ்வொரு நூலின் பிரதிக்காக வேண்டி 300 ஆடுகளின் தோல்கள் பயன் பட்டன. இவ்விவிலிய நூல் ஒரு பக்கத்திற்கு 36 வரி களைக் கொண்டது.

திருகு அச்சுப் பொறியைக் கூட்டன்பர்க்கு அமைத்துக் கொடுத்ததன் மூலம் மாற்றமுடியாத பாகங்களைக் கொண்ட பொறி நுணுக்கத்தை' மூன்று நூற்றாண்டுகள் வரை ஐரோப்பியா தன் தொழில்முறைக் கொள்கையாக ஏற்று நடத்தி வருவதற்கு வழி வகுத்தவரானார். மேலும், கை உழைப்பால் நடைபெற்று வந்த அச்சு வேலையை எந்திரக் கருவிமூலம் செய்ய வழி வகுத்துக் கொடுத்ததன் மூலம், கூட்டன்பர்க்கு மலிவான முறையில் தற்காலத்தில் அதிகம் பேர் படிப்பதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தவரானார்.

அச்சுக் கலையின் பிறப்பிடம் ஜர்மானிய நகரான மெயின்ஸ்தான். இங்கிருந்து கூட்டன்பர்க்கின் ஏற்பாட்

டடனும் பாஸ்டீன் ஒத்துழைப்புடனும் ஸ்கோபரின் கை வண்ணம் பட்டும் கி.பி. *1455*-ல் செம்மையாக அச்சுக் கலை உருவாகியது. மெயின்ஸில் அச்சிடும் கலை வளர்ச்சியடைந்து ஐரோப்பாவுக்குப் பரவியது.

அச்சும் கையெழுத்தும்

ஒவ்வொரு எழுத்தும் ஒழுங்காகவும், ஒவ்வொரு வரியும் நேரிதாகவும், ஒவ்வொரு பக்கமும் ஒரே தன்மையதாகவும், தெளிவாகவும், துலக்கமாகவும், விளங்கும்படி நன்றாகத் தேர்ச்சி பெற்ற எழுத்தாளர்கள் (Scribes) மையால் எழுதி நூலைக் கொண்ட வருவது முற்கால வழக்கமாகும். இம் முறையைப் பழங்கால அச்சடிப்பாளர்கள் எவ்விதக் கூச்சமுமின்றி அப்படியே பின்பற்றத் தொடங்கினர். இதனால், *1450* லிருந்து *1480* வரை அச்சடிக்கப்பட்ட நூல்களையும், கையால் வரையப்பட்ட நூல்களையும் வெளித்தோற்றத்தில் பார்க்கிற போது, எவ்வித வேறுபாடும் காணமுடியாது. ஆகையால், ஐரோப்பாக் கண்டத்திலே, நெடுநாள் வருந்தி உழைத்து அழகான கையெழுத்து நூலாக்கி, உயர்ந்த விலைக்கு விற்று வந்த எழுத்தர்களுக்கு, அச்சுப்படிகளை விரைவில் தயாரித்துக் குறைந்த விலைக்கு விற்க முற்பட்ட தொடக்ககால அச்சாளனைக் கண்டால் எரிச்சல் உண்டாகியது; அவர்கள் அச்சுப்படிகளைக் கண்டு வியபபடையாமல் ஆத்திரப் பட்டார்கள்! மனித உழைப்பினால் செய்வதைக் காட்டிலும் அச்சுமுறையின் மூலம் அச்சடிப்பாளனால் விரைவாகவும் மலிவாகவும் செய்ய முடிந்ததால், 'அச்சாளன் பேயின் கூட்டுறவு கொண்டே இப்படியெல்லாம் செய்கிறான்' என்று பொச்சரிப்பினால் தூற்றத் தொடங்கினார்கள். புதிய முறையில் உண்டாக்கப்பட்ட அச்சுப் பிரதிகளை வரவேற்காமல், சுயநலமிகளான அவர்கள், வைதீக மனப்பான்மையினால், அவற்றை நெருப்பிலே போடுங்கள்; அவற்றோடு அச்சாளனையும் உடன் சேர்த்து நெருப்பிலிட்டுப் பொசுக்கி விடுங்கள் என்று ஈவு இரக்கமின்றி அச்சத்தால் பிதற்றினர்!

தொடக்க கால அச்சாளர் இவ்வெதிர்ப்பைக் குறைக்க வேண்டி, அச்சுப்படிமை மூலம் அச்சிடப்பட்ட நூல்களைப் போலவே, கையெழுத்தில் ஈடுபட்ட எழுத்தர்கள் அனைவரும் தன்னைப் போலவே, பல படிகளை எளிதில் அச்சிட்டுக் கொள்ளலாம் என்று விளக்கிக் கூறி, இதற்குத் தொழிலாளியின் துணைதான் வேண்டுமேயொழி, சாத்தானின் துணை வேண்டியதே இல்லை என்று தெளிவுப் படுத்தி, எழுத்தர்களின் அச்சத்தைப் போக்கினர் அவர்களது மூடத்தனத்தை முறியடித்து, அச்சுக்கலையை வளர்க்க முற்பட்டனர்.

முற்காலத்தில் அச்சடித்த நூலும், கையால் எழுதப் பட்ட நூலும் தலைப்புப் பக்கம் இன்றியும், பக்க எண்ணும் இன்றியும் வெளியிடப்பட்டன. நூல்களைத் தயாரிப் போரின் விருப்பத்தைக் காட்டிலும் வாங்குவோரின் பிடித்தமே பெரிதாகக் கருதப்பட்டு வந்திருக்கிறது. எனவே தான், அச்சுக்கலையின் முதற்கொள்கையாகப் பழம் போக்கிலே போவது கடந்த ஐந்து நூற்றாண்டுகளாக அச்சுத் தொழில் காணப்படுகிறது என்று அறிஞர் ஸ்டேன்லி மாரிசன் என்பவர் கூறியுள்ளார்.

அச்சிடுவதற்காக முதலில் பயன்படுத்தப்பட்ட அச்செழுத்துகள், இடையில் துளையிடப்பட்டும் கயிற்றினால் ஒன்று சேர்க்கப்பட்டும் இருந்தன என்று ஆஞ்சலோ ரோக்கா (Anglo Rocca)என்பவர் 1591-ல் தெரிவித்துள்ளார்.

இம்மாதிரி துளையீடு (Perforation) தான் அச்செழுத்துக் கணையில் (Shank) முனைகத்திரிப்பு (Nicks)ச் செய்வதற்கு அடிகோலியது. பின்னர் துளையிடுவது எழுத்துகளைப் பலவீனப்படுத்தியதால், துளையிடுவதற்குப் பதிலாக முனை கத்தரிப்புச் செய்வது பெருத்த முன்னேற்றத்தைத் தந்தது.

அடுத்து, வார்ப்படக்கலை (Type founding) விஞ்ஞான முறையில் திருத்தியமைக்கப்பட்டது. இதனால், எழுத்துகளை இணைக்க நூலோ கம்பியா தேவையில்லாமல்

போய்விட்டது. பழங்கால அச்சடிப்பாளர்கள் தங்களுடைய வெளியீடுகளில் தங்களுக்கே உரிய இணைக்கப்பட்ட குறியீடுகளையோ (Monograms) சுன்னங்களையோ (Chiphers) பதித்து வந்தார்கள்.

1468-ல் கூட்டன்பர்க்கு இறந்ததற்கு பின்பு 15 ஆண்டுகளுக்குள் ஸ்வீடன் முதல் சிசிலி வரையிலும், ஸ்பெயின் முதல் போலந்து வரையிலும் விரிந்திருந்த மேற்கத்திய கிறிஸ்தவ உலகின் ஒவ்வொரு நாட்டிலும் அச்சகங்கள் ஏற்படலாயின.

15 ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பிற்பாதியிலும், 16 ஆம் நூற்றாண்டின் முதலாம் பிற்பாதியிலும் அச்சு வார்ப்படக்காரர் (Type founder), அச்சடிப்பாளர் (Printer), பதிப்பாளர் (Publisher), ஆசிரியர் (Editor), புத்தக விற்பனையாளர் (Book seller) என்பன போன்ற சொற்களெல்லாம் அதிக வேறுபாடில்லாமல் கையாளப்பட்டு வந்தன. ஒரே மனிதரோ அல்லது ஒரே மாதிரியான அமைப்போ மேற்சொன்ன எல்லா வகையான தொழில்களையும் பொதுவாக மேற்கொண்டு வந்ததால் தான் இவ்வாறு கருதப்பட்டது.

தமிழில் அச்சு

'வையமீன்ற தொல் மக்களை'க் கொண்ட தமிழகமானது, உலக நாகரிங்களில் தலைசிறந்த ஒன்றாகத் திகழ்கின்றது. இங்குதான் தொல்பெருங் காலத்தின் எல்லாப் பழங்கூறுகளையும் ஒருங்கே காணலாம்; தொன்மையான மலைத் தொடரையும், மொழியையும், தொன்மையான மக்கள் பயன்படுத்திய பழம் பொருள்களையும் அறிந்து பெருமை கொள்ள முடிகின்றது. இங்கு அறிஞர் பிலிப்ஸ் ஸ்கிலேட்டர் ஆய்ந்து கூறுவதைக் கவனிப்போம்: “மிக நீண்ட நிலப் பரப்பான லெமூரியாவானது இந்திய மாக்கடலின் வடமேற்குப் பகுதியில் பல லட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் நிலைத்து இருந்தது. இது கோண்டு

வானா நிலப்பரப்பு அழிவதற்கு முந்திய நிலையாகும். புவியியல் மாறுதலுக்கு ஏற்பத் தொன்மையான உயிர் வகைகள் தோன்றுவதற்கு லெமூரியா ஒரு பாலமாக இருந் திருக்கிறது.'' திரு. ஸ்கிலேட்டரின் இம் முடிவினைப் பூவியலாரும், உயிரியலாரும், செடி கொடியியலாரும், ஆழ்கடலியலாரும், பழம் பொருள் ஆய்வாளரும் ஆதரிக் கின்றார்கள். மாந்தரின் தொன்மையான வரலாற்றைப் புதிய விஞ்ஞானப்படி ஆராய்ச்சி செய்பவர்களும், லெமூரியாவானது வாலில்லா குரங்கிலிருந்து மாந்தன் உருவாவதற்கு ஏற்ற இடமாக ஒரு திறவுகோலாக அமைந்து காணப்படுகிறது என்று நம்புகிறார்கள்.[1]

இத்தகைய சிறப்புகள் ஒரு புறம் இருந்த காலத்தி லேயே சீனம் முதலிய மொழிகள் பிரிந்தன என்றும், கோட்டெழுத்தாக இருந்த காலத்திலேயே சமஸ்கிருதமும் மற்றுமுள்ள மொழிகளும் பிரிந்தன என்றும் வட்ட எழுத்தாயிருந்த காலத்திலேயே கன்னடம், தெலுங்கு மலையாளம் போன்ற மொழிகள் பிரிந்தன என்றும், இன் றைய தமிழ் எழுத்துச் சதுர எழுத்தாயிருக்கிறது என்றும். இந்த எல்லா வகையான மாறுதல்களையும் பெற்ற ஆதி மொழி தமிழே ஆகும் என்றும் பசும்பொன் முத்துராம லிங்கத் தேவர் பேசியுள்ளார் என்று அவரது ''தேவர் இதய நாதம்'' என்று நூலிலிருந்து மேற்கோள் காட்டியிருக்கிறது ''தமிழரசு'' இதழ். *(1.11.1978-ல்)*

இன்று உலகில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மிகப் பெரிய நாகரிக ஊரான மொகஞ்சதாரோவில் கருத்துருவப் படங்கள் 400 உள்ளன. இவை அகர வரிசையில் இல்லை,

---

"That a large land mass called Lemurita. continued to exist in the north western part of the Indian Occan many millions of Years, after the break-up of Gondwana land. Lemuria served as a bridge for the geographic dispersal of primeval fauna and flora. Sclater's hypothesis met with support from geologists, zoologists, botonists, oceanographers and Paleontologists. Specialists in the brand new science of the origin of man, paleoanthropology gave Lemuria a key place in the emergence of man, believing that this where the ape evolved into Homosapiens". see : "The Riddles of Three Oceans by Alexander Kondratou, (1974) published by Progress Publishers, Moscow, Page 121.

அசை வடிவலும் இல்லை; கருத்துருவப் படங்களாகவே காட்சி அளிக்கின்றன. இவற்றுள் குதிரையோ, தேரோ, ஆரைகள் கொண்ட சக்கரமோ காணப்படவில்லை என்றும் அவை நிலைத்து வாழ்ந்த நகர மக்களின் சிந்தனையைப் புலப்படுத்துகின்றன என்றும் சிந்துவெளி எழுத்துகளை ஆராய்ந்த அறிஞர் ஐராவதம் மகாதேவன் தமது சென்னைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற பேச்சு ஒன்றில் தெளிவுப் படுத்தியுள்ளார். நாடோடிகளாகத் திரிந்த ஆரியர் பற்றிய குறிப்புகள் அதில் காணப்படாததால், அவை பெரும்பாலும் திராவிட நாகரிகத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம் என்றும், ஆரிய வேதமான ரிக்குவிலும் திராவிடச் சொற்கள் காணப்படுகின்றன என்றும், திராவிடரின் பழமையான எண்ணங்களையே மொஞ்சதாரோ சின்னங்கள் சுட்டிக் காட்டுகின்றன என்றும் அவ்வறிஞர் மேலும் விளக்கப்படுத்தியுள்ளது இங்கு அறிந்து கொள்ளவேண்டிய ஒன்றாகும்.

எனவே, தமிழரின் மிகப் பழைய எண்ண உருவங்களை இந்த மொகஞ்சதாரோ சின்னங்கள் எடுத்துக்காட்டுகின்றன என்று நாம் கொள்ளலாம். இக் கருத்துருவத்தின் வளர்ச்சியாகக் குகை ஓவியங்களும் குகையில் பொறிக்கப்பட்டிருக்கும் எழுத்துகளும் உருவாகியுள்ளன.

தமிழரும் மரப்பட்டையிலும், ஓலையிலும் கல்லிலும் செப்பிலும் தங்கள் எண்ணத்தை, கருத்தை, மொழியைப் புலப்படுத்தி வந்துள்ளனர்.

மெதுவான பொருளான மரப்பட்டையிலும் ஓலையிலும் எழுதும்போது வரிவடிவம் ஒருவகையாகவும், கெட்டியான கல்லிலும் செப்பிலும் பொறிக்கும்போது வேறு வகையாகவும் வரி வடிவங்கள் அமைந்து காணப்படுவது இயற்கையேயாகும்.

ஓலையில் எழுத்தாணி கொண்டு வரையும்போது வளைவுகளும் சுழிகளும் ஏற்படுவது இயல்பே ஆகும். ஆகவேதான், பண்டைக்காலத் தமிழ் எழுத்துகள் வளைந்

தும் சுழித்தும் காணப்பட்டன. ஓலையில் புள்ளியிடுவது தவிர்க்கப்பட்டது. இதைப்போலவே கல்லில் புள்ளியிட்டால் கல் உடைப்பட்டு விடும் என்று அஞ்சியும், வளைவும் சுழியும் பொறிப்பது கடினம் என்றும் உணர்ந்தும் நேர்கோடுகளாகவே முற்காலத்தில் தமிழர்கள் பொறித்து வந்தனர்.

இந்த இருவேறு எழுத்து உருவங்களை எழுதும் பொருளை ஒட்டி அமைந்துள்ள உண்மையை நாம் மறந்து விடக்கூடாது. இந்த அடிப்படை உண்மைகளை அறிந்தே தமிழர்கள் தங்கள் மொழி வரிவடிவத்தை அமைத்துக் கொண்டு அதற்கு உகந்தபடி இலக்கணங்களையும் இயற்றிக்கொண்டனர். உலகில் வேறு எந்த மொழியிலும் முன்பே குறித்துள்ளபடி கருத்துருவம், எழுத்துருவம், போலியுருவம், ஓவிய உருவம் என மொழியடைந்துள்ள வளர்ச்சிகளைத் தமிழில் - தமிழ் இலக்கணங்களில் - தெரிவித்துள்ளதைப் போல் பிற மொழி நூல்களில் விளக்கிக் கூறப்படவில்லை என்பதையும் நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.

ஓலைச் சுவடிகளிலிருந்தும், கல்வெட்டுகளிலிருந்தும் பல்வேறு காலங்களில் படிப்படியாக வளர்ச்சி பெற்று இன்றைய வடிவத்தைத் தமிழ்மொழி பெற்றுள்ளது. மொகஞ்சதாரோ காலத்தில் படைக்கப்பட்டுள்ள கருத்துப் பட உருவங்களையோ, சீன மொழியில் இன்று வரை காணப்படும் பட உருவ எழுத்துகளையோ, தமிழ் மொழியில் நாம் காண முடியாதுதான் என்றாலும், நீண்ட நெருங்காலப்பாரம்பரிய கருத்துகளை இம்மொழியில் காணப்படுவதைப் போல உலகில் வேறு எந்த மொழியிலும் நாம் காண்பதற்கு இல்லை என்பதை உறுதியாகச் சொல்லலாம். உலகிலுள்ள எழுத்துகளைச் சித்திரம் போன்று சித்தரிப்பதால் சித்திர எழுத்து என்றும், குச்சிகளை உடைத்துச் சேர்த்தாற்போல் இருப்பதால் கோலேழுத்து என்றும், ஆப்புவடிவின் இருப்பதால் ஆப்பு எழுத்து என்றும் சொல்வர்.

சிந்துவெளிப் பட எழுத்துகளிலிருந்து தமிழ், சமஸ் கிருதம் முதலிய எழுத்துகளி தோன்றின என்றும், பினிஷிய எழுத்துகளிலிருந்து உரோமன் எழுத்துகளும் இவற்றிலிருந்து ஐரோப்பிய மொழிகளின் எழுத்துகளும் உண்டாயின என்பர்.

தமிழ் எழுத்தைக் கண்ணெழுத்து என்றும், கோலெ ழுத்து என்றும் தமிழ் இலக்கியங்கள் குறிக்கின்றன. ஏற்கெனவே எடுத்துச் சொல்லியிருப்பது போன்று தமிழ் மொழியானது ஓலையில் எழுதியும், கல்லில் வெட்டியும், செப்பில் பொறித்தும் வந்துள்ளதால் பொருள்களில் பதிப்பிப்பதற்கு ஏற்ற உருவங்களைப் பெற்று வளர்ந்து வந்துள்ளது.[1]

ஐரோப்பாவில் அச்சுமுறை தோன்றுவதற்கு முன்பே தமிழர் மேற்கூறிய முறைகளில் எழுத்துகளைப் பதித்து வந்ததோடு, களிமண்ணில் முத்திரையிட்டும், அரசர்கள் தங்கள் ஆதிக்கச் சின்னத்தைப் பொறித்தும், நெசவாளிகள் துணிகளில் பட உருவங்களை அழுத்திச் சித்திரித்தும் வந்துள்ளனர்.

தமிழ் நாட்டினர் களிமண்ணில் அச்சு செய்து சூளை யிட்டுச் செங்கல்லாக ஆக்கியுள்ளனர். கல்லில் செதுக்கிச் செய்வது கல்லுப் பிள்ளையார் என்னும், களிமண்ணால் கையால் உருவாக்குவதைக் கைப்பிள்ளையார் என்றும், அச்சு செய்து அதிலிருந்து பிள்ளையார் உருவத்தை உண் டாக்குவதை அச்சுப் பிள்ளையார் என்றும் அழைப்பதை இன்றும் பார்க்கிறோம். ஆகவே, அச்சு, அச்சிடுதல், அச்

"The Cheras to have used a curslve variety of Tamil-Brahmi script called Vattelethu (round script). The Pandyas seems to have adopted the Koeluthu (script straight lines) and the Cholas seems to have made use of a script which was a character from both Vatteluthu and Koteluthu. Perhaps the modern Tamil is derived from the ancient Chola script.

The Kannada, Telugu, Oriya and Sinhasleas are scripts which are characterised by curisve forms akin to the ancient Tamil Vatteluttu. The modern Malyalam scipt represents only an attempted simplificaton of ancient. Tamil Granta Script''-Sripts and around India' compiled by V. Kannian B.A. Government Museum Bulletin, Madras (1960).

சில் பதித்தல் ஆகிய சொற்கள் தமிழில் பழங்கால முதற் கொண்டு வழக்கத்திற்கு வந்திருக்கின்றன. திருகு பொறி யைப் போன்று, இங்கும் அதிரசம் எனும் பணியாரத்தை அழுத்தி, எண்ணெய்யைக் கசியச் செய்யும் பழக்கம் நெடுங்காலமாக இருந்து வருகிறது என்பதையும் நினை விற் கொள்ளவேண்டும்.

இப்படியெல்லாம் பழமையும் பெருமையும் பாரம் பரியமும் வளர்ச்சியும் பெற்றிருந்த தமிழகத்தில், தற்கால முறையில் அச்சிடும் முறையை அறிமுகப்படுத்தியவர்கள் கிறிஸ்தவ சமயப் பாதிரிமார்களே ஆவர். ஏராளமானவர் களுக்குத் தங்கள் சமயக் கொள்கையைப் பரப்பவேண்டும் என்னும் பேரவாவே அவர்களது அச்சடிப்புப் பணிக்குத் தூண்டுகோலாகவும் அச்சுக் கலைத் தோற்றத்திற்கு அடி யூற்றாகவும் இருந்து வந்திருக்கிறது எனலாம்.

சீனாவில் பி. ஷெங்கும், ஜர்மனியில் ஜான் கூட்டன் பர்க்கும், இங்கிலாந்தில் வில்லியம் காக்ஸ்டனும் அச்சுக் கலையை வளர்த்துள்ளனர் என்பது வரலாறு. இந்தியா வில் அச்சுக் கலையைக் கற்றுக் கொடுத்தவர், இந்தியா வின் அச்சகத் தந்தையாகக் கருதப்படும் ஜான் கொன் சால்வ்ஸ் என்னும் பாதிரியாரே ஆவர். இவரை இந்தியக் கூட்டன்பர்க்கு' என்று அறிந்தோர் பாராட்டுகின்றனர்.

அச்சகமானது முதலில் மெயின்னில் கி.பி.1439-ல் தோற்றுவிக்கப்பட்டதற்குப் பிறகு, இத்தாலியில் 1465-லும் பிரான்ஸில் 1470-லும், ஸ்பெயினில் 1414-லும், இங்கி லாந்தில் 1477-லும், டென்மார்க்கில் 1482-லும், ஸ்விட னில் 1483-லும், போர்ச்சுக்கல்லில் 1495-லும், ரஷ்யாவில் 1553-லும், இந்தியாவில் 1556-லும் ஏற்படத் தொடங்கி யது.

இந்தியாவில் கோவா நகரில் 1556-ல் போர்ச்சுகீசிய கிறிஸ்தவ - கத்தோலிக்கப் பாதிரிமார்களால் முதன்முத லில் ஓர் அச்சகம் நிறுவப்பட்டது. ஆனால். இதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே போர்ச்சுக்கல்லைச்

சேர்ந்த லிஸ்பன் நகரில் 1554-ல் கார்ட்டில்லா (Cartilla) என்னும் லூசோ-தமிழ்ச் சமய வினாவிடை என்கிற துண்டு வெளியீடு வெளியிடப்பட்டுவிட்டது! இதனை அன்று தென்னிந்தியாவிலிருந்து போர்ச்சுக்கல்லுக்குச் சென்றிருந்த வின்சண்டு நாசரத்து, ஜியார்ஜ் கார்வல்லோ, தாமஸ் தா கிரஸ் என்னும் மூன்று தமிழ் கிறிஸ்தவர்கள் போர்ச்சுக்கீய மொழியிலிருந்து தமிழில் எழுத்துகள் ரோமன் வரிவடித்தில் கொடுக்கப்பட்டிருந்தன.

இந்திய மொழிகளில் முதன்முதலாகத் தமிழ்மொழி ரோமன் வரிவடிவில் அச்சடிக்கப்பட்டு மேல் நாட்டில் வெளிவந்த நூல் இதுவேயாகும். இந்நூலின் ஒரே பிரதி லிஸ்பன் நகரில் உள்ள பெலம் (Belem)மனிதவியல் பொருட்காட்சிச் சாலையில் (The Ethnological Museum of Belem, Lisbon) அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டுக் காப்பாற்றப்பட்டு வருகின்றது. இந்நூலின் சிறப்பைப்பற்றி இதனை நேரில் கண்டு களித்த அறிஞர் தனிநாயகம் அடிகளின் சொற்களாலேயே அறிவோம்: கிறிஸ்தவ செபங்களையும் கொள்கைகளையும் தமிழ்மொழியில் பருத்த எழுத்துகளில் அச்சிட்டு அவற்றிடையே போர்ச்சுக்கீசு மொழியிலும் அதே செபங்களையும் பிறவற்றையும் அச்சிட்டிருக்கின்றனர்.

மேலும் தமிழ்ச் செபங்களின் மொழி பெயர்ப்பை ஒவ்வொரு சொல்லுக்கும் நேரே போர்க்சுக்கீச மொழியிலும் அதே செபங்களையும் பிறவற்றையும் அச்சிட்டிருக்கின்றனர். மேலும் தமிழ்ச் செபங்களின் மொழி பெயர்ப்பை ஒவ்வொரு சொல்லுக்கும் நேரே போர்ச்சுக்கீசு மொழியில் செந்நிறத்தில் அச்சிட்டிக்கின்றனர். இவ்வாறு கற்பிக்கும் புதுமுறைகளையும். இரு நிறங்களையும், திறமையான எழுத்துகளையும் கொண்ட நூலை ஐரோப்பிய அச்சு வரலாற்றிலேயே காண்பது அரிது. மேலும் இந்நூலின் நான்காம் பக்கத்தில் தமிழ் மொழியை உரோமன் எழுத்துகள் மூலமாக உச்சரிக்கும் பான்மை தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.'' - ''முதல் அச்சேறிய தமிழ்

நூல்கள்'' - தனிநாயம் அடிகள் எழுதிய கட்டுரை, கல்கி தீபாவளிமலர். 1958. பக்.188-92.

நிழற்படம் எதுவும் இந்நூலின் திறமையைக் காட்டும் வன்மையற்றது என்றும் அடிகள் மேலும் தெரிவித்துள்ளார்.

கோவாவில் அச்சகம் ஏற்பட்டதற்கு ஒராண்டு கழித்து 1557-ல் கொல்லத்திலும் கொச்சியிலும் அம்பழக்காட்டிலும் 1578-ல் புன்னைக் காயலிலும் வைப்புக்கோட்டையிலும் கத்தோலிக்கப் பாதிரிமார்களால் அச்சகங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

இந்திய நாட்டில் முதல் அச்சுக்கண்ட நூல் 1557-ல் கொல்லத்தில் அச்சடிக்கப்பட்ட 'தம்பிரான் வணக்கம்' (Doctrina Chiristam) என்னும் 16 பக்கங்கள் கொண்ட சிறு சமய வினாவிடை வெளியீடேயாகும். இதனைப் போர்ச்சுகீசிய மொழியிலிருந்து தமிழில் மொழி பெயர்த்தவர் ஹென்றி ஹன்றிகுவியஸ் பாதிரியாராவார். கி.பி. 1577ஆம் ஆண்டிலேயே கோவாநகரில் தமிழ் எழுத்துகள் முதன்முதலாக உண்டாக்கப்பட்டன என்றாலும், அவற்றிலுள்ள குறைகளை நீக்கி 1578ஆம் ஆண்டு கொல்லத்தில் வேறு எழுத்துகள் செய்யப்பட்டன. இவ்வெழுத்துகளைத் தம் கையினால் வருந்தி உழைத்து வடித்துக்கொடுத்தவர் முன் கூறிய கொன்சால்வ்ஸ் ஆவர். இந்த வெளியீட்டின் 16 ஆம் பக்கத்தில் முதல் எட்டுப் பக்கங்கள் கோவாவில் உருவாக்கப்பட்ட எழுத்துகளாலும் மற்ற எட்டு பக்கங்கள் கொல்லத்தில் செய்யப்பட்ட எழுத்துகளாலும் அமைக்கப்பட்டன என்று குறிக்கப்பட்டுள்ளன. இவ் வெளியீட்டின் முதல் பக்கம் மரத்தினால் செதுக்கப்பட்டுள்ள சித்திர வேலைப்பாடுகளைச் கொண்டு போர்ச்சுகீசிய மொழியில் தலைப்பேடாக, 'Doctrina Chirstam en Lingua Malabar Tamul' என்று மேற்பக்கத்தில் குறிக்கப்பட்டுள்ளது. இது தான் முதன்முறையாக இந்திய மொழிகளில் ஒன்றான தமிழ் வரி வடிவில் அச்சிடப்பட்டுள்ளதாகும். சீனத் தாளில் ஒரு பக்கம் மட்டும் அச்சிடப்பட்டு, சிவப்பு வண்

ணம் தரப்பட்டுள்ளது. இவ்வெளியீட்டின் விவரத்தை ஜார்ஜ் ஸ்கர்ஹாம்மரும் காஷ்ட்ரல்லும் ஹாவர்ட் நூல் வெளியீட்டின் மடலம்-6, இதழ் 2-வ் (1952) 147-60 பக்கங்களில் கொடுத்துள்ளனர்.[1]

மேலும், இப் பாதிரியாரால், 'கிரீசித்தயானி வணக்கம்' என்று தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட 122 பக்கங்கள் கொண்ட மற்றொரு நூலும், கொச்சியில் 1566-ல் அச்சிடப்பட்டது. அன்றியும் 666 பக்கங்கள் கொண்ட 'கிறிஸ்தவ வேதோப தேசம்' எனும் பில சாங்தோரும் (Flos sanctorum) என்ற பெரிய நூலையும் இயற்றி வைப்புக்கோட்டையில் அச்சிட்டு வெளியிட்டவரும் இவரே ஆவர். மேலும், இவர் தமிழ் மொழி இலக்கணத்தை ஐரோப்பியர் தெரிந்துகொள்ளும் வகையில் இயற்றியுள்ளார். தமிழ்நாட்டில் முதல் அச்சகம் நிறுவுவதற்கும், தமிழ்ப் பல்களைக்கழகம் காணுவதந்கும் முற்பட்டவரும் இவரேயாவர்.

பிரோ லூயிஸ் (pero Luis)என்னும் கிறிஸ்தவ மதம் மாறிய பார்ப்பனரைக் கோவாவிற்கு அனுப்பி, ஹென்றிக்குஸ் பாதிரியாரின் 'டாக்டிரினா கிறிஸ்தா' என்னும் கொச்சியில் 1579-ல் அச்சடிக்கப்பட்ட நூலின் தமிழ் அச்சு முறையை ஒழுங்குபடுத்தப் பணித்துள்ளனர் என்னும் செய்தி 24-12-1576-ல் எழுதப்பட்ட பாதிரிமார் கடிதத்தால் தெரிய வருகிறது.

அப்பழக்காட்டு அச்சகத்தில் 1675-ல் கத்தோலிக்கரான தத்துவபோதகர் என்னும் த-நோபிலி எழுதிய 'ஞானோபதேச காண்டம்', முதலாம் இரண்டாம் பகுதியின் முதற் பதிப்பும் 1677-ல் அங்கு அச்சடிக்கப்பட்டள்ளது. 1679ஆம் ஆண்டில் இதே அச்சகத்தில் புறோயென்சா (Antae Proenca) என்னும் மற்றெரு போர்ச்சுகீசிய பாதிரியாரரால் தயாரிக்கப்பட்டதும், இன்னாசி ஆச்சமெணி (Ignatius Achamani) என்னும் தமிழரால் தமிழ் எழுத்துகள் மரப்

See George Schurhammer and G.W. Cottrol Jr.Harwared Library Bulletin Vol. VI No, 2(Spring 1957) pp.147-60

படிமையால் செதுக்கப்பட்டதுமான 'போர்ச்சுகீஸ் - தமிழ் அகராதி' ஒன்று அச்சடிக்கப்பட்டது. இதன் மூலப்படி ஒன்று வத்திகன் நூல் நிலையத்தில் இப்போது உள்ளது. இதனை அப்படியே புகைப்பட முறையில் (Photostarts copy) அச்சடிக்கப்பட்ட நூலைத் திரு. தனிநாயகம் அடிகள் தலைமையில், முதலாவது உலகத் தமிழ் கருத்தரங்கு மாநாட்டின் போது 1966-ல் கோலாலம்பூரில் வெளியிட்டுள்ளனர். தெற்கோஸ்ற பாதிரியாரால் எழுதப்பட்ட தமிழ் இலக்கணம் 1679-ல் அம்பழக்காட்டு அச்சகத்தில் அச்சாகியது.

கிறிஸ்தவச் சீர்திருத்தப் (Protestant) பிரிவினரால் தமிழ் அச்சடிப்பு, முதன்முதலில் ஐரோப்பாவில் 1671-ல் ஜோன் போர்ஸ்டியஸ் (John Borstius) என்பவரால் இராட்டர்டாமில் நடந்தேறியுள்ளதாக ஈ ஆர்னோ லெஃமன் தமது நூலொன்றில் கூறியுள்ளார்.[1]

கிழக்கிந்திய மலபார்க் கரையைப் பற்றியும், சோழ மண்டலக் கரையைப் பற்றியும் 1672-ல் ஆம்ஸ்டர்டாமில் உண்மையாகவும் முழு விவரமாகவும் குறிப்பிட்டுள்ளார் பி.எச். பல்தேயுயஸ் (B.H. Baldaeus) என்பவர். இக் குறிப்பில் இரண்டு பக்கங்கள் கொண்ட 'மலபார் எழுத்துகள்' தமிழ் வரிவடிவில் தரப்பட்டுள்ளனவாம்.[2]

மார்ட்டின் லூதரின் சமய வினாவிடைதான் - தமிழில் மொழி பெயர்த்து, ஆசிய மொழிகளிலே முதன்முதலாக வெளியிடப்பட்டது என்றும் சொல்லப்படுகிறது.[3]

1710-ல் ஜெர்மனி நாட்டிலுள்ள ஹாலே (Halle) என்னும் நகரில் தமிழ் அச்செழுத்துகள் உலோகத்தால்

---

1. "The very first Tamil printing was done by a protestant about 1671 in Europe by John Boristitus in Rotterdam" - see It Began at Tranquebar by E. Arne Lehman translated from the German by M.J. LutZ, published by C.L.S. Madras.

2. In 1672 there appeared in Amsterdam a true and complete description of the famous East Indian coast of Malabar and Coramandal By P.H. Baladeus In Which there are two pages of Malabar writing in Tamil letters''-Ibid, page.I

3. The Tamil Catechisim was the first translation of Luther's Catechisim into an Asian languages''-Ibid p.97.

வார்க்கப்பட்டன. இவ்வெழுத்துகளைக் கொண்டே சில தமிழ் வெளியீடுகள் இங்கு அச்சிடப்பட்டுள்ளன.

இவற்றை எல்லாம் தொகுத்து ஒருசேரப் பார்க்கும் போது, இந்திய மொழிகளில் ஒன்றான வரிவடிவம் பெற்று மொழி பெயர்க்கப்பட்டதும், முதன்முதலில் அச்சுருவம் மரத்தில் செதுக்கப்பட்டதும், அச்செழுத்துகள் வார்க்கப்பட்டதும், வெளியீடுகள் வெளியிடப்பட்டதும், அச்சுப்புத்தகம் தயாரிக்கப்பட்டதும், தமிழ் மொழியில் தான் என்பதையும் மலையாள மொழியில் அன்று என்பதையும் ஐயந்திரிபற முடிவு கட்டலாம். மலையாள மொழி அக்காலத்தில் கொடுந் தமிழாகவும், தமிழின் கிளை மொழியாகவும் இருந்துள்ளது.[1] ‘மலையாள மொழி’ என்ற ஒன்று நன்கு அமையாமலும் அதற்கெனத் தனி இலக்கணநூல் எதுவும் அப்போது ஏற்படாமலும் இருந்த காலம் அது.[2]

பொதுவாக இந்தியாவில் புதிதாக அச்சுக்கலை தோற்றுவிக்கப்பட்ட போதும் ஐரோப்பியக் கையெழுத்தர் (Scribes) களைப் போல் இங்கு ஓலைச் சுவடிகளை எழுதிப் பிழைப்போர் பெருத்த எதிர்ப்புக் காட்டவில்லை. பொது மக்களும் புதிய கலையை - எழுதா எழுத்து வேலையை - புதுமையானதாக இருந்தும் வரவேற்றனர். தமது சமயத்திற்கு மாறுபட்டவர்களால் அது தோற்று விக்கப்பட்டாலும் சமய வேறுபாடு சாரணமாக அச்சுக் கலையை ஒதுக்கிவிடவில்லை; மாறாக அதனை ஆதரித்த னர். அதற்காகப் பிற சமயத்தினரும் உதவிச் செய்ய முன் வந்தனர்.

---

1. 'It willl be thus be seen that the first Indian script of which types were prpared was Tamil and not Malayalam. At that time Malayalam was consideed as a subsidiary branch of Tamil, and it was not until a much later date tlat Malayalam was reduced to print'' see Printing Press in India its beginings and early development'' by prof . Anand Kakba Priloka (Director of Mrathi Samshodhana Mandala,Bombay). 1955, page 11.

. "This language then Kodum Tamil which was spoken also in Malabar, the regions of mountains was called from the sixteenth century on by the Europerans ‘Malabaree’. This usage continued upto the last century'' see 'It Begal at Tranquebar' by E. Arno Lehmann, p23.

கடற்கரையோரங்களின் மீன் பிடிக்கும் பகுதியில் வாழ்ந்து வந்த முத்துக் குளித்துறைப் பரவர்கள், முதல் அச்சகம் ஏற்பட நிதி உதவினர். அச்சடிக்கப்பட்ட முதல் நூல்களைக் கண்டு வைதீக மனப்பான்மையினர் போல் கண்ணை மூடிக் கொள்ளாமல், வியப்புடன் பார்த்துக் களித்தனர்; கிறிஸ்தவர்களும் கிறிஸ்தவரல்லாதவர்களும் சேர்ந்து எக்காளமிட்டு எதிர் கொண்டழைத்தனர். கவிஞர் ஒருவர் தாம் கண்ட காட்சியை வியந்து பாராட்டுரையாகக் கவிதையில் பொழிந்து விட்டார். இப்படிப்பட்ட விவரங்கள் ஏசு மதப்பாதிரிகளின் கடிதங்களாலும், கொச்சியில் 1579-ல் அச்சிடப்பட்ட 'கீரிசித்தியானி வணக்கம்' என்னும் நூலின் முன்னுரையாலும் தெரிய வருகின்றன. தமிழ் மொழி அச்சுக் கண்டதால் தமிழ் இனத்தவருக்கு உலகிலே பெரும் புகழ் உண்டாகியது என்பதைக் குருக்கள்மார் கூறியிருக்கின்றனர்.

முத்துக் குளித்துறையில் வாழும் பரவ மக்களது பெருந்தன்மையினால் 1577-லேயே தமிழுக்கு அச்செழுத்துகள் உலோகத்தினால் உருவாக்கப்பட்டுவிட்டன!

பார்த்திலோமிய சீகன்பால்கு ஐயர் (1683-1716) ஜெர்மானிய நாட்டவர்: ஏசுமத ஊழியம் புரியத் தமிழகத்திற்கு வந்து, தரங்கம்பாடியில் தொண்டாற்ற முற்பட்டவர். இவர் கிறிஸ்தவ மதச்சீர்திருத்த (புரோடஸ்டெண்டு) பிரிவைச் சேர்ந்தவர். தமிழ் மொழியை மிக ஆர்வத்துடன் மணலில் எழுதிக் கற்றும், ஓலைச்சுவடிகளில் வரைய முற்பட்டும், தமிழறிந்தார் வாயிலாகத் தமிழ் இலக்கியங்களை விளக்கக் கேட்டுச் சுவைத்தும் இன்புற்றவர். தாம் வாழும் பகுதியிலுள்ள தமிழரைப் போலவே பேசவும் முயன்று தமிழராகவும் மாறிவிட்டவர்!

இவர்தான் முதன்முதலாகத் தமிழகத்தில் அச்சகம் ஒன்றை 1710-ல் நிறுவியவர் ஆவர். அதன் மூலமாகப் பல கிறிஸ்தவச் சீர்திருத்தத் துண்டு வெளியீடுகளையும், முதன் முதலாகப் புதிய ஏற்பாட்டைத் துணிச்சலுடன் தன்னந்தனி

யாகத் தமிழ் மொழியில் மொழி பெயர்த்தும் வெளியிட்ட பெருமையும் சீகன்பால்கு ஐயரையே சாரும். சீர் திருத்தப் (புராடஸ்டெண்டு) பிரிவு கிறிஸ்தவ சமயக்கொள்கையை முதன்முதலில் தமிழ் நாட்டில் வேரூன்றச் செய்த சமய போதகர் சீகன்பால்கே ஆவர். சிறுவர் சிறுமியர்க்குப் பள்ளிக்கூடங்களை நிறுவி, தொழிற்கூடங்களை அமைத்துத் தொண்டு புரிந்தவர். இலத்தீன் மொழியில் தமிழ் இலக்கணத்தை (Grammatica Tamulica-1716) எழுதி, மேல் நாட்டினரும் தமிழின் மேன்மையை அறியச் செய்தவர். தமிழ் இலத்தீன் அகராதியின் சில பகுதிகளை அச்சிட்டு பதிப்பித்தவர். தம் தாய்மொழியான ஜெர்மன் மொழியையும் மறவாது, தமக்குள்ள இசைப் பிடிப்பையும் விடாது, அப்பற்றும் இனிமையும் தமிழில் இசைப்பாடல்களாக - மேனாட்டு மெட்டிலும், இந்நாட்டுப் பண்ணிலும் (ஞானப்பாடல்கள் - 1715) அமையப் பாடியவர். மேலும் இவர் திருச்சபை ஆலய வழிபாட்டுக் கூட்டத்தில் இந்திய முறையில் இசைப்பாடல்களிலே செய்துவரும் (Sermon - in-song) பழக்கத்தை அறிமுகப்படுத்தி வைத்தவர். சீகன் பால்கு ஐயர் அச்சுத் தேவையை உணர்ந்து, தமது கடிதம் மூலமாக எழுதியனுப்பி வைத்த தமிழ் எழுத்துகளைப் பார்த்தே, தமிழை முன்பின் அறியாத ஜெர்மானியர், தமிழ் அச்செழுத்துகளை உருவாக்கினர். இவர் தரங்கம்பாடியில் தமிழ் அச்சகத்தை 1712-ல் ஏற்படுத்தியதோடு. சிறிய வடிவில் அச்செழுத்துகளை உருவாக்க வார்ப்படச் சாலையையும் (Type foundry) அமைத்தவர்; பொறையாற்றில் இந்தியாவில் முதன்முறையாகக் காகித ஆலையையும் நிறுவினவர்; மை தயாரிக்கவும் திட்டமிட்டவர்.

இவர் தம் மதப் பரப்புதலோடு நின்றுவிடாது, நூல்கள் வெளியிடுவதோடு வாளாவிராது, இத்தென்னாட்டு மக்கள் பின்பற்றும் சமயம் பழக்க வழக்கம் முதலியவற்றை மேனாட்டினரும் அறிந்துகொள்ளும் வகையில், இந்நாட்டுக் கடவுளர் வரலாறுகளையும் (Genealogv of the Malabar Gods-1713) இந்நாட்டு உருவ வழிபாட்டு முறை

களைப் பற்றியும் (Heathenism and miscellaneous writings - 1711), நீதிவெண்பா, கொன்றை வேந்தன், உலக நீதி முதலியவற்றில் பொதிந்துள்ள மேன்மையான கருத்து களை விளக்கி எழுதியும் வெளியுலகு அறியும் வண்ணம் செய்துள்ள தொண்டு மிகுதியும் பாராட்டத் தகுந்ததாகும். இந்திய இயலை (Indology) பற்றி முதலில் கவனம் செலுத்திய ஜெர்மனியர் சீகன்பால்கு ஐயரே ஆவர். இவர் தரங்கம்பாடியில் மடிந்து அழியாப் புகழ் பெற்றார்.

இவருக்குப் பின்வந்த சூல்ச்சையரால் மொழி பெயர்க் கப்பட்ட 'பரதீஸ் தோட்டம்' என்னும் 532 பக்கங்ள் கொண்ட நூலும் 'ஞானமந்திர பூங்காவனம்' (இது நான்கு பாகங்கள் கொண்டது) எனும் நூலும் ஜெர்மனி ஆலே நகரில் 1749-ல் அச்சிடப்பட்டுள்ளன.

இலங்கை ஒல்லாந்த வணிகக் குழு ஆட்சியினரால், ஹாலந்துக்கார அச்சுக்கூடம் 1741-ல் கொழும்புவில் அமைக்கப்பட்டது. இங்கு பல்தேயுஸ் பாதிரி மொழி பெயர்த்துக் கொடுத்த மத்தேயேஸ் சுவிசேஷம் பலரால் திருத்தப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. ஒல்லாந்த அரசாங்கம் சார்பில் 1742-ல் இங்கு 4 சுவிசேஷங்களும் அச்சிடப்பட்டுள்ளன. பிலிப்பு தெமெல்லோ என்னும் இலங்கைத் தமிழரான பெரிய மத குருவால். கிரீக்கு மொழி மூலத்தின் பொருள் கெடாமலும். அதே நேரத்தில் தமிழ் நன்னூலின் விதிமுறைகள் மீறப்படாமலும் மொழி பெயர்த்துக் கொடுக்கப்பட்ட தமிழ்ப் 'புதிய ஏற்பாடு' 1759-ல் மேற்படி அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியாகி யுள்ளது. இப்புதிய ஏற்பாட்டில் 13 பக்கத்தில் ஒல்லாந்தர் மொழியிலும் 17 பக்கத்தில் தமிழிலும் முன்னுரை உள் ளது. இவர் இயற்றிய கிறிஸ்தவ சமய நூல்களும், மருதப் பர் குறவஞ்சி, சூடாமணி நிகண்டின் 12ஆம் தொகுதியில் கூடுதலாகச் செய்து கொடுத்த 100 பாட்டுகள்(1859) ஆகியவை இங்கே அச்சாகியுள்ளன.

1684-ல் போர்ச்சுகீசியரால் பிறப்பிக்கப்பட்ட கட்டளையின்படி உள் நாட்டு மொழிகளில் அச்சிடுவது

தடுக்கப்பட்டுள்ளது. அவர்களுக்குப்பின் இந்நாட்டிற்குள் நுழைந்த பிற ஐரோப்பியரும் ஆதிக்கம் செலுத்த முற்பட்டபோது இம் முறையையே பின்பற்றியதால், 1824 வரை இந் நாட்டைச் சேர்ந்தவர்களால் அச்சகம் அமைக்க முடியவில்லை!

ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக்கழகம் இந்தியாவைக் கட்டியாள முற்பட்ட போது, இந்தியாவுக்குள் எந்த மிஷனரியும் வரக்கூடாது என்றும், இந்துக்களையாவது இஸ்லாமியரையாவது கிறிஸ்தவர்களாக்குவதற்கு எவ்வித முயற்சியும் செய்யக்கூடாது என்றும் கட்டளையிட்டிருந் தது. ஆகவே தான், டென்மார்க்கினர்க்குச் சொந்தமா யிருந்த தரங்கம்பாடியிலும் ஒல்லாந்ருக்குச் சொந்தமா யிருந்த இலங்கையிலும் போர்ச்சுக்கீசியருக்குச் சொந்தமா யிருந்த கோவா போன்ற பகுதிகளிலும், பிரஞ்சுக்காரருக் குச் சொந்தமாயிருந்த புதுச்சேரி போன்ற பகுதிகளிலும் மட்டுமே கிறிஸ்தவப் பரப்புதல் நடைபெற்று வந்தது. பின்னர், விக்டோரியா பேரரசியின் நேரடி ஆட்சியின் கீழ் இந்தியா கொண்டுவரப்பட்ட பிறகுதான், மத சுதந்திரம் அளிக்கப்பட்டு, முன்பிருந்த கட்டுப்பாடுகளும் தடை களும் நீக்கப்பட்டன.

டேனிஷ்காரர் தரங்கம்பாடியை இங்கிலிஷ்காரருக்கு 1845-ல் விற்று விட்டனர்.

மேற்சொன்னவர்களிடம் இருந்த இடங்களில் அச்ச கங்கள் நிறுவப்பட்டு, சமயப் பரப்புதல் வேலைகள் நடை பெற்று வந்தன. கிறிஸ்தவ அறிவு பரப்புச் சங்கம் (Society for promoting Christing Knowledge) 1698-ல் காணப்பட்ட தாகும்; இந்த அமைப்பில் ஜெர்மனி, டென்மார்க்கு, ஹாலந்து, இங்கிலாந்து, ஸ்வீடன், இத்தாலி, அமெரிக்கா போன்ற பல்வேறு நாட்டினர் கலந்து கொண்டு சமயப் பணிபுரிந்துவந்தனர்.

இவ்வாறாகச் சென்ற நூற்றாண்டுகளிலே கிறிஸ்தவ சமயத்தினர் - அவர்கள் கத்தோலிக்கராகவோ, சீர்திருத்தப்

(புராடெஸ்டெண்டு) பிரிவினராகவோ இருந்தாலும் துண்டு வெளியீடுகளையும், ஒற்றைத்தாள் அறிக்கைகளை யும், சமய வினாவிடை விளக்கங்களையும், மொழி பெயர்ப்பு நூல்களையும், புதிய அறிவியல் நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளனர். மேலும், இவர்கள் தான் திங்கள் இதழ்கள், வார இதழ்கள், செய்தித்தாள்கள் முதலியவற்றையும் முதல்முதலாக அறிமுகப்படுத்திச் சமயப்பரப்புதலோடும் பொது அறிவையும் விளக்கம் செய்து வந்துள்ளனர்.

கிறிஸ்தவர்களின் வரவினால்தான் இந்தியாவிலும், தமிழகத்திலும் பிற பகுதிகளிலும் அச்சகங்கள் ஏற்படலா யின; இலக்கணங்கள் உரைநடையில் எளிதாக அமைக்கப் பட்டன; பத்திரிகைகள் தோன்றின. ஓலைச்சுவடிகளில் மட்டுமே கிடந்த இலக்கிய இலக்கண மருத்துவப் பகுதி கள் கிடைத்த வரை அச்சிடப்பட்டு அழியாமல் காப்பாற் றப்பட்டன. மேனாட்டு முறையை யொட்டி இந்நாட்டில் புதிய முறையில் கல்வி திட்டங்கள் மாற்றியமைக்கப் பட்டன. மலையாளம், துளு போன்ற மொழிகளுக்கு இலக்கண நூல்கள் எழுதி அளிக்கப்பட்டன.

சமயப் பரப்புதலே கிறிஸ்தவ ஊழியத்தின் அடிப் படையாக இருந்தாலும், மக்களுக்குக் காலத்திற்கு ஏற்ற முறைகளையும், துறைகளையும் அறிமுகப்படுத்தி அவற் றிலும் அதிக கவனஞ் செலுத்தி, பெருந்தொண்டு ஆற்றி யிருக்கிறார்கள் கிறிஸ்தவ பாதிரிமார்கள். தமிழ் மொழி யையும், தமிழரையும் தமிழ் இலக்கண இலக்கியங்களை யும் தமிழகப் பழக்க வழக்கங்களையும் நன்கு அறிந்து, தமது தாய்மொழிகளில் அவற்றைப் பற்றி எடுத்தோதி அச்சிட்டு வெளிப்படுத்தி, உலகத்திற்கு நல்ல விதத்தில் அறிமுகம் செய்து வைத்துள்ளார்கள். அச்சும் அச்சகமும் அவர்களால் பயன்படுத்தப்படாமல் இருக்குமானால் மொழிகளின் பெயரும் சிறப்பும் வரிவடிவமும் ஆதிக்க மொழியால் அழித்து ஒழிக்கப்பட்டு பூண்டற்றதாகச் செய்யப்பட்டிருக்கும்!

கிறிஸ்தவர்களது இடையறாத சமயத் தொண்டினைக் கண்டும், அவர்களால் ஏற்படும் மதமாற்றுதலை அறிந்தும் இந்து, இஸ்லாமிய, பௌத்த, ஜைன சமயத்தினரும் விழிப்புற்று எழுச்சி பெற்று, முன்னவர் செய்து வந்த பல துறைகளிலும் தாமும் ஈடுபட நாட்டங்கொண்டனர். முன்னவர் பெருமுயற்சியே பின்னவருக்கு வழிகாட்டி யாகவும் அமைந்து காணப்பட்டது.

பழைய அச்சகங்கள்

கி.பி. 1500-ல் தென்னிந்தியாவிலுள்ள அம்பழக்காட்டில் கத்தோலிக்க ஏசுசபை ஏற்படுத்தப்பட்டது. அங்கு அமைக்கப்பட்டிருந்த அச்சுக்கூடத்தில் பல தமிழ் வெளியீடுகள் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன. 1557-ல் கொச்சியிலும் பின்னர் கொல்லத்திலும் வைப்புக் கோட்டையிலும் புன்னைக்காயலிலும் கத்தோலிக்கப் பாதிரிமார்களால் அச்சகங்கள் அமைக்கப்பட்டுத் தமிழ் வெளியீடுகள் கொண்டுவரப்பட்டுள்ளன. கோவாவிலும் கொச்சியிலும் தமிழ் அச்சு எழுத்துகள் உலோகத்தில் வார்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. ஜெர்மனியில் ஆலே நகரிலும் 1710-ல் அச்சு எழுத்துகள் வடிக்கப்பட்டுள்ளன; நூல்களும் அச்சிடப்பட்டுள்ளன.

தமிழகத்தில் 1712-ல் சீர்திருத்த (புராடெஸ்டண்டு) பிரிவினரால் தரங்கம்பாடி அச்சகம் ஒன்று அமைக்கப்பட்டது. அச்சு வார்ப்படச்சாலை முதன்முதலாக நிறுவப்பட்டது. காகித ஆலை ஏற்படுத்தப்பட்டது; மை தயாரிக்கவும் திட்டமிடப்பட்டது. இங்குப் பல நூல்கள் சமய சார்பின தாகவும் சார்பில்லாததாகவும் வெளியிடப்பட்டுள்ளன. தரங்கம்பாடி அச்சகம் இடையில் தொய்வுபட்டிருந்தும் இன்றும் சென்னையில் நடைபெற்று வருகிறது. தமிழகத்தில் நிலைத்துள்ள பழைய அச்சங்களில் இது முதலிடம் பெற்றுள்ளது.

இலங்கையில் ஒல்லாந்த வணிகக் குழுவின் ஆட்சியின் போது, ஹாலந்துக்காரர் அச்சுக்கூடம் 1742-ல்

கொழும்புவில் அமைக்கப்பட்டு இயங்கிவந்தது; பல நூல்களை வெளியிட்டது. 1840-ல் வட்டுக்கோட்டை அச்சகம், அமெரிக்கமிஷனால் நடத்தப்பட்டது. இங்கு 1870-ல் கத்தோலிக்கத் திருச்சபை பிரஸ் (கொழும்பு), வச்சிர யந்திர சாலை (யாழ்ப்பாணம்) கத்தோலிக்க அனாதை அச்சகம் (மட்டக்களப்பு) எனும் அச்சகங்கள் நடத்தப் பட்டுள்ளன.

சென்னை நகரில் 1779-ல் வேப்பேரி மிஷன் பிரஸ், 1812-ல் சர்ச் மிசியோன் அச்சுக்கூடம், 1813-ல் சென்னைக் கோட்டைக் கல்லூரி பிரஸ், 1831-ல் செயின்ட் ஜார்ஜ் கெஜெட் பிரஸ், 1836-ல் கல்வி விளக்க அச்சுக்கூடம், 1836-ல் மதராஸ் லாரன்ஸ் அனாதைகள் பிரஸ், 1840-ல் மதராஸ் அமெரிக்கன் பிரஸ், 1853-ல் விவேக விளக்க அச்சுக்கூடம் (புரசை, 1854-ல் இலக்கணக் களஞ்சியம் பிரஸ், 1859-ல் ஸ்காட்டிஷ் பிரஸ், 1884-ல் கலாரத்னாகார அச்சகம், 1894-ல் மதராஸ் ரிப்பன் அச்சுக்சுடம், 1899-ல் தாம்ஸன் கோ பிரஸ், பூமகள் விலாச அச்சுக்கூடம் ஆகியன தோன்றி நடைபெற்றுள்ளன.

இவற்றுள் 1761-ல் எஸ்.பி.கே. அச்சகம் என்று முதலில் அழைக்கப்பெற்ற அச்சகமானது, பின்னர் வேப்பேரி அச்சகம் பெயர் மாறி, அடுத்து டையோசிஷன் அச்சகம் என்று தொடர்ந்து விளிக்கப்பட்டு வருகின்றது. இங்கு தமிழிலும் ஆங்கிலத்திலும் பல பொது நூல்களும் சமய நூல்களும் அச்சிடப்பட்டு வெளியாகியுள்ளன. அவற்றுள் விவிலியமும், சதுர் அகராதியும்,பெப்ரீசியஸ் பெர்சிவல் ஆகியோரின் ஆங்கிலம் - தமிழ் அகராதிகளும், வெளியார் நூல்களும் சிறந்த முறையில் அச்சிடப் பெற்று வந்துள் ளன; இது தொடங்கிய நாள் முதல் இன்றுவரை இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக நன்றாக இயங்கிப் புகழ் பெற்று, தனியாரால் நடத்தப்பெற்றுவரும் அச்சகமாகத் திகழ் கிறது.

1831-ல் ஆங்கில ஆட்சியினரால் தொடங்கப்பட்ட செயின்ட் ஜார்ஜ் கெஜட் பிரஸ் 10 தொழிலாளிகளையும்

பழம் அச்சுக் கருவிகளையும் கொண்டு இயங்கி வந்தது. பின்னர் இது சென்னை அரசாங்க அச்சகமாகப் பெயர் மாறி வளர்ச்சியடைந்து பல ஆயிரம் தொழிலாளர்களைக் கொண்டு பல கிளைகளை உடையதாய்ப் புகழ்பெற்று விளங்குகிறது. இந்தியாவிலேயே கற்றவர்களைக் கொண்டு நன்கு நடத்தப் பெற்றுவரும் பொது நிறுவன அச்சகமெனச் சிறப்புப் பெற்றுள்ளது.

1313-ல் சென்னைக் கோட்டையுள் தொடங்கப்பட்ட கல்லூரி அச்சகமானது சில காலம்வரை நன்றாக இயங்கி தமிழில் பல அடிப்படை இலக்கண இலக்கிய உரைநடை நூல்களை வெளியிட்டுப் பெருமையடைந்தள்ளது. இது சென்னைக் கல்விச் சங்கத்தினரால் நடத்தப் பெற்று வந்த தாகும்.

இக் கல்விச் சங்கத்தில் தொடர்புகொண்டிருந்த முற் காலத்தில் புகழ் பெற்றிருந்த புலவர்களுள் - இராமாநுச கவியராயருக்கும், களத்தூர் வேதகிரி முதலியாருக்கும் (இலக்கணக் களஞ்சிய அச்சுக்கூடம்), திருவேங்கட முதலியாருக்கும் (சரஸ்வதி அச்சுக்கூடம்) அச்சகங்கள் ஏற்பட்டிருந்தன. இவற்றின் மூலம் அவர்கள் பதிப்பித்த, எழுதிய நூல்கள் வெளியிடப்பட்டன.

தனிப்பட்ட முறையில் புகழ் பெற்றிருந்தவர்களான - ஆறுமுக நாவலருக்கும் (வித்தியாநுபாலன யந்திர சாலை) சபாபதி நாவலருக்கும் (சிந்தாந்த வித்தியாநுபாலன யந்திர சாலை) அச்சகங்கள் இருந்தன. இங்கும் அவரவர் பதிப்பித்த, உரை யியற்றிய நூல்கள் அச்சாகியுள்ளன.

1866-ல் திரு. ஊ புஷ்பரத செட்டியாரால் தொடங்கி நடத்தப் பெற்று வந்த கலாரத்தினாகர அச்சகமானது, சென்னை லிங்க தெருவில் அமைந்திருந்தது. சுமார் 90 ஆண்டுகளுக்கு மேல் நன்கு இயங்கி. இலக்கிய இலக்கண சமய நூல்களை நல்ல முறையில் அச்சிட்டுக் கொடுத்தும், பதிப்பித்தும் வெளியிட்டும் வந்துள்ளது.

ஆறுமுக நாவலரால் 1879-ல் காணப்பெற்ற வித்தியாநு பாலன யந்திர சாலையானது. ஒரு நூற்றாண்டுக் காலமாக சென்னை தங்கசாலைத் தெருவில் இயங்கி வருகிறது; நாவலரின் நூல்களைத் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றது.

வேதாந்தி சை. இரத்தின செட்டியரால் 1894-ல் தோற்றுவிக்கப்பட்ட சென்னை ரிப்பன் பிரஸ், தம்பு செட்டித் தெருவில் 1942 வரை நன்கு இயங்கி, பல்வகையான நூல்களைச் சமய பேதமின்றி வெளியிட்டது; ரிப்பன் நாட்குறிப்பையும் அச்சிட்டு வந்தது. பின்னர் இச் சென்னை ரிப்பன் அச்சகமானது புதுக்கோட்டை இராமச் சந்திர புரக்காரருக்கு விற்கப்பட்டு, இன்றும் இதே பெயரில் அங்கு நடைபெற்று வருகிறது.

தஞ்சையில் இரண்டாம் சரபோஜி மன்னர் (1799-1813) நவகலாநிதிவர்ண யந்திரசாலை என்று ஓர் அச்சுக் கூடத்தை அமைத்து, கல்லச்சு முறை (Lithography) மூலம் காகிதத்தில் அச்சடித்து நூல்களை வெளியிட்டுள்ளார்.

புதுக்கோட்டை தனியரசாக இருந்தபோது, அங்கு ஓர் அச்சகம் அவ்வரசரால் நடத்தப்பட்டு வந்துள்ளது; மத்திய அரசியலார் இவ்வரசை தமிழகத்துடன் இணைத்து விட்ட போது, அவ்வச்சகமும் அரசுடைமையாகிவிட்டது.

திரு. வி. பெருமாள் செட்டியார் அண்டு கோ நிறுவனத்தால் 1866-ல் தொடங்கப்பட்ட ஹோ அண்டு கோ (பிரிமியர் அச்சகம்) கடந்த 113 ஆண்டுகளாக நன்றாகத் தமிழ், தெலுங்கு, ஆங்கில நூல்களை அச்சிட்டுக் கொடுத்து வருகின்றது.

அச்சு சிறப்பு

முன்பே குறிக்கப்பட்ட அமெரிக்கன் பிரஸ் திரு. பி. ஆர். ஹண்டு[1] தலைமையில் சிறப்பாக நடைபெற்று வந்

1. "Mr. P.R. Hunt of the American Mission has produced the smallest vernacular edition of the scriptures ever yet issued in India. The American Mission Press has also raised the standard of priniting throughout the Tamil country''. -Rev. John Murdoch, in his "Classified Catalogue of Tamil printed books'' - p. lvii.

தது. திரு. ஹண்டு அச்சுத்துறையில் திறமை பெற்றிருந் தவர். இவரால் தான் தமிழ் அச்செழுத்துகள் திருத்தமான வடிவம் பெற்று, அழகான அச்சுருவங்ளாக அமைக்கப் பெற்றுப் பெருமையடைந்துள்ளன.

19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரையில் தரங்கம் பாடியிலும் வேப்பேரியிலும் இருந்த அச்சங்கள் முதலில் ஆலேயில் (1710) உண்டாக்கப்பட்ட சதுர நிலைக்குத்தான அச்செழுத்துகளையே (the square upright type face) பயன்படுத்தி வந்தன. இதற்குப்பின் யாழ்ப்பாணத்தில் கையாளப்பட்டு வந்ததை அடியொற்றி வட்டமானதும், சிறிது சரிந்த வடிவமுள்ளதுமான அச்சுகளையே (a more rounded and slightly sloping type face) பயன்படுத்தினர். இவை 'யானைக்கால் எழுத்து' எனப்பட்டன. இவ்வகை யான அச்சுகள் 1862-ல் 'வின்ஸ்லோ தமிழ் - ஆங்கில அகராதி' பதிப்பிக்கப்படும்வரை நிலைத்து நின்றன. இந்தப் பெரு நூலுக்கு அமெரிக்க அச்சடிப்பாளரும் எழுத் தமைப்பாளருமான திரு.பி. ஆர். ஹண்டு என்பவர் புதிய தமிழ் எழுத்துகளைப் 'பைக்கா' (Pica), 'லாங்பிரைமர்' (Long primer), 'பிரிவியர்' (Brevier) எனப் பல்வேறு அளவு களிலும் விதங்களிலும் உருவாக்கித்தந்தார். மேற் சொன்ன பல்வேறு அளவுக்குரிய எழுத்துகளில் துளைபண்ணும் கருவிகள் (punches) இந்தியத் தொழிற் கலைஞர்களா லேயே செய்யப்பட்டன. வின்ஸ்லோ தமிழ் - ஆங்கில அகராதியைக் கூர்ந்து கவனித்தால், அதில் பயன்படுத்தப் பட்டுள்ள தமிழ் அச்செழுத்துகள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆங்கில அச்சு எழுத்துகளைக் காட்டிலும் மிகவும் சிறப்பானவை என்று அச்சு நுணுக்கம் உணர்ந்தவரால் புகழ்ந்து கூறப்படுவது தெரியும்.[1]

---

1. "He taught some of his workmen the difficult art of cutting type punches by hand and himslf designed a new face he gave the letters a more regulare slope, more even spacing, better alignment and introduced a new beautiful serif which greatly added to the apperance of Tamil type. Three founts were produced Pica, Long primer and Brevier. Printing was commenced in 1853, but owing to the reasons given in the preface of the Dictionary, it was not completed till 1862. Printing were of a very high standard indeed, and will, even today stand comparison with the work of any press in the world. In the middle of the nineteenth century there could have been few production to equal it.

மேலும், ஹண்டுடன் பணிபுரிந்த தொழிற் கலைஞர் களுக்கு மேலாக. 19ஆம் நூற்றாண்டின் நடுவில் துளைக் கருவி செய்யும் துறையில் உலகிலேயே வேறு யாரு மில்லை என்று அவர் உறுதியாகக் கூறியுள்ளார்.[1]

மேலே சொல்லப்பட்ட திரு.ஹண்டு அவர்கள் தம்மு டைய புனைவில் (design). எழுத்தில் அமையும் சரிந்த வளைவை அப்படியே வைத்துக் கொண்டார். ஆனால், வரியைச் சன்னமாகச் செய்துவிட்டார். அதனால், உலகில் மற்ற மொழிகளில் உருவானவற்றைக் காட்டிலும் தமிழ் அச்சு முகப்பு (type face) மிகவும் அழகாக உருவாகி யிருக்கிறது.

1835-ல் அச்சகக் கட்டுப்பாட்டுச் சட்டம் நீக்கப்பட்ட தன் காரணமாக. இந்நாட்டினரால் மெல்ல மெல்ல அச்ச கங்கள் ஏற்படுத்தப்பட்டு வந்தன. 1853-க்குள் இந் நாட்டிற் குச் சொந்தமாகப் பத்து அச்சுக்கூடங்கள் இருந்தனவாக வும். அவ் வச்சகங்களில் அச்சுப்பொறிகள் மரத்தால் செய் யப்பட்ட இயக்கப்பட்டு வந்தனவாகவும், இரும்பினால் செய்யப்பட்ட அச்சுப் பொறிகள் பின்னர்தான் அமர்த்தப் பட்டன என்றும் திரு. வாரன் (W.H. Warren) அவர்கள் தெரிவித்துள்ளார். ‘‘சென்னையில் நூற்றாண்டுக் காலத் திற்கு முன்பு இருந்த அச்சகமானது, உலகில் இருந்த எந்த அச்சகத்திற்கும் சமதையானது என்று சொல்லும் அளவிற்கு இருந்துள்ளது. மேலும், கையாலே அச்சுருவங் களைச் செதுக்கும் கடினமான கலைத் திறன் மிக்க பணியில் ஈடுபட்ட சென்னைத் தொழிற்கம்மியர், உலகி லுள்ள மற்ற அச்செழுத்துகளைச் செதுக்குபவர்களைக் காட்டிலும் மிகவும் மேம்பட்டவர்கள் என்று பெருமை யுடன் நினைவு கூறலாம்’’[1] என்று அவரே மேம்படச் செப்பியுள்ளதையும் அறிந்து மகிழலாம்.

---

1. "A close examination of the Tamil type reveals the fact that, if anything, it is superior to the Roman characters which were the best imported type of the period.''

2. "We can recall with pride that 100 years ago, a Madras Press was the equal of any press in the world, and in the difficult art of cutting punches by hand, Madras workmen were probably superior".- "Early Tamil printing" by W.H. Warren, Secretary, Diocesan Press, Madras, in the "Memoirs of the Madras Library Association" (1941), p. 43.

அச்சின் எதிரொலி

கிறிஸ்தவர்களுக்கே அறிவு உரியது (Respublica Christiana) என்ற மத்திய காலக் கொள்கையானது, கூட்டன்பர்க்கின் அச்சுப்பொறி கண்டுபிடிப்பின் காரணமாக மெல்ல மெல்ல மடிந்து வந்தது. அறிவு பொதுவானது (Respublica Literaum) என்ற கருத்துக்கு அச்சுத்தொழிலானது புத்துயிர் கொடுத்ததால், ஒவ்வொரு நாடும் தன்னால் இயன்ற அளவிற்கு அதனைப் பயன்படுத்திக்கொண்டது.

அச்சுக்கலை பெருகப் பெருகப் அறிவு உலக நடவடிக்கைகளுக்கு (The sphere of intellectural activities) முன்னைவிட ஆழமான தேசீய வரம்பு (National frontiers) ஏற்பட்டது; புதிய வரம்புகளும் தோன்றின.

1500-க்கு முன்பெல்லாம் அச்சான நூல்கள் ஐரோப்பாவில் முக்கால் பாகம் இலத்தீன் மொழியிலேயே இருந்தன. பன்னிரண்டில் ஒரு பாகமே முறையே இத்தாலிய, ஜெர்மன் மொழிகளில் அச்சிடப்பட்டன. இங்கிலாந்திலும் ஸ்பெயினிலும் மட்டுந்தான் ஆரம்ப நாள் முதற்கொண்டு இலத்தீனத்தைக் காட்டிலும் தாய்மொழியில் அச்சிடுவது அதிகப்படியாக இருந்து வந்தன. 16ஆம் நூற்றாண்டின் தொடக்க முதல்தான் தாய் மொழிகளில் அச்சிடுவது அதிகப்பட்டும், இலத்தீன் மொழியில் அச்சிடுவது குறைந்தும் வந்துள்ளது.

ஜெர்மானிய மொழியில் 1461 முதல் நூல்கள் வெளிவரத் தொடங்கின. ஃபிரஞ்சிலும், டேனிய மொழியிலும் முறையே 1477-லும், 1495-லும் நூல்கள் வெளியாயின. தற்காலத்திய கிரேக்க மொழியில் 1526-ல் ஹோமரின் ‘இலியாத்’ மொழிபெயர்ப்பு வெளியாகியது. மேற்கத்திய கிறிஸ்தவ உலகில் இங்கிலாந்து ஒன்றில்தான் கவிதையிலும் உரைநடையிலும் இடையறாது கி.பி.7. முதல் 12ஆம் நூற்றாண்டுவரையிலும் நூல்கள் எழுதப்பட்டு வந்துள்ளன. இதே காலத்தில் ஐரோப்பாக் கண்டத்தில் இலத்தீனமே பெருவழக்கமாக இருந்து வந்தது.

வில்லியம் காக்ஸ்டனைப் பின்பற்றி மற்ற அச்சடிப் பாளர்களும் இலத்தீன் மொழியின் ஆதிக்கம் தங்கள் நாட்டில் வேரூன்றாமல் இருக்க, கண்ணுங் கருத்துமாகப் பார்த்து வந்தனர். அதற்காகத் தொடர்ந்தும் பாடுபட்டு வந்தனர். ஆகவே தான் இங்கிலாந்தில் இலத்தீன் ஆதிக்கத்தை ஆங்கிலத்தால் முறியடிக்க முடிந்தது.[1]

வெல்ஸ் (Welsh) மொழியின் முதல் நூல் எட்வர்ட் விட்சர்ச்சால் லண்டனில் அச்சிடப்பட்டது. வில்லியம் மார்கள் என்னும் பாதிரியரால் வெல்ஸ்மொழியில் மொழி பெயர்த்து 1588-ல் வெளியிடப்பட்ட பெரிய விவிலிய நூலின் காரணமாகத்தான் கெல்டிக் இனத்தைச் சேர்ந்த வெல்ஸ் மொழி இன்னும் உயிருடன் நிலைத்து நிற்கிறது என்று சொல்லப்படுகிறது. இதே காலத்தில் ஐரிஷ் மொழி யிலும் நூல்கள் அச்சிடப்பட்டு வெளிவரத் தொடங்கின.

லித்துவேனிய (Lithanian)மும், லாத்துவிய (Lativian) மும், எஸ்தோனிய (Estonian)மும், பின்னிஷ் மொழிக ளும் (Finish Languages) அச்சுவழியாகத் தலைக்காட்டா மல் இருந்திருந்தால், 16ஆம் நூற்றாண்டிற்குள் அவை ஜெர்மன் மொழியால் ஆட்கொள்ளப்பட்டிருக்கும் என்று எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

ஜெர்மன் மொழியிலிருந்து கிளைத்த மொழிகளிலும் தேசிய மொழியார்வம் கொழுந்து விட்டிருப்பது தெரிய வருகிறது.

கிரேக்க மொழியான புனித இலத்தீனத்தைப் பாமர மக்கள் கற்க கிறிஸ்தவ குருமார்கள் தடை விதித்தனர்! அச்சடிக்கும் முறை கண்டு பிடிக்கப்பட்டதையடுத்து. ஐரோப்பிய பாமர மொழிகளிலும் முக்கிய நூல்கள் வெளியிடப்பட்டன. புனித மொழியாகக் கருதப்பட்ட இலத்தீனில் அல்லாமல், மக்களுக்குப் புரியும் மொழியில் தம் சீர்த்திருத்தக் கருத்துகளைப் பரப்பியவர் மார்ட்டின்

---

1. இங்கிலாந்து அரசன் தன் திருமணத்தில் போப் தலையிடுவதை விரும்பவில்லை. இதனால் ஏற்பட்ட மோதலில் இலத்தீன் பின்னடைந்தது, ஆங்கிலம் எல்லாத் துறைகளிலும் முன்னேறியது.

லூதர். இவர் இலத்தீன் திருச்சபையின் கோளாறுகளை அம்பலப்படுத்தும் 97 அம்சங்களைக் கொண்ட அறிக்கையை விட்டன்பர்க்கு திருக்கோயில் வாயிலில் பொருத்தினார்! விவிலிய நூலின் புதிய ஏற்பாட்டை அவர் தம் தாய் மொழியான ஜெர்மன் மொழியில் பெயர்த்து வெளியிட்டார்.

இப்படியாக ஐரோப்பாக் கண்டத்திலுள்ள ஒவ்வொரு நாடும் தன் தாய் மொழியின் அடிப்படையில் மற்றொரு நாட்டிற்கு எதிராக மொழிச் சுவர்களை' (Language walls) எழுப்பித் தற்காத்துக் கொண்டுள்ளன - என்றாலுங்கூட அச்சுக்கலையானது ஒவ்வொரு மொழிக்குள்ளும் காணப் பட்ட சிறு சிறு வேறுபாடுகளை ஒழித்துக்கட்டி, அவற் றைச் செம்மைப்பட்டவையாகவும் ஒரே சீரானவையாக வும் இருக்கும்படி செய்துள்ளது.

சான்றாக, அரசியின் ஆங்கிலம் (Queen's English) என்று சொல்லப்படும் மொழி, பல இலட்சக்கணக்கான எழுத்தாளர்களாலும். வாசகர்களாலும் விரும்பி வரவேற் கப்படும் கட்டளை (standard)யான மரபுத்தொடர்களைக் கொண்டதாக விளங்கிவருகிறது. இதற்குக் காரணம் கெண்டு (kent), லங்காஷையர் (Lancashier), நார்த்தம்பர் லாந்து (Northumberland) என்னும் வட்டாரங்களில் பேச்சு வழக்கிலுள்ள சொற்கள் (Dialects) தவிர ஏனைய வட்டாரச் சொற்கள் அனைத்தும் செல்வாக்கற்றுப்போய் விட்டன. வில்லியம் காக்ஸ்டனும், அவரது அச்சுக்கலை வழித்தோன்றல்களுமே இம்மாறுதலுக்குப் பெரும் பொறுப்பாளிகளாவர். மத்திய கால ஆங்கிலப் பேச்சு வழக்குகளிடையே (Middle English dialects) காணப்பட்ட குழப்பங்களை நீக்குவதற்கு வேண்டி, காக்ஸ்டன் லண்ட னிலும் லண்டனைச் சுற்றியுள்ள பகுதியிலும் பேசப்பட்டு வந்த சொற்களைத் தேர்ந்தெடுத்து, ஒழுங்குபடுத்தி. பின் னர் கைவிட முடியாத அளவிற்குக் கட்டளை முறையாக (Fixed a standard never to be abandoned) வழக்கிற்கு கொண்டு வந்தார்.

அச்சு முறை ஏற்பட்டதன் விளைவாக ஆங்கில மொழியில் மண்டலத்தன்மைகள் குறைந்தது. இங்கிலாந்து நாட்டின் பல்வேறு பகுதியினரும் சிக்கலின்றி எளிதாய் உணர்ந்து கொள்ளக் கூடிய - பேசக்கூடிய - எழுதக்கூடிய - ஒரே முனைப்பான மொழியாக அது ஆகியது. இதனால் எழுத்து வழக்கிற்கும் பேச்சு வழக்கிற்கும் இருந்துவந்த பெரும் பள்ளம் தூர்க்கப்பட்டது. உள்ளூர் மண்டல வேறுபாடுகள் நீக்கப்பட்டன அல்லது விரைவில் மறைந்தொழிந்தன.[1]

எழுத்துத் திருத்தம்

தமிழ் மொழியை அச்சுப்படுத்த முனைந்தவர்களும் இந்த நாட்டில் எழுதப்பட்டு வந்த கையெழுத்து எழுத்துகளை ஒட்டியே அச்சை வடிக்க முற்பட்டனர். தொடக்க கால அச்செழுத்துகள் கையெழுத்தைப் போலவே இருப்பது, உலகெங்கும் கையாளப்பட்டு வந்த நடைமுறையை ஒட்டியதேயாகும். சமய நூல்களை அச்சிட்ட கிறிஸ்தவ பாதிரிமார்களும், தாம் யாருக்காகச் சமயப் பணிபுரிந்து வந்தார்களோ அவர்களுக்குப் புரியும் வகையிலும், தாங்கள் தமிழை அறிந்து கொண்ட முறையிலும் தமிழ் அச்சைப் பயன்படுத்தியுள்ளார். இவர்களில் வீரமாமுனிவர், தாம் தமிழ் எழுத்து எழுதும்போது காணப்படும் சிற்சில குறைபாடுகளைக் கண்டு சீர்திருத்தம் செய்ய முற்பட்டார். அவர் எழுதிய 'கொடுந்தமிழ்' என்னும் நூலில் இலத்தீன் மொழியில் அவர் கூறியுள்ள தன் தமிழ் மொழி பெயர்ப்பாவது - குறிலுக்கும் நெடிலுக்கும் ஒரே மாதிரியாக -ெ- எழுதப்பட்டு வருகிற கொம்பு என்று சொல்லப்படுகிற இந்த எழுத்தைக் குறிப்பிடவும். இக்கொம்பை மேலே சுழித்து -ே- இவ்விதமாக எழுதினால். நெட்டெழுத்தைக் குறிப்பிடவும் மாற்றியமைத்தேன். உதாரணமாக, மெய்-மேய்; பொய் - போய்''. இச்சொற்களில் கொம்பு மேலே சுழிக்கப்படாதவை குற்றெ

1. See "The Five Hundred years of printing'' by S.H. Sterinberg, P. 86-87.

ழுத்து. வீரமாமுனிவர் குறிலுக்கு மேல் நீண்ட புள்ளியை (-)யும். மெய்யெழுத்துகளுக்கு மேல் சுழித்த புள்ளியை (o)யும் இடவேண்டும் என்று தமது ‘தொன்னூல் விளக்கத்தில்’ கூறியுள்ளார்.

(உம்) எ̄ரி, ஒ̄தி மண் - கண்.

கெ, பெ, செ (இவைகள் புள்ளிபெற்றதால்) குற்றெழுத்தாகவும். கெ, பெ,செ (இவைகள் புள்ளி பெறாததால்) நெட்டெழுத்தாகக் கொள்ளப்பட்டதை, வீராமாமுனிவர்) கெ,பெ.செ என்பவற்றைக் கொம்பை மேலே சுழித்ததன் மூலம் (ே - நெடிலாகக் கொள்ளச் செய்தார். இதனால் மறந்து புள்ளி வைக்காமற் போய்விட்டால்- குறிலை நெடிலாகப் படிக்கும் மயக்கம் ஒழிந்து தெளிவு ஏற்பட்டது.

முன் குறிப்பிட்ட நெடிற் சொற்களான எரி, ஒதி, என்பவை ஏரி, ஓதி என பின்னர் கீழ்க்கோடும் சுழிப்பும் இட்டும் மாற்றம் செய்யப்பட்டது.

ஓலையில் இரண்டு குறிக்கொம்புகளைச் சேர்த்து விரைவாக எழுதியதின் காரணமாய் ை - என்ற குறி ஏற்பட்டது. ஒரு குறிற் கொம்பை ன, ல, ண, ள ஆகிய வற்றொடு சேர்த்தால் (னெ, ணெ, லெ, ளெ,) முறையே னை, ணை, லை, ளை என்று ஆகிவிடும். இவ்வாறு சேர்த்து எழுதப்பட்டனவே இடைக்காலத்தில் தனித்தனி எழுத்துகளாக (னை, ணை, லை, ளை) வழக்கத்தில் உள்ளவை யாகும். தற்காலத்தில் ஐ-க்கு உரிய மெய்க்குறியாக (ை) மட்டும் உயிர் மெய்யுடன் சேர்த்து எழுதும் சிக்கனம் உண்டாகி வருகிறது. (உம்) னை, லை, ணை, ளை.

தமிழர்களின் எண் குறியீடுகளும் பழைய பின்னக் கணக்கு முறைகளும் மிக நுட்பம் உடையவை என்றும் அவை அவர்களின் மிகப் பழைய வாணிக அனுபவத்தைக் காட்டுவதாக உள்ளதென்றும் குறிக்கப்படுகின்றன. ‘‘$\frac{1}{320} \times \frac{1}{7}$ என்னும் பின்னத்தை இம்மி என்றும், அதில்

ஏழில் ஒரு பங்கை அணு என்றும். அதில் ஏழில் ஒரு பங்கை அணு என்றும். அதில் 11-ல் ஒரு பங்கை குணம் என்றும் குறித்து வந்தனர்'' என்று டாக்டர் மு. வரத ராசனார் தமது 'தமிழ் இலக்கிய வரலாறு' எனும் நூலின் 5ஆம் பக்கத்தில் குறிப்பிட்டிருப்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

அச்சுத்தோற்றம்

தமிழில் அச்சடிப்புத் தோற்றுவிக்கப்பட்டது 16ஆம் நூற்றாண்டின் மத்தியில்தான் என்றாலும், வீரமாமுனிவ ரின் எழுத்துச் சீரமைப்புமுறை கையாளத் தொடங்கப் பெற்றது 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் என்பதை இங்குக் குறிக்க வேண்டியுள்ளது. ஆகவே, பழங் காலத் தமிழ் அச்சு நூல்களைப் பார்க்கும்போது, அவை தலைப்பேடுகளிலும் பிற பகுதிகளிலும் மெய்க்குறியீடு கள் இடப்படாமலும், நெடிற் கொம்புகள் சுழிக்கப்படாம லும், ஏகாரத்திற்குக் கீழ்ப்பாதம் இழுக்கப்படாமலும் தமிழ் ஒலைச்சுவடிகளில் காணப்பட்ட முறையிலேயே தொடக்க கால அச்சடிப்பும் இருந்து வந்திருக்கிறது.

பொருள்

19 ஆம் நூற்றாண்டுக்கு முன்வரை தமிழில் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ள நூல்கள் அனைத்தும் கிறிஸ்தவ சமயத் துண்டு வெளியீடுகளாகவும் (tracts), விவிலிய மொழி பெயர்ப்பு (Biblivcal translations) வெளியீடு களாகவும் அமைந்து காணப்படுகின்றன.

பிற சமய நூல்கள் 19ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியிலிருந்துமான் தோன்ற முற்பட்டன. சமயம் தவிர இலக்கிய - இலக்கண - பிறபொருள் குறித்த நூல்கள் பின்னர்தான் வெளிவரலாயின.

தமிழில் வெளிவந்த முற்காலப் பொது நூல்கள் தமிழ் இலக்கண உரை நூல்களாகவும். கதைத் தொகுப்பு

களாகவும். வரலாறு புவியில் விஞ்ஞானம் மருத்துவம் ஆகிய துறைகளின் மொழி பெயர்ப்பு நூல்களாகவும் காணக்கிடக்கின்றன.

கிறிஸ்தவ வேதமான விவிலியத்திலுள்ள புதிய ஏற்பாட்டைச் சீகன்பால்கு ஐயர், தன்னந்தனியாகத் தமிழில் மொழி பெயர்த்துக்கொடுத்தது, 1715-ல் தரங்கம் பாடி அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளிவந்ததே, முதல் முதலாக புத்தக உருவில் வெளியான நூலாகும். இது 494 பக்கங்கள் கொண்டிருந்தது. இதற்குப்பின்னர், பப்ரீசைய ரால் மிகவும் கவனத்துடனும் மூலத்துடனும் ஒப்பிட்டும் திருத்தம் செய்யப்பட்ட 'புதிய ஏற்பாடு' 1772-லும், 'பழைய ஏற்பாடு' 1796-லும் தனித்தனியாக அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன.

1840-ல் இரேனியஸ் ஐயர் தலைமையில் மொழி பெயர்க்கப்பட்ட விவிலியம் முதன் முறையாகப் 'பழைய ஏற்பாடும்' 'புதிய ஏற்பாடும்' சேர்ந்த ஒரே புத்தகமாக அமெரிக்கன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியாகியது. பின்னர் பீட்டர் பெர்சிவலும் ஆறுமுகம் நாவலரும் சேர்ந்து திருத்தஞ் செய்த 'பரீட்சை மொழி பெயர்ப்பு' 1844-ல் யாழ்ப்பாணத்தில் வெளிவந்தது. திரு. ஹென்றி பவர் என்பவர் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின ரால் செய்யப்பட்ட திருப்புதல் 1871-ல் சென்னை எஸ்.பி.சி.கே. அச்சகத்தில் அச்சிடப்பட்டது. 1936-ல் திரு லார்ஸன் தலைமையில் 1941ல் மற்றொரு மொழி பெயர்ப்பும், திரு. சி.எச். மோனகன் தலைமையில் ஒரு மொழிபெயர்ப்புத் திருத்தலும், 1957-ல் திரு. சி.ஜி. தியெகல் (Diehl) தலைமையில் முழு விவிலியத்திற்கும் மற்றொரு மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன. 1957-ல் திருந்திய விவிலிய வெள்ளி விழா வெளியீடு கொண்டு வரப்பட்டுள்ளது. 1975-ல் பொது மக்களுக்குரிய மொழி பெயர்ப்பு ஒன்று புதிய ஏற்பாட்டிற்குக் காணப் பட்டுள்ளது.

ஆங்கில மொழியில் சென்ற 273 ஆண்டுகளில் இரண்டு முறை தான் விவிலிய மொழி பெயர்ப்புத் திருத்தம் செய்யப் பெற்றிருக்கின்றது. ஆனால், தமிழ் மொழியில் முதல் விவிலிய மொழி பெயர்ப்பு 1715-லும் பின்னர் வந்த மொழி பெயர்ப்புத் திருத்தங்களுடன் 1949-லும் பல வெளியாகியுள்ளன. கடந்த 250 ஆண்டுகளில் தமிழில் புதிய ஏற்பாடு 8 முறையும், முழு விவிலியம் 6 முறையும் மொழிபெயர்த்துத் திருத்தம் செய்யப்பட்டுள் ளன. ஆங்கிலமொழியில் உரைநடை அமைப்பை 1611 ஆம் ஆண்டின் விவிலிய மொழி பெயர்ப்பே திட்டமாய் வகுத்துத் தந்துள்ளது. ஆனால், தமிழ் விவிலியம் அவ்வப்பொழுது சொற்களும், தொடர்களும், வாக்கிய அமைப்பும் திருத்தஞ் செய்யப்பட்டுக் கிறிஸ்தவத் தமிழ் செப்பமுற்று வருகிறது.

பொது நூல்களுள், முதன்முதலில் திருக்குறளும் நாலடியாரும் 1812-ல் ஏட்டுச்சுவடியிலிருந்து பெயர்த்து, ஒரு சேர அச்சிடப்பட்டு வெளியாகியுள்ளன. அடுத்து பல சமய நூல்களும் தொடர்ந்து அச்சிடப்பட்டு வெளியிடப் பட்டுள்ளன.

தலைப்பேடு

தொடக்க காலத் தமிழ் நூல்களில் தலைப்பேட்டின் (Title Pages) மேல் 'உ' என்ற பிள்ளையார் சுழி போட்டும், 'நன்றாக' என்றும் 'கடவுள் துணை' என்றும் 'சர்வேசுராய நம' என்றும் 'ஜிநாய நம' என்றும் 'ஸ்ரீ ராமஜெயம்' என்றும், 'வரவர முநியே நம' என்றும், 'சிவாய நம' என் றும், 'பிஸ் மில்லாகிற் றகுமானிற் றகீம்' என்றெல்லாம் எழுதியும் தொடங்கப் பெற்றிருக்கின்றன.

தமிழில் தலைப்பேடுகள் தொடக்க காலத்தில் போர்ச்சுகீஸ், இலத்தீன், ஜெர்மன், டச்சு, ஆங்கிலம், ஃபிரஞ்சு முதலிய மொழிகளில் குறிக்கப்பட்ட பின்னரே தமிழிலும் தரப்பட்டு அச்சடிக்கப்பட்டு வெளி வந்துள்ளன.

பெயர் குறிப்பிடுதல்

தமிழில் வெளியிடப்பட்ட பழைய நூல்களில் நூலின் பெயரும், நூலாசியரின் பெயரும், நூலை பரிசோதித்தவரின் பெயரும், நூலை பதிப்பித்தவரின் பெயரும், நூலை மேற்பார்வையிட்டவரின் பெயரும், நூலை அச்சிட்டவரின் பெயரும், அச்சகத்தின் பெயரும் காணப்படும். சில சமயங்களில் நூலை அச்சடுக்கியவரின் பெயரும் குறிக்கப் படுவதுண்டு!

முற்காலத்தில் ஒரு நூலை வெளியிடுவது என்பது எல்லோராலும் உடனே செய்துவிடக்கூடிய இலகுவான செயலன்று. அது மிகவும் கடின உழைப்போடும், பிறரின் ஒத்துழைப்போடும் பொருளுதவியுடனும் செய்யக்கூடிய அரிய பணியாகவே இருந்து வந்துள்ளது. ஆகவே, பொதுவாக நூலின் பெயரும் நூலை பரிசோதித்தவரின் பெயரும் தடித்த எழுத்துகளில் அச்சுக் கோக்கப்பட்டு வெளியிடப் பட்டிருக்கும். சில நூல்களில் ஆசிரியர் பெயர் சிறிய எழுத்திலும், பதிப்பித்தவரின் பெயர் பெரிய எழுத்திலும் அச்சிடப்படுவதும் உண்டு! சில நூல்களில் நூலாசிரியர் பெயரை காண்பதும் அரிதாகவே இருக்கும்!

சில நூல்களில் ஆகிரியர் பெயர் சிறிய எழுத்தில் அச்சு கோக்கப்பட்டு மறைவுண்டு, நூலை அச்சிட உதவியரின் பெயர் பெரிய எழுத்தில் விளக்கமாகத் தரப்பட்டிருக்கும். நாளடைவில் அச்சுக்கலையின் வளர்ச்சி காரணமாகவும், மேலை நாட்டிலிருந்து வெளிவந்த நூற்கட்டடங்களைக் கண்டும், புத்தகத் தலைப்பேடு மெல்ல மெல்லச் சீராக அமைக்கப்பட்டு, ஆசிரியர்க்கு உரிய மதிப்புத் தரப் பட்டது.

அச்செழுத்துகள்

தமிழில் ஓலைச் சுவடிகளில் உள்ளதைப் போலவே கையெழுத்தைப் பின்பற்றித் தமிழ் அச்செழுத்துகள் வடிக்கப்பட்டுள்ளன. முற்காலக் கிறிஸ்தவ வெளியீடு

களை காண்கின்ற போது, அவை அக்காலத்தில் நிலவிய தமிழ் வரிவடிவ முறைக்கு நல்ல எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன. அவை தமிழ் இலக்கணத்தைப் பின்பற்றியுள்ளன.

தமிழ் எண்களும் தமிழ் மாதங்களின் பெயர்களும் கிறிஸ்தவ நூல்களில் தொடர்ந்து கையாளப்பட்டுள்ளன. மெய்யெழுத்துகளின் மீது புள்ளியிடப்படாமலும், எகர ஏகாரமும், ஒகர ஓகாரமும், குறிலும் நெடிலும் வேறுபாடின்றி அச்சிடப்பட்டுள்ளன. சொற்கள் இடைவெளி தரப்படாமல் ஒன்றோடொன்று சேர்ந்து அச்சாகியுள்ளன. ற, நு, று, என்ற எழுத்துகள் முன் பிளவின்றியுள்ளன. து, நு, னு, ணு, று, முதலியன கீழே உள்ள வயிறின்றி ங வின் இறுதிப் பகுதிபோல் உள்ளன. முற்காலத்தில் ஆ கீழ் வயிறு இல்லாமல் எழுதப்பட்டு வந்ததால் அதன்படியே அச்சிடப்பட்டுள்ளது. ரவுக்கு கீழ்க்கோடு - அதாவது பாதம் இல்லை. ஒரு பக்கம் இரு பத்திகளாகப் பிரிக்கப்பட்டும், ஒரு பத்தியானது இரு பத்திகளாக ஆக்கப்பட்டும், ஒரு பத்தியில் முடிவு பெறும் சொற் கீழ் அடுத்த பத்தி தொடங்கும் எழுத்தில் முதலெழுத்து அச்சிடப்பட்டும் (தட்டெழுத்து அச்சிடும் போது இம்முறையையே இப்போதும் கையாளப் படுகிறது), சில சிறப்புக் குறிகள் பயன்படுத்தப்பட்டும் உள்ளன. மேல் சொன்ன கிறிஸ்தவ நூல்களுள் வழக்குச் சொற்களும், கொச்சை சொற்களும், ரகர றகர பேதங்களும் காணப்படுகின்றன.

பிற சமய நூல்களில் மேலே குறிக்கப்பட்டுள்ள விவரங்களுடன் நூலின் முகப்பின் கீழே கலியுக ஆண்டும், தமிழ் ஆண்டும், ஹிஜரி ஆண்டும் தரப்படுவது உண்டு. நூலின் விலையும் பக்க முனையில் கொடுக்கப் பட்டிருக்கும்.

பொதுவாகச் செய்யுள்கள் சீர் பிரிக்கப்படாமலும், சொல்லுக்குச் சொல் இடம் விடப்படாமலும், வரியின்

கடைசியில் புள்ளிகள் இடப்பட்டும், உடுக் குறியிடப் பட்டும் செய்யுளின் எண் தரப்பட்டும் காணப்படும். சில நூல்களில் ஒவ்வொரு வரியையும் கால் புள்ளியிட்டோ, இடைக்கோடு (-) போட்டோ தொடர்ந்து அச்சிடப் பட்டிருக்கும். சில நூல்களில் பத்தி பிரிக்கப்பட்டிருக்கும்; சில அப்படி இராது. 19 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலிருந்து சீர்பிரித்தலும், சொற்களுக்கு இடையில் இடம் நிரப்பி (Space)யைப் போடுதலும், செய்யுள் மூலத்தை பெரிய வடிவிலும் உரையைச் சிறிய வடிவிலும் அச்சடுக்குதலும் வழக்கமாகி விட்டது. ஆனால் முற்கால அச்செழுத்துக்கள் ஒரு சீராக அமையாது, பெரியவும் சிறியவுமாய் அச்சடுக்கப்பட்டிருக்கும். நூலின் பெயர் ஒரு பக்கத்திலும் அதிகாரத் தலைப்பு மறு பக்கத்திலும் தரப்பட்டிருக்கும். தமிழ் எண்கள் கொடுக்கப்பட்டிருக் கும். சில நூல்களின் இத்தனை பிரதிகள் அச்சிடப்பட்டது என்ற குறிப்பும் காணப்படும்.

விற்பனை நிலையங்கள்

முற்காலங்களில் படிப்போர் தொகை குறைவாக இருந்த காரணத்தினாலும், குறைவான எண்ணிக்கையில் நூல்கள் அச்சிடப்பட்டு வந்ததினாலும், நூல்களை வெளி யிட்டு விற்பனை செய்வதற்கென்று தனியே பதிப்பகங் களோ, விற்பனை நிலையங்களோ ஏற்படவில்லை. இப் பணியினை அச்சகங்களே பெரும்பாலும் செய்து வந்தன.

அடுத்து, சென்னை கல்விச்சங்க (1812)மும், கிறிஸ்த வத் தாய் மொழிக் கல்விக்கழக (1858)மும், கிறிஸ்தவ இலக்கியச் சங்க (1891)மும், சென்னை பாடப் புத்தகச் சங்க (1850)மும். 1842-ல் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட புத்தகச் சங்கமும் புத்தக விற்பனைத் துறையில் முன்னோடிகளாக இருந்துள்ளன.

மதுரையில் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் செந்தமிழ்ப் பிரசுரக்கூடம் ஏற்படுத்தப்பட்டது. இங்குப் புது மண்டபத்

தில் இராம. குருசாமி கோனார்க்குப் புத்தகக் கடை ஒன்று இருந்தது நாகையில் திரு. நாராயணசாமிப் பிள்ளை ஒரு புத்தகக் கடையை நடத்தி வந்தார்.

சென்னையில் ஊ. புஷ்பரதச் செட்டி அண்டு கோவும், ரிப்பன் அச்சுக் கூடமும், ரிப்பன் புத்தக சங்கமும் புத்தக சாலையும், கிறிஸ்தவ இலக்கியக் கழகமும் (C.L.S - *1891*), அல்லயன்ஸ் அண்டு கோ (*1908*)வும், அமரம்பேடு இரங்குவாமி முதலியார் அண்டுகோவும், பி.நா. சிதம்பர முதலியார் புத்தகக் கடையும், பி. இரத்தின நாயகர் அண்டு சன்ஸூம், விவேக போதினி, ஸி. குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ், டி.வி. செல்லப்ப சாஸ்திரி அண்டு சன்ஸூம், சைவ சிந்தாந்த நூற்பதிப்புக் கழகமும் (*1920*), வைஷ்ணவ சம்பிரதாயப் புத்தக சாலை, வி.சூ. சாமிநாதன் அண்டு கோ ஆகிய புத்தக வெளியீட்டு விற்பனை நிலையங்கள் தோன்றின.

மதுரையில் இ.மா. கோபாலகிருஷ்ண கோனார் அண்டு கோவும், திருநெல்வேலியில் இராமலிங்கையார் புத்தக சாலையும், எஸ். ஆர் சுப்பிரமணிய பிள்ளை புத்தக நிலையமும், கொழும்புவில் தனலட்சுமி புத்தகசாலை, கலைமகள் புத்தக நிலையமும், சுதந்திரன் வெளியீடுகள், சுன்னாகம் திருமகள் அழுத்தக வெளியீடுகள், மெய்கண்டான் அச்சக வெளியீடுகள் முதலானவையும் குறிப்பிடத்தக்கனவாகும். தற்கால புத்தக வெளியீட்டில் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் (*1929*), நவயுகப் பிரசுராலயம், சக்தி காரியாலயம் (*1939*), தமிழ்ப் பண்ணை, பழனியப்பா பிரதர்ஸ் (*1941*), ஸ்டார் பிரசுரம் (*1942*), கமலா பிரசுராலயம் (*1943*), பொன்னி பதிப்பகம், பாரி நிலையம் (*1946*), தமிழ் புத்தகாலயம் (*1946*), கலைமகள் காரியாலயம் (*1923*), பொன்னி பதிப்பகம் (*1950*), சைவ சித்தாந்த சமாஜம், செந்தமிழ் நிலையம், கலா நிலையம், குடியரசுப் பதிப்பகம், பகுத்தறிவு

நூற்பதிப்பகம், பழனியப்பா பிரதர்ஸ், மணிவாசகர் பதிப்பகம் ஆகியன சிறந்து விளங்குகின்றன.

பதிப்பாசிரியர்கள்

பதிப்பாசிரியர்களில் ஆ. முத்துச்சாமிப் பிள்ளை, புதுவை நயனப்ப முதலியார், முகவை இராமானுசக் கவிராயர், களத்தூர் வேதகிரி முதலியார், தாண்டவராய முதலியார், மழவை மகாலிங்கையர், திருத்தணிகை விசாகப்பெருமாளையர், சரவணப் பெருமாளையர், திருவேங்கடாசல முதலியார், சந்திரசேகர கவிராச பண்டிதர், காஞ்சிபுரம் சி.எஸ். சபாபதி முதலியார், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

மேலும், பதிப்பாசிரியர்களில் - யாழ்ப்பாண ஆறுமுக நாவலர், சோடசாவதானம் சுப்பராய செட்டியார், கோமள புரம் இராசகோபால் பிள்ளை, சி.வை. தாமோதரம் பிள்ளை, மயிலை சண்முகம் பிள்ளை ஆகியோர் சிறப்பித்துச் சொல்லக் கூடியவராவர். பிற்காலத்தில் டாக்டர் உ.வே. சாமிநாதையரும், வையாபுரியப் பிள்ளை யும் பழமையும் புதுமையும் கொண்ட பதிப்பாசிரியர் களாக விளக்கியவர்கள் எனச் சொல்லலாம்.

ஆங்கில அகராதி வெளியிடுவதற்கு முன்பே வீரமா முனிவர், தமிழில் 'சதுரகாதியை'த் தொகுத்துக் கொடுத் கொடுத்துள்ளார். இவர் 'பரமார்த்த குரு கதை'யைப் பகடி பண்ணுவதற்காக எழுதியவர் என்றாலும், தமிழ்ச் சிறு கதைகளில் அது முன்னோடியாக உள்ளது. 'செந்தமிழ்', 'கொடுந்தமிழ்', 'தொன்னூல் விளக்கம்' முதலிய இலக் கண நூல்களையும், பல உரைநடை சமய நூல்களையும் எழுதிய வரும் இவரே ஆவர். மேலும். திருக்குறளை (காமத்துப்பால் தவிர) முதன் முதலில் இலத்தீனத்தில் மொழி பெயர்த்துக் கொடுத்து, அதனை உலகு அறியும்படி செய்தவரும் இவரே ஆவர். 'தேம்பாவணி' என்னும்

கிறிஸ்தவக் காப்பிய இலக்கியத்தை முதன்முதலில் படைத்த பெருமை இவருக்கே உரியது.

தமிழ் இலக்கியமானது மதக் சார்பற்றவர்களாலும் மதச் சார்புள்ளவர்களாலும் பண்டைக் காலத்திலிருந்து வளர்க்கப்பட்டு வந்துள்ளது. இந்திய மொழிகள் அனைத்தினுள்ளும் தமிழில் தான் முதன்முதலாகப் பாரத இராமாயணங்கள் எனும் வடநாட்டுக் கதைகளை எடுத்துக் கொண்டு, தமிழ் மரபிற்கு ஏற்றவகையில் அவற்றில் ஏலாத பகுதிகளை மறைத்து, அழகுபடுத்திச் செய்யுளில் தமிழர் தம் திறமைகளையும் மேம்பாடுகளையும் புலப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. கம்பரின் இராமாயணம், வால்மீகி இராமாயணத்தை காட்டிலும் அழகிலும் அமைப்பிலும் சொல்லுந் திறனிலும் மேற்பட்டது என்று திரு. வ.வே.சு. ஐயர் போன்ற பன்மொழி அறிந்த பெருமக்கள் எடுத்துக் காட்டிச் சிறப்பித்துள்ளனர்.

சங்க நூல்களிலும், சங்கம் மருவிய நூல்களிலும் மெய்யுணர்வுக் கருத்துகள் பல்வேறு சமயத்தினரால் ஆங்காங்கே தெரிவிக்கப்பட்டுள்ளன. ஆனால், தனித்தனி தத்துவ நூல்களாகத் தொடக்க காலத்தில் அவர்களால் உருவாக்கப்படவில்லை. பிற்காலத்தில் தான் செய்யப்பட்டுள்ளன.

சமயப் போட்டிகளின் விளைவாகத் தத்தம் சமயச் சார்பான வழிபாட்டுப் பாடல்களும் சமயக் கருத்துப் புரட்சியும் உருவாகின. அவற்றை அவர்கள் விளக்கிப் பாடும்போது, தூய தமிழ்ச் சொற்களாலேயே அவர்தம் உள்ளத்து உணர்ச்சிகளைத் தெரிவிக்கத் தொடங்கினர்; பின்னர் தத்தமது சமயத் தத்துவக் கொள்கைகளை இணைத்துக் காவியங்களாகவும், பாசுரங்களாகவும் உருவாக்க முற்பட்ட போது, தத்தம் சமயத் தத்துவ பொதுச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்களில் தம் கருத்துகளைப் புலப்படுத்த விழைந்தனர். ஒரே வழி தத்தம் சமயத்திற்கே உரிய தனிச் சொற்களைப் பெய்ய

நேரிட்ட போது, தமிழ் ஒலி வடிவத்திற்கு ஏற்ப இயல்பாக அவைகளை மாற்றிக் கூறலாயினர்.

மொழியின் மொத்த உருவம் 'வழக்கும் செய்யுளும்' என்பது தொல்காப்பியக் கருத்தாக அமைந்திருக்கின்றது. நமது முன்னோர், மரபைப் போற்றி வருவதில் சங்க காலம், இடைக் காலம், நமக்கு முன்னுள்ள காலம் வரை யில் அவர்கள் எச்சமயத்தைச் சார்த்தவராக இருந்தாலும் கண்ணுங் கருத்துமாக இருந்து வந்துள்ளனர். ஆகவே, இலக்கியங்கள் இவ்வாறுதான் அமையவேண்டும் என்ற நியதிகள் இருந்து வந்துள்ளன. வட்டாரப் பேச்சு வழக்குகளை நாம் அனைவரும் கட்டுப்பாடாக அறிந்து, அவற்றிலுள்ள நல்ல சொற்களையெல்லாம் - காக்ஸ்டன் ஆங்கில மொழியைச் செப்பமுடையதாகச் செய்வதைப் போல - திரட்டி ஒழுங்குபடுத்தி, நயமாகத் திருத்தி பயன் பாட்டுக்குக் கொண்டு வந்தால், அவை இலக்கிய வழக்காக மாறிடும் சாத்தியக் கூறுகள் ஏற்படும். இதற்கு எதிராக வட்டாரத்திற்கு. வட்டாரம் வேறுபடும் வழக்குகளைப் பெருக்கிக்கொண்டே போவோமானால், அது தமிழை மேலும் சிதைந்து உருமாறிடச் செய்யும்.

ஆகவே, எல்லாப் பகுதி மக்களும் எல்லா வட்டார மக்களும் பொதுவாக உணரக்கூடிய சொற்களையும், தொடர்களையும், மரபுகளையும் மட்டுமே நாம் பேணிக் காக்க வேண்டும்; வேண்டாத தீமை பயக்கும் வழக்கு களையும் சொற்களையும் நீக்கிவிடவேண்டும். ஒரு வட்டார மக்களுக்கே உரிய - விளங்கக்கூடிய - சொற்களை யும் தொடர்களையும் கதைகளிலும் கட்டுரைகளிலும் கையாள்வதன் மூலம் எழுதுபவருக்கு அது எளிதாகவும் இயல்பாகவும் இருக்கலாம். ஆனால், மற்ற வட்டார மக்கள் அவற்றை படித்தறிந்து கொள்வதற்கு மிகும் தொல்லை தருவதாகவே அவை அமையும். அப்படிப் பட்ட செயலை வேண்டுமென்றே செய்வது அடாச் செயலாகும். இதனைக் கற்றறிந்தவர்களே உடனடியாகத்

தடுக்க முன்வரவில்லையானால், வட சொல் மிகுதியினால் தமிழ் கொடுந்தமிழாகி - கொடு மலையாளமாகி - மலையாளமாகிவிட்ட அவகேடு உண்டாகும். இனி இது எப்பகுதிக்கும் வரவேண்டாம். இந்த வரலாறு காட்டும் மொழிப் படிப்பினையை நாம் உணரவில்லையானால், நாம் தமிழ் படித்தும் தமிழ் ஆராய்ந்தும் பயனில்லை என்பதாகி விடும். வெறும் பிழைப்பிற்காகவா நாம் கொச்சையையும் வட்டார வழக்கையும் பயன்படுத்தி வரவேண்டும்? இதனால் சிலருக்குப் பிழைப்பு நடக்கலாம்; பணம் கிடைக்கலாம்; ஆனால், இதன் பின் விளைவோ தமிழுக்கு நம் முன்னோர் வழியைக் கடைபிடிக்காது கேடு சூழ்வதாகவே அமையும் என்பதை எவரும் மறந்துவிடக் கூடாது.

அச்சு வந்ததாலே, எஞ்சியிருந்த தமிழ்ச் செல்வங்களை முடிந்தவரை நம்மவர் அச்சடித்து நூலாகக் கொடுத்துள்ளனர். அவற்றை மேலும் மேலும் ஆராய்ந்து முன் பதிப்புகளைவிட நல்ல பாடங்களைத் தேர்ந்தெடுத்து, ஒப்பு நோக்கி, தமிழின் எழுத்தும் அச்சும் செம்மையாக அமைய நாம் அனைவரும் பாடுபடுவோமாக.

தமிழ் அச்சு, உலகப் போக்கில் பின்னடையாது நாம் முன்னேறச் செய்வோமாக!


Original pictograph
Pictograph in position of later cuneiform
Early cuneiform
Classic Assyrian
heaven god
earth
man
pudenda woman
moun-tain
woman slave-girl
head
mouth to speak
food
to eat
in
to drink
to go to stand
bird
fish
ox
cow
barley grain
sun



மை
உருளைகள்



நின்று சுழலும் உருளை அச்சுப்பொறி
(ஸ்டாப் சிலிண்டர்) பக். 202



இருசுழல் உருளை அச்சுப்பொறி (டூ ரெவல்யூஷன்) பக். 201

கல்லச்சுப்பொறி (லித்தோ)
பக். 187



எதிரிட்டு அச்சுப்பொறி (ஆப்ஸெட்)
பக். 203



அச்சடி பேக்சு

கணினி இயக்குதல்



நவீன கணினி

வண்ணத் தூவி அச்சு
(Inkjet Colour Printer)





மனிதனுக்கு இருதயம் போல கணினிக்கு வன்தட்டு
(Hard disc)



இந்நூலாசிரியர் முன்னாள் முதல்வரிடம்
முதல் பரிசு பெறுகிறார்.

72 பாதமல

60 இழுக்கத்

48 ர் மேன்மை கத்தி

42 னெய்துவ பிரசித்தி

38 அடைந்து இழுக்கத்தின்

36 ருரவோர் வாணிபத்தையும் பெ

28 டை னபொருள் என்பதைத் தெரிவிக்

20 இன்றிமறக்கப்பட்டிரு செய்து நம்நாட்டை முன்

16 நிலைமைக்கு கொண்டுவரத் தீ நமது நாட்டில் கைத்

12 பாதமல இழுக்கத் ர் மேன்மை கத்தினெய்துவ பிரசித்தி

10 அடைந்து இழுக்கத்தின் ஏதம்படு ஒழுக்கத்தி னெல்கா

8 ருரவோர் வாணிபதையும் பெருக்கி நாட்டை னபொருள் என்பதை

8 புள்ளி முதல் 72 வரை எழுத்தின் மாதிரி

புள்ளிமுறை விளக்கம்

12 புள்ளியிலிருந்து ஒரு புள்ளிவரை பருமனைக் காட்டும் படம்

ஒரு ‘எம்மின்’ சரியான அளவை

12 புள்ளி	11 புள்ளி	10 புள்ளி	9 புள்ளி	8 புள்ளி	7 புள்ளி	6 புள்ளி

10 புள்ளி அளவுள்ள அச்செழுத்தின் ஈயக் கட்டைகளும் இட நிரப்பிகளும்

1 2 3 4 5 6 7 8

1. மூன்று எம் குவாட் 2. இரண்டு எம் குவாட் 3. ஒரு எம் குவாட்
4. என் குவாட் 5. எம்மிற்கு மூன்று 6. எம்மிற்கு நான்கு
7. எம்மிற்கு ஐந்து 8. எம்மிற்கு ஆறு.

பக். 164-167, 170

ங ஒ மு மி து ே ா க ெ ை ந . , : -
று றி டு டி கு கி ட ண ப ம வ த பி பு வி வு
ஞு ணி லு லி சு சி ள ய ச ன ற ல யி யு ரி ரு ழி ழு
ஜு னி தி ! ? ’ ; ர ன் க் — … ர் ([* பூ ளி ளு
ன் ள் ழ் வ் ல் ய் ம் ப் ந் த் ண் ட் ஸ ஸ் ஸி ஸீ ஷ ஷ் ஷி ஷீ
க்ஷ க்ஷ் க்ஷி க்ஷீ அ இ உ எ ஒ ரு ணை னை ளை லை ற் ச்
ங் ் ு ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஹ ஹ் ஹி ஹீ ஞு 1 2 3 4 5 6 7 8 9 0
ணா றா க் ங் நி நு ஜ ஜ் ஜி ஜீ ஃ ௧ ௨ ௩ ௪ ௫ ௬ ௭ ௮ ௯ ௰ ா தூ
கீ ஙீ சீ ஞீ டீ ணீ தீ நீ பீ மீ யீ ரீ லீ வீ ழீ ளீ றீ னீ ஙி ஸ்ரீ
கூ ஙூ சூ ஞூ டூ ணூ தூ நூ பூ மூ யூ ரூ லூ வூ ழூ ளூ
றூ னூ ஞி ஞு ஷி ஹூ மீ உ ’ ’’ † §

அடங்கல் பட்டி

அச்சுப் பிழைதிருத்தக் குறியீடுகள்



தொடர்ச்சியாக வரச் செய்	
திருப்பிப் போடு	
இடநிரப்பியை அழுத்து	
மொக்கை எழுத்தை மாற்று	
நீக்கி விடு	
விட்டுபோனதைச் சேர்	
இடம் விடு	
[illegible] போல் செய்	
சிறிய இடநிரப்பியைப் போடு	
சொற்களை இணை	
இறங்கி இருப்பதைத் தூக்கு	
தூக்கியிருப்பதை இறக்கு	
வரியை நேர் செய்	
புள்ளியைப் போடு	
காற்புள்ளியைப் போடு	
அரைப்புள்ளியைப் போடு	
முக்காற் புள்ளியைப் போடு	
ஒற்றை மேற்கோள் குறி போடு	



	இரட்டை மேற்கோள் குறி போடு
	இணைப்புக் குறியைச் சேர்
[or]	இட அல்லது வலப்புறம் நகர்த்து
?	ஆசிரியரின் விளக்கம் தேவை
□	ஓர் 'எம்' இடநிரப்பி போடு
	ஓர் 'எம்' கோட்டைப் போடு
	இரண்டு 'எம்' கோட்டைப் போடு
¶	புதிய பத்தி பிரி
no ¶	பத்தி வேண்டியதில்லை
w.f.	தவறான எழுத்து
stet	அப்படியே இருக்கட்டும்
trs.	மாற்றி அமை
caps.	பெரிய தலைப்பெழுத்தைப் போடு
s.c.	சிறிய தலைப்பெழுத்தைப் போடு
l.c.	கீழ்வகுப்பு எழுத்தைப் போடு
ital	சாய்வெழுத்தைப் போடு
rom.	ரோமன் எழுத்தைப் போடு
b.o.	புரட்டிப்போடு



16 பங்குகள்கொண்ட முடிக்கப்பட்ட படிவத்தின் தோற்றம்



அச்சுக் கோத்தவற்றை முடுக்கப் பயன்படும்
இரும்புச் சட்டங்கள் (செஸ்).



ஆங்கில இரும்புக் காய்கள் (ஹெம்பல்)



படிவத்தை முடுக்க
உதவும் சாவி



மரக்காய்களைப் பிகுபடுத்தவும்தளர்த்தவும்
பயன்படும் கருவி (சூட்டிங் ஸ்டிக்)



மரக் கொட்டுப் பிடி (மாலட்)



மட்டப்படுத்தும் கட்டை (பிளானர்)

பக். 175



1. மர அச்சுக்கோப்பான். 2. பித்தளை அச்சுக்கோப்பான். 3. பித்தளை 'செட்டிங் ரூல்'. 4. அச்சுக்கோப்பானைப் பிடிக்கும் முறை (ப. 171), (ப. 172), 5. அச்சுக் கோத்ததை வைக்கும் தட்டு (ப. 173), 6. அச்சுக் கோத்த வரிகளைக் கட்டும் கயிறு (ப. 174), 7. எழுத்துக்களை எடுக்க உதவும் ஊசி (போட்கின்). 8. அச்சுத் தட்டுத் தாங்கி (ராக்கு). 9, சாமணம் (பின்சர்), 10. குத்தூசி (ட்விசர்) 11 ஈயச் செக்கைகளை வெட்டும் கருவி (லெட் கட்டர்).



ஈப்புரு கையேட்டுச் சுருணையும், கிரேக்க கோடக்ஸும்



அரிக்கமேடு பழந்தமிழ் எழுத்துகள்



மொகஞ்சதாரோ
சின்னமும் எழுத்தும்

குகை ஓவியம் : பழங்கால மனிதன்
தடியுடன் நிற்கும் காட்சி



சீனக் களிமண் முத்திரை

சீன அரக்கு முத்திரை



கல்லச்சிலிருந்து நகல் எடுத்தல்



ஓலைச்சுவடியும்
எழுத்தாணியும்



சீட்டு அட்டைகள் : இடமிருப்பது பிரஞ்சு நாட்டினையும், மையத்தின் மேலிருப்பது சீன நாட்டினையும். அதற்குக் கீழே இந்திய நாட்டினையும், வலமிருப்பது போர்ச்சுகல் நாட்டினையும் சேர்ந்தவையாகும்.



சீனப் பீங்கான் அச்செழுத்துகள்



வைர சூத்திரம்: உலகத்திலேயே மிகப் பழமையான மரவுருவத்தினாலான அச்சுப்படியைக் கொண்டு கி.பி. 868-ல் அச்சடிக்கப்பட்ட முதல் நூல்.



தலைக்கட்டை, வால்கட்டை மரத்துண்டுகள்
(பிரஸ் பர்னீச்சர்)
பக். 175



எழுத்துக்களைத்
துடைக்க உதவும்
தூரிகை (பிரஷ்)



நகல் எடுக்கும் பொறி
(ப்ரூப் பிரஸ்)

மைக்கத்தி



மை தடவப் பயன்படும்
உருளை



படிவத்தை வைத்து முடுக்கப் பயன்
படும் கல்லும் (ஸ்டோன்) தாங்கியும்

அச்சுக்கூடப் பொருள்கள்



பலவகையான அச்சறைகள்



அச்சறைத் தாங்கி



மூடப்பட்ட
அச்சறைத் தாங்கி

பக். 168–169

பலவகை அச்சுப் பொறிகள்



பழங்கால அச்சுப்பொறி
பக். 199



தட்டச்சுப்பொறி (கிளி பிரஸ்)
பக். 200



தட்டச்சுப் பொறி (பிளேட்டன்)
பக். 200



தானே இயங்கும் பொறி
(ஹைடல்பர்க் ஆட்டோமாடிக்)
பக். 202

பக்க அளவுகள்

	அங்குலம்	செ.மீ.
பூல்ஸ்காப்	13½" X 16½"	34.5 X 41.5
கிரவுன்	15" X 20"	38 X 51
டிம்மி	17½" X 22½"	44.5 X 57
மீடியம்	18" X 23"	45.5 X 58.5
டபுள் பூல்ஸ்காப்	17" X 27"	43 X 69
ராயல்	20" X 30"	51 X 76
டபுல் கிரவுன்	20" X 27"	51 X 69
இம்பீரியல்	22" X 30"	56 X 76
டபுள் டெம்மி	22½" X 35"	57 X 89
டபுள் மீடியம்	23" X 36"	58.5 X 91
டபுள் ராயல்	27" X 40"	69 X 102
டபுள் இம்பீரியல்	30" X 44"	76 X 112

24 தாள்கள்	*1 குயர்*
20 குயர்கள்	*1 கட்டு (ரீம்)*
16 கட்டு (ரீம்)	*1 சிப்பம் (பேல்)*

கி.பி. 1557-ல் அச்சான தம்பிரான் வணக்கம்


சவ்வதுககுமவலலவருமாய அநாதியாயி
ருககிறவருமாயயெஙகுமநிறைநதிருக
கிறவருமாயிருககிற
பராபரவஸது
வானவா
பழயகாலததிலெபூமணடலததிலெயிரு
நதுதிருவிளமபததினசததியமான
வேத
பொஸதகததின
முதலாமபகுபபு
அதிலெ
[illegible]

கி. பி. 1723-ல் தமிழில் வெளியான முதல் விவிலிய நூல்

ஜான் கூட்டன்பர்க்கு

வில்லியம் காக்ஸ்டன்

சாது சை. இரத்தின செட்டியார்
(சென்னை ரிப்பன் அச்சகம்)

ச.பவானந்தம் பிள்ளை
(பவானந்தர் கழகம்)

1812-ல் அச்சான திருக்குறள் மூல பாடம்



தொண்டை மண்டலம் என்பது தாமிழி எழுத்துகளில்
(மாதிரி)



ஷை வட்டெழுத்துகளில் (மாதிரி)



ஷை தமிழ் எழுத்துகளில் (மாதிரி)



ஷை கிரந்த எழுத்துகளில் (மாதிரி)



தஞ்சைப் பெரிய கோயிலில் காணப்படும் கல்வெட்டெழுத்து



தொல்காப்பிய ஓலைச்சுவடி : மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை தம் கைப்பட எழுதிய தன் ஒரு பகுதி.



வீரமா முனிவர் எழுதிய 'கொடுந்தமிழ்' என்ற நூலுக்காக 22-2-1799-ல் எழுதப்பட்ட காகிதப் பிரதியின் ஒரு பகுதி; உயிர் வரிசையும் மெய்வரிசையும் காணலாம்.

வீரமா முனிவர்



பழங்கால அச்சுப் பொறியும், அதை இயக்கிய விதமும்,
அச்சுக்கூடமும்.



1555-ல் லிஸ்பனில் வெளியான
கார்ட்டில்லா எனும் ரோம
வரிவடிவில் அச்சிடப்பட்ட
தமிழ் நூல்



கோவாவிலிலும் சொல்லத்
திலும் உருவாக்கப்பட்ட
தமிழ் அச்செழுத்துகள்